AstroVed

# சத்வித்யா

மாலை: 1 மலர்: 30

எஸ்பி -75, சிட்கோ தொழில்துறை எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600058.

ஆன்மீக விஞ்ஞான இதழ்

இணையதளம் வாயிலாக மாதம் ஒரு முறை வெளிவரும்



வீட்டில் பின்பற்ற வேண்டிய ஆன்மீக குறிப்புகள்

எதிரிகளையும் தன் வசப்படுத்தும் சிவதூதி எந்திரம்

விரும்பும் பதவி அருளும் ஸ்ரீ ராமர் திருக்கோயில்

## ஹனுமன் சாலிசாவை உச்சரிக்க கடன் சுமை குறையும்

அனைத்து இதழ்களையும் AstroVed.com இணையதளத்தில் இலவசமாக டவுன்லோடு செய்து பயன் பெறலாம்

மேலும் விபரங்களுக்கு போன்: 88702 88701, www.astroved.com



போன ஜென்மத்தில் நாம் என்ன செய்து கொண்டிருந்தோம் என்ன நினைத்துக் கொண்டிருந்தோம் என்பதை அறிவதும் அறிவியல் தான! நினைவுத் திறன் அதிகமாக பரப்ப பட்டதாக இருந்தால் தான் நமது முற்பிறவி பற்றி அறிய முடியும். புத்தர், கடவுளே இல்லை என்றவர் ஆனால் முற்பிறவி என்பது உண்டு என நம்பினார். ஒரு விளக்கை ஏற்றினால், அதைக்கொண்டு அடுத்தது அதிலிருந்து இன்னொன்று என பல விளக்குகளை தொடர்ச்சியாக ஏற்ற முடியும். இப்படித்தான் கடந்து போன பிறவியின் நினைவுகள் நம்மை தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. ஆகையால் தான் பல பிரச்சனைகள் நம்மை தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. அடுத்து ஏற்ற முடியாமல் ஒரு விளக்கு அனைவதைப் போல் நமது மூளை முற்பிறவி நினைவுகளை எப்போது மறந்து, புதிய சிந்தனை பிறக்கிறதோ அப்போது தான் நமது பிரச்சனைகள் மறந்து புதிய வாழ்கை, புதிய பாதை பிறக்கும்.

Dr. Baskaran Pillai




அருமை “சத்வித்யா“ வாசகப் பெருமக்களே!

சித்திரை பிறக்கவிருக்கும் தருணம். கோடை வெயில் முத்திரை பதிக்கத் தொடங்கி விட்டது. இதே நேரத்தில் மனங்களில் மகிழ்ச்சியையும் குளிர்ச்சியையும் கூட்ட சித்திரை முழுநிலவும் நம்மை தாலாட்ட வருகிறது. புன்மைகள் நீங்க சித்திரையை வரவேற்போம்.

“போரில்லா உலகு“ தான் உயரிய அறிஞர்களும் மேதைகளும் எதிர்நோக்கிய உலகு.

முதல், இரண்டாம் உலகப்போர்களின் தாக்கம் இன்னமும் அதன் அழிவு அடையாளங்களை நம்மிடையே விட்டுச் சென்றுள்ளது. இன்றைய நிலையில் ஏவுகணை, அணுகுண்டு என்னும் விஞ்ஞானப் போர் எப்படி இருக்கும் என்பது இன்றைய தலைமுறையினர் அறிந்திருக்க வாய்ப்பில்லை.

இந்த வாய்ப்பை இன்றைக்கு ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறது ரஷ்யா! உக்ரைன் மீது தானே போர் என்று நினைத்தால் அங்கு மருத்துவம் படிக்கச் சென்ற மாணவர்கள் பாதிக்கப்படும் சூழ்நிலை பதட்டத்தை ஏற்படுத்தியது. இறைவனின் அருளால் சிற்சில இழப்புகளோடு தாயகம் திரும்பிய மாணவர்களை இதமுடன் வரவேற்போம்.

இரு நாடுகளுக்கும் நடக்கும் இப்போரில் யாருக்கு ஆதரவு தருவது என்பதை விட, போரில் பாதிக்கப்பட்டவர்களுக்கு யார் ஆறுதல் தருவது என முடிவு எடுப்போம்! இந்த சிறு பொறி பெருந்தீயாய் மாறி, அதாவது உலகப்போராய் மாறக்கூடாது. சண்டை ஓயட்டும்! சமாதானம் நிலவட்டும்.

இறைவனை வேண்டுவோம்.

அன்புடன்
(அச்சிட்டு வெளியிடுவோர்)
ஆஸ்ட்ரோவேட்.காம்

அன்புடன்
Astroved.com

அன்பு சத்வித்யா வாசகர்களே! இதுவரை இணையதளத்தில் வெளியாகி, எல்லையில்லா ஆன்மீக செய்திகளை அள்ளித் தந்து கொண்டிருக்கும் நமது சத்வித்யா இணையதள மாத இதழ், வாசகர்களின் வேண்டுகோளுக்கிணங்க விரைவில் புத்தக வடிவில் உங்கள் கரங்களில் தவழவிருக்கிறது என்பதனை பெரு மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறோம்.

என்றென்றும் உங்கள் ஆதரவை வேண்டும், Astroved.com மாத இதழ்



# ஏப்ரல் மாத காலண்டர் – 2022

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|
| | | | | | 1 | தெலுகு புத்தாண்டு 2 |
| 3 | 4 | சதுர்த்தி 5 | 6 | ஷஷ்டி 7 | 8 | 9 |
| ஸ்ரீ ராம நவமி 10 | 11 | ஏகாதசி 12 | 13 | பிரதோஷம் 14 தமிழ் புத்தாண்டு | புனித வெள்ளி 15 | பவுர்ணமி 16 சித்ரா பௌர்ணமி |
| 17 | 18 | சதுர்த்தி 19 | 20 | 21 | ஷஷ்டி 22 | 23 |
| 24 | 25 | ஏகாதசி 26 | 27 | பிரதோஷம் 28 | 29 | அமாவாசை 30 |

# விரும்பும் பதவி அருளும்

# ஸ்ரீ ராமர் திருக்கோயில்

~ ஆரூரன்



**தசரத இராம பிரான் சம்பந்தப்பட்ட ஒரு திருக்கோயில் ஊட்டத்தூர் எனும் தலமாக விளங்குகிறது. திருச்சி சென்னை நெடுஞ்சாலையில் பாடலூர் என்ற ஊர் 42வது கி.மீ.தூரத்தில் உள்ளது. அங்கிருந்து 3வது கி.மீ. தூரத்தில் ஊட்டத்தூர் அமைந்துள்ளது. திருச்சியிலிருந்து அவ்வூர் செல்ல பேருந்து வசதிகள் உள்ளன.**

ஊட்டத்தூர் சிறப்புப் பெற்று விளங்க காரணம், தசரத ராமன் இலங்கையில் வெற்றி பெற்று, தன் சாபம் நீங்க, ராமேஸ்வரம் உள்ளிட்ட தலங்களில் லிங்கப் பிரதிஷ்டை செய்து, பூஜித்து அயோத்தி திரும்பும் வழியில் ஊட்டத்தூர் வந்து சேர்ந்தார் அனைவருடனும். அவர் புறப்பட்ட இடத்திலிருந்து அயோத்தி செல்லும் வழியில் இவ்வூர் ஊடாக அதாவது இடையில் இவ்வூர் இடம்பெற்றதால் காரணப்பெயராக ஊடத்தூர் என அழைக்கப்பட்டது.

நாளடைவில் மக்கள் வழக்கில் அது ஊட்டத்தூர் ஆகிவிட்டது. இன்னொன்றும் அவ்வூர் அழைக்கப்படுவதற்கு காரணம் சொல்லப்படுகிறது. சீதை மணல் லிங்கம் உருவாக்க பூமியை தோண்டுகையில் குபுகுபுவென அதிலிருந்து நீர் பெருக்கெடுத்து மேலே வந்ததால் "ஊற்றத்தூர்" என பெயரிடப்பட்டதாகவும், பிறகு அது "ஊட்டத்தூர்" என மாறிவிட்டதாயும் கூறப்படுகிறது.

சுவாரசியமான தல வரலாற்றை இத்தலம் கொண்டுள்ளதை பார்க்கலாம்.

முன்பே சொன்னபடி, இராமர் தான் ஊட்டத்தூர்



வந்து சேர்ந்தவுடன், லிங்கப் பிரதிஷ்டை செய்வதற்கான லிங்கம் தேடி, அவர் லட்சுமணனுடன் கிளம்பினார். பிராட்டி சீதையை ஒரு வில்வ மரத்தினடியில் உட்கார வைத்து பிறகு, அவளுக்குத் துணையாக ஆஞ்சநேயரை விட்டுவிட்டு அவர் புறப்பட்டுப்போனார்.

அப்போது நடந்து வந்த அசதி காரணமாக சீதை தான் அமர்ந்த மரத்தின் கீழ் படுத்து கண்ணயர்ந்து போனாள்.

அப்போது பிராட்டிக்கு வந்த கனவில், தன் கணவர் பட்டாபிஷேக ராமராக அவளுக்கு காட்சியளித்ததைக் கண்டு பதறிப் போனாள்.

லிங்கம் தேடி சென்ற கணவர் வர தாமதமாகிவிட்டதாக சீதை கருதி, அனுமனிடம் சிவபூஜை நேரம் நெருங்கிவிட்டது. எனவே "நீ போய் சிவலிங்கம் தேடி எடுத்து வருக" என ஆக்ஞையிட, அவர் உடனே அங்கிருந்து விரைந்து சென்றார்.

லிங்கம் தேடச் சென்ற அனுமன் ரொம்ப நேரம் ஆகிவிட்டதாகக் கருதிய பிராட்டி அங்கேயே பூமியைத் தோண்டி வந்த நீர் எடுத்து மணலால் சிவலிங்கம் ஒன்றை உருவாக்கி பூஜித்தாள். அப்போது சிவபிரான் காட்சியளித்து

"என்ன வேண்டும்?" என பரிவுடன் கேட்டார். அதற்கு சீதை தன் கணவர் ராவணனுடன் செய்த போரில் பல உயிர்சேதம் ஏற்பட்டதால் உண்டான சாபம் நீங்க வரம் கூறியதுடன், அவர் அணிந்து சென்ற துறவறம் விரைவில் நீங்க வேண்டும் என கோரிக்கைகள் விடுத்தாள்.

அதனை ஏற்றுக் கொண்டதை காட்டும் வகையில் ராமரை பட்டாபிஷேக கோலத்தில் சீதாபிராட்டிக்கு காட்டியருளினார் பரமேசுவரன். பிறகு சிவன் மறைந்து போனார்.

நடந்தவற்றை பிராட்டி நினைத்து அசைபோட்டு ஆனந்தமுடன் இருக்க, இராமர் தம்பியுடன், பூஜா திரவியங்களுடன் வந்து சேர்ந்து விட்டார்.

நடந்த விஷயங்களை ஒன்று விடாமல் தன் மனைவி சொன்னதைக் கேட்டு ராமரும் மகிழ்கிறார்.

அச்சமயம், லிங்க உருத் தேடி வெளியில் சென்றிருந்த அனுமன், காசி சென்று கிடைத்த ஒரு லிங்கமுடன் வந்து சேர்ந்துவிட்டார்...

சீதை முன்பே பூமியில் தோண்டியிருந்த பள்ளத்திலிருந்து அப்போதும் ஜலம் ஊறிக்கொண்டிருந்தது.

அதனைப் பயன்படுத்தி, இராமர் அச் சிவலிங்கத்தை அதன் அருகிலேயே பிரதிஷ்டை செய்து பூஜித்தார்.

இதற்கிடையில் இராமருக்கு தன் தம்பி பரதனின் நினைவு வந்தது. ஒரு சமயம் தான் இருக்குமிடத்திலிருந்து, அயோத்தி செல்வதற்குள் அவன் முடிவு செய்திருந்தபடி "தீக்குளித்து விட்டால்!" என.

ஆகவே இராமர் அனுமனிடம் நீ முன்னே விரைந்து சென்று "நாங்கள் விரைவில் வந்து விடுகிறோம் எனச் சொல்" என கட்டளையிட, அனுமன் உடனே வானில் ஏகினார்.

அப்போது அங்கே கயிலை வாசன் காட்சியருளி, "விரைவில் பட்டாபிஷேக

ராமராக ஆகப்போகும் நீங்கள், இவ்வூரார் அயோத்திக்கு வந்து அதனைக் காண இயலாத நிலையில் அக்கோலத்தை அனைவரும் தரிசிக்க, இங்கேயே இப்போதே அக்காட்சி இடம் பெறட்டும்" எனக்கூற, அக்காட்சியை இராமர் உடனே அரங்கேற்றினார்.
அக்கோலத்திலேயே இராமர் ஊட்டத்தூர் பெருமாள் ஆலயத்தில் இன்றும் காட்சியருள்கிறார்.

இதர பெருமாள் ஆலயங்களில் காணப்படும் கோபுரம், கொடிமரம் ஊட்டத்தூர் பெருமாள் ஆலயத்தில் இல்லை.
கோயில் வாயில் கடந்து உள் செல்ல இராமர் சந்நிதி பார்த்து நிற்கும் கருடாழ்வாரை சேவித்துக் கொள்ளலாம்.

அவருக்குப் பின் பக்கம் காட்சி தரும் ஆஞ்சநேயர், அயோத்திக்கு சேதி சொல்ல பறக்க ஆரம்பிக்கும் தோரணையில் ஆலய வாயிற்புறம் பார்த்தவாறு நிற்பார்.

கருவறை இராம பட்டாபிஷேக காட்சியை தரிசிக்கும் முன்பாக அச்சன்னிதி செல்லும் வழியில், இராமானுஜர், விஷ்வக்சேனர், நம்மாழ்வார், தும்பிக்கை ஆழ்வார் இவர்களை வணங்கிக் கொள்ளலாம்.

மன்னன் குலோத்துங்க சோழன் மணிமுடி சூட்டியதின் நினைவாக அமைக்கப்பட்டு, பிற்காலத்தில் விஜய நகர மற்றும் நாயக்க மன்னர்களால் விரிவாக்கம் செய்யப்பட்ட இத்திருக்கோயில் விசாலமாக, கோயில் தூண்கள் அமைக்கப்பட்டு சிறப்பாக காட்சி தருகிறது.
இங்குள்ள கல்வெட்டு செய்தி மூலம் மன்னன் இரண்டாம் ராஜராஜன் ஊட்டத்தூரை தேவதானமாக வழங்கியுள்ளதை அறிய முடிகிறது.

இராமர் சன்னிதி கருவறையின் மேல் இருதள நாகர விமானம் அமைந்து எழிலூட்டுகிறது. உள்ளே நடுநாயகமாக வில்லேந்திய கோலமும், அருட் புன்னகையும் பூண்டு எளிமையாக இராமபிரான் காட்சியளிக்க அவரது வலப்பக்கம் தம்பி லட்சுமணன் வில்லோடும், இடப்புறம் பிராட்டி சீதை கையில் மலர் ஏந்தியும் இருக்க, அந்த தரிசனம் எவரையும் பரவசத்தில் ஆழ்த்தி விடும்!
தாங்கள் விரும்பும் பதவி பெறவும், இழந்த பொருட்களை மீண்டும் பெறவும், பிரார்த்தனை செய்துகொண்ட பக்தர்கள் "வில்வச்சிட்டி விளக்கு பிரார்த்தனையை செய்கிறார்கள்.
அதனை நிறைவேற்றும் வகையில் பக்தர்கள் வில்வ இலையில் சிட்டி விளக்கு செய்து அதில் நெய் தீபமேற்றுவார்கள்.

இங்கு இராமர் விரும்பி ஏற்று காட்சிதரும் பட்டாபிஷேகக் கோலத்தில் அருட் காட்சி தருவதால் ஊட்டத்தூர் எல்லையை சனிபகவான் நெருங்க மாட்டான் எனக் கூறப்படுகிறது.
முன்பே பாதசனி, கண்ட சனி, அர்த்தாஷ்டம சனி, ஜன்ம சனி இவற்றால் பாதிப்புக்கு உள்ளானோர், ஊட்டத்தூர் பெருமாள் ஆலய வெளிப்புறம் நல்லெண்ணெய் தீப வழிபாடு செய்துவிட்டு பின்பு ஆலயம் உள்ளே வந்து பெருமாள் தரிசனம் செய்து விட்டால், சனியின் தாக்கம் இளகி விடும் என்ற நம்பிக்கை பக்தர்களுக்கிடையே உண்டு.

இதுதவிர அமாவாசை தினத்தில், இராமேஸ்வரம் சென்று பித்ரு கர்மாக்களை செய்ய இயலாதவர்கள் ஊட்டத்தூர் சென்று இங்குள்ள ஆற்றங்கரையில் உரிய கர்மாக்கள் செய்துவிட்டு, பட்டாபிஷேக கோல ராமர் தரிசனம் பெற்று விட, பித்ருதோஷம் நீங்கிவிடும் என்ற ஐதீகமுள்ளது.

பௌர்ணமி, புனர்பூச நட்சத்திர தினம் (குறிப்பாக பங்குனி புனர்வசு) அனைத்து விஷ்ணுபதி புண்ணிய நாட்கள், தமிழ்ப் புத்தாண்டு தினம், ஆடிப்பிறப்பு, புரட்டாசி சனிக்கிழமைகள், மகாளயபட்ச தினங்கள், ஐப்பசி மாத முதல் நாள், கார்த்திகை தீப விழா நாள், அனுமத் ஜயந்தி, வைகுண்ட ஏகாதேசி, தைப்பொங்கல், மாசி மகா புண்ணிய தினம், பங்குனி உத்திர நாள் இவை வரும் நாட்களில் பெருமாள் கோயிலில் விசேட அபிஷேக ஆராதனை பெரும் மக்கள் திரள, நடந்து வருவது குறிப்பிடத்தக்கது.

தினசரி காலை 7 மணி முதல் பிற்பகல் 1 மணி வரையும், மாலை 4 மணி முதல் இரவு 8 மணி வரையும், பக்தர்கள் ஊட்டத்தூர் இராமபிரானை தரிசித்து மகிழ முடியும்!

# வீட்டில் பின்பற்ற வேண்டிய ஆன்மீக குறிப்புகள்

1. வீட்டின் வாயிலில் பச்சரிசி மாவில் கோலம் போட வேண்டும்.
2. பச்சரிசி மாவில் கோலம் போட சனி பகவானின் கொடுர குண தாக்கங்கள் குறையும்.
3. பச்சரிசி மாவில் கோலத்தை ஆலமர அல்லது அரசமர வினாயகர் சன்னிதியில் போடுவது அற்புத பலன்களை தரும்
4. வீட்டில் நவக்ரஹ படம் இருத்தல் கூடாது.
5. பூஜை அறையில் குல தெய்வ படம் இருத்தல் அவசியம் மற்றும் நன்று.
6. வீட்டின் பூஜை அறையில் இருவேளை விளக்கேற்றி தூப வழிபாடு செய்ய வேண்டும்.
7. இறைவன் படங்களுடன் வீட்டின் முன்னோர்கள் படங்கள் வைத்து வழிபட கூடாது
8. வருடத்தில் ஒரு முறையாவது குல தெய்வ வழிபாடு செய்ய வேண்டும். குறைகளை தீர்க்க ஓடி வரும் தெய்வம் குல தெய்வமாகும்.
9. வீட்டின் முகப்பில் வினாயக பெருமான் படம் இருக்க வேண்டும்.
10. மேற்கு வாசல் இருக்கும் வீட்டில் வசிப்பதை தவிர்க்கவும். வேறு வழியின்றி வாழும் நிலை வருமாயின் வாஸ்து கணபதி படம் வைத்து வழிபடுவது நன்மையை வழங்கும்.



# கடன் தொல்லைகளில் இருந்து விடுபட எளிய லால் கிதாப் பரிகாரங்கள்

### கடன் பிரச்சனை தீர பரிகாரங்கள்:

**மனிதன் அன்றாடம் சந்திக்கும் பிரச்சனைகளில் கடன் தொல்லை என்பது மிகப்பெரும் பிரச்சனையாக இன்றைய காலகட்டத்தில் திகழ்கிறது. கடன் பிரச்சனைக்காக தற்கொலை செய்யக்கூடிய அளவிற்கு செல்லும் குடும்பங்களையும் இக்காலகட்டங்களில் பார்க்க முடிகிறது. எந்தவிதமான கடன் பிரச்சனையாக இருந்தாலும் லால் கிதாப் எனும் புத்தகத்தில் பரிகாரங்களாக கொடுக்கப்பட்டுள்ளது. அவ்வாறு கொடுக்கப்பட்டுள்ள பரிகாரங்கள் சிலவற்றை கீழே காண்போம்.**

1. தினமும் வீட்டை விட்டு வெளியேறுவதற்கு முன்பாக சுத்தமான பசு நெய்யை ஐந்து கிராம்புகளின் மீது ஊற்றி தீயை பற்றவைத்து எரித்து கொள்ளவும். எரித்த சாம்பலை நெற்றியில் திலகமாக வைத்துக்கொள்ளவும். இது கடன்களை அடைக்க மிகச்சிறந்த பரிகாரமாகும்.

2. இந்து சமயத்தின்படி விநாயகர் மங்களகரமானவராக கருதப்படுகிறார். எனவே எந்த வேலையை தொடங்கும் போதும் விநாயகர் பூஜையுடன் புதிய வேலைகளை தொடங்குமாறு அறிவுறுத்தப்படுகிறது, இதனால் நீங்கள் உங்கள் வேலையில் வெற்றியையும் செல்வ செழிப்பையும் பெறுவீர்கள்.

3. ஒவ்வொரு செவ்வாய்கிழமையும், பகவான் ஹனுமானுக்கு ஆரத்தியை காட்ட வேண்டும். ஹனுமன் சாலிசாவை உச்சரிக்க வேண்டும். அவ்வாறு உச்சரிக்கும் போது சில கிராம்புகள் மீது சிறிது செக்கு நல்லண்ணெயை ஊற்றி எரிக்க வேண்டும்.

4. கழுகு கூட்டில் இருந்து ஏழு கழுகு இறகுகளை எடுத்து பணம் வைக்கும் பெட்டியில் வைக்க வேண்டும். இது கடினமான வேலையாக இருந்தாலும் செல்வ செழிப்பை கூட்டும் மிகச்சிறந்த பரிகாரமாக பார்க்கப்படுகிறது.

5. வியாழக்கிழமை அன்று குங்குமம் வாங்கி அந்த குங்குமத்தை வீட்டு அருகில் உள்ள மகாலட்சுமி கோவிலில் கொடுத்து வணங்கிவிட்டு வரவும். இந்த பரிகாரத்தை தொடர்ந்து பதினோரு வெள்ளிக்கிழமைகள் செய்துவர தன வரவு அதிகரித்து கடன் சுமை குறையும்.

6. புளிய மரத்தின் சிறிய கிளையை உடைத்து பணம் அல்லது தங்க நகைகள் வைக்கும் பெட்டியில் வைக்கவும்.

மேலே சொல்லபட்டிருக்கும் பரிகாரங்கள் கடன் சுமைகளை அடைப்பதற்கு மட்டும் அல்ல நமது செல்வசெழிப்பை அதிகபடுத்தி சகல சௌபாக்கியங்களையும் அடைவதற்குமான எளிய பரிகாரங்கள் ஆகும்.



# மூலிகைகள் கொண்ட சத்துக்கள்!

உலோக சத்துக்களைக் கொண்ட பல மூலிகைகள் இன்று மனிதன் சந்திக்கும் பல நோய்கள் குணமாக நாட்டு வைத்திய முறையில் பயன்படுத்தப்படுகின்றன. அவற்றுள் ஒரு சில இவை.

## தங்க சத்துள்ள மூலிகைகள்

சிவனார் வேம்பு, பூனைவணங்கி எனும் குப்பைமேனி, கற்றாமரை.

## வங்கச்சத்துள்ள மூலிகைகள்

சிறு கரந்தை, வெள்ளருகு, செருப்படை, ஆடாதொடை, இலந்தை, நல்வேளை.

## கருவங்கச்சத்துள்ள மூலிகைகள்

கீழாநெல்லி, தும்பை, துளசி, பொன்னாங்கண்ணி, தூதுவளை, தவசு முருங்கை

## நிமிளைச்சத்துள்ள மூலிகைகள்

வில்வம் மற்றும் புளியாரை

## தாமிரச்சத்துள்ள மூலிகைகள்

முள்ளங்கி, ஆவாரை, பொன்னாவாரை, புளியரணை, நீலி வேர், முசுமுசுக்கை, கோவை எனும் கொவ்வை, நந்தியா வட்டைப்பூ, ஆடுதீண்டாப்பாளை, அந்தரகருடன் என்கிற ஆகாச கருடன், புல்லுருவி, கரும் பசளை, வெள்ளைக்கோழியவரை, பாலை, பொடுதலை, அந்தரத்தாமரை, சித்திரமூலம், ஆல் ஆகியவைகள்.

இக்குறிப்புகள் பண்டைய வைத்திய நூல் ஒன்றில் குறிக்கப்பட்டுள்ளன.

# பெருங்கொடை வள்ளல் யார்?

**அன்று பகவான் கண்ணனும், பாண்டவ பீமனும் தனித்து உரையாடிக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது பீமன் "கண்ணா அந்த கர்ணனை பெரிய கொடையாளி என ஊரார் கொண்டாடுகிறார்கள். எங்கிட்ட கூட அளவற்ற செல்வமிருந்தால், நான் கூட தான் அள்ளி, அள்ளி கொடுப்பேன்" என மனக்குறையுடன் சொன்னான். அவனை புன்சிரிப்புடன் உற்றுநோக்கிய கண்ணன், "பீமா உனக்கேன் இக் கவலை? இதோ பார் நம் எதிரே காட்சியளிக்கும் இந்த மலையை பொன்னாக்கி விடுகிறேன். நீ கொண்ட ஆசைப்படி உன்னை யாசிப்பவர்களுக்கு வாரி, வாரி வழங்கி விடு" எனக் கூறியதோடு மட்டுமல்லாது தான் கொண்ட சக்தியால் சாதாரண கல் மலையை பொன்னாக்கி விட்டார் உடனேயே.**

சில தினங்கள் கடந்தன. பீமன் பலருக்கு பொன் தானமளிக்கும் விஷயம் எங்கும் பரவி விடவே, யாசிப்போர் பலர் பீமனை வணங்கி பொன் கட்டிகளை சுமந்து செல்லும் பாக்கியசாலியானார்கள்.



பீமனுக்கு இதில் அபார மகிழ்ச்சி, தானும் கர்ணனுக்கு இணையாகி விடுவதாய்! அந்தப் பொன்மலையில் இதுவரை கால் பாகம் மட்டுமே செலவாகியிருந்தது.

தற்செயலாக அப்பக்கம் வந்த கண்ணன் "என்ன பீமா! உனக்கும் கொடையாளி என்ற பெயர் வந்துவிடும் போலிருக்கிறதே! " என அர்த்த புஷ்டியுடன் சொன்னார். "ஆமாம்! ஆமாம் கண்ணா! எல்லாம் உன்னால் தான்" என பெருமையுடன் அந்தப் பாண்டவன்" பதில் சொன்னான்.

"சரி, பீமா! உனக்கு இந்த மலையை பொன்னாக்கி தந்தது போலவே, கர்ணனுக்கும், பக்கத்தில் உள்ள மலையை தங்கமலையாக்கி தந்துவிடுகிறேன்.

அவன் என்ன செய்கிறான் என பார்ப்போம்” என்று கூறிவிட்டு, அதை உடனே செயலாக்கிவிட்டார். அடுத்து கர்ணனை வரவழைத்த கண்ணன், தங்க மலையை அவனுக்கு பரிசளித்து விட்டார்.

கர்ணனை மட்டும் புதிய பொன்மலையில் விட்டுவிட்டு, பீமனை தன்னுடன் அழைத்துக்கொண்டு புறப்பட்டார் கீதையின் நாயகன்.

சுமார் 15 நிமிடங்கள் ஆகியிருக்கும். எதேச்சையாக கண்ணன் திரும்பிப் பார்த்தபோது, கர்ணன் பின்னால் தங்களைத் தொடர்ந்து வந்ததை கண்டு விட்டார். அவன் தன்னிடம் வந்தவுடன் ”கர்ணா? உனக்கு நீ கொண்ட இயல்பான விருப்பப்படி பெரிய பொன்மலையில் பலருக்கு தானம் வழங்க அளித்திருந்தும் அந்தப் பணியை செய்யாமல் இப்படி உடனே கிளம்பி விட்டாயே, என்ன விஷயம்” எனக்கேட்டார்.

அதற்கு கர்ணன் “ஐயனே! தாங்கள் எனக்கு அளித்த பொன் மலையை விட்டு அகன்ற சென்ற சில வினாடிகள் கழித்து ஒருவன் என்னிடம் வந்து “யாசகம்“ கேட்டான். அச்சமயத்தில் எனக்கு தோன்றியபடி” அந்தப் பொன் மலையையே எடுத்துக்கொள், சொந்தமாய் என தந்துவிட்டேன்” என ஆனந்தமுடன் பதிலளித்தார்.

அப்பொழுது பகவான் கண்ணன் பீமனைப் பார்க்க, அவன் முகத்தில் ஈயாடவில்லை” காரணம் - கர்வ பங்கம் தான்!




TURMERIC
& BLACK PEPPER

HI-HEALTH FORMULA

Navel Chakra & Detoxifier

Hi –health formula can be a solution for everyday health issues
Turmeric fights with free radicals & protects brain, heart and liver cells from ageing process

Call: 88702 88701

ஆஸ்ட்ரோவேட் ஜோதிடர் திரு. செந்தில் நாதன்

# எதிரிகளையும் தன் வசப்படுத்தும் சிவதூதி எந்திரம்

மனிதனாக பிறந்த நம் ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக இறையுணர்வுடன் கூடிய சூட்சும உடல் ஒன்று உண்டு. அந்த சூட்சும உடலுடன் நம்மை இணைக்கச் செய்து ஆன்மிக ஈடுபாட்டை ஏற்படுத்தி நம்மை நல்வழி படுத்தும் ஆற்றல் சப்தமி திதியை ஆளும் நித்திய தேவியான சிவதூதியிடமே உண்டு. சிவதூதி என்ற பெயருக்கு சிவனின் தூதுவர் என்று பொருள்படும். எவ்வளவு கொடிய எதிரியாக இருந்தாலும் அவருடன் சமாதானத்தை ஏற்படுத்தி இணைய வைக்கும். தன்னம்பிக்கை குறையும் பொழுது மனோ திடத்தை அதிகப்படுத்தி தன்னம்பிக்கையை அதிகரிக்கும் தன்மையும் இந்த சிவதூதி எந்திரத்திற்கு உண்டு. இது மட்டும் அல்லாமல் நமது கடமையை சரிவரச் செய்யவும், மன பதற்றத்தை தனித்து பொறுமையுடன் வாழ்வில் வெற்றி பெற உதவும் எந்திரமாக சிவதூதி எந்திரம் விளங்கிறது. பஞ்சபூதத்தில் இந்த தேவதை நிலத்தை குறிப்பதால், பூமி, நிலம், வீடு மற்றும் வாகனம் போன்ற இகலோக சுகங்களை அள்ளித்தரும் தெய்வமாக இந்த சிவதூதி நித்திய தேவி விளங்குகிறர்.

சிவதூதி தேவி எந்திரத்தை பூஜை அறையில் கிழக்கு அல்லது வடக்கு நோக்கி வைத்து, சந்தன குங்கும திலகமிட்டு தினமும் மல்லிகை மலர் கொண்டு பூஜித்து தீப தூப ஆராதனை காட்டி கீழே கொடுக்கப்பட்டிருக்கும் மந்திரத்தை 108 முறை கூறிவருவதால் மேன்மையான பலன்களை அள்ளித்தரும்.

### ஸ்ரீ சிவதூதி காயத்ரி மந்திரம்:

ஓம் சிவதூத்யை வித்மஹே  
சிவங்கர்யை தீமஹி  
தன்னோ நித்யா ப்ரசோதயாத்.





கீதா மணாளன்

# எவை எவற்றால் என்னென்ன பலன்?





மான் தோலை உடலில் அணிய பரிசாக கிடைப்பது நீண்ட ஆரோக்கிய ஆயுள்; இத்தோலை அணிபவர்களிடத்தில் ரோகம் நெருங்காது! தவிர அப்படியே ரோகம் வந்தாலும், அது சட்டென்று குணமாக்கி விடும் தன்மை கொண்டது.

புரச மரம் என்று வழக்கில் உள்ள பலாச மரம், அதனை தண்டமாக கொண்ட பிரம்மச்சாரிகளுக்கு நல்ல ஞாபக சக்தியையும், கூறப்படும் நல்ல விஷயங்களை அறிந்து கொள்ளும் திறனையும் அளிக்கவல்லது.

குஸம் என்று அழைக்கப்படும் தர்பை புல் நம் சித்தத்தை ஒருமைப்படுத்தும் ஒரு சாதனம்! பகவத்கீதையில், அர்ஜுனனை, "குஸ ஆசனத்தில் அமர்ந்து ஜெபம் செய்க!" என உபதேசித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

உருத்திராட்சை மாலையை வைத்துக்கொண்டு ஜபம் புரிந்தால் ஒன்றுக்கு 1000 மடங்கு ஜெபத்தின் சக்தி பெருகிவிடும். உருத்திராட்சம் அணிபவர்களிடம் நோய், நொடி பற்றாது. தவிர ஆரோக்கியமும் உத்திரவாதமாகிறது.


ஸமித்துக்களைக் கொண்டு அக்னியில் ஹோமம் செய்வதால், அத்தகையோருக்கு நல்ல திடகாத்திர உடம்பும், மனோபலமும், சித்த சுத்தியும், தெய்வ அனுக்கிரகமும் கிடைக்கும்.

காயத்ரீ மந்திரத்தை உச்சரித்தால் எத்தனையோ நற்பலன்கள் கிடைக்கப் பெறுவதோடு, எந்த இடத்தில் காயத்ரீ ஜபிக்கப் படுகிறதோடு, அந்த ஊரில் உள்ள குழந்தைகள் இறப்பதில்லையாம்!

இந்த உண்மைகள் "ஸ்ரீ நாராயணீயம்" நூலில் கூறப்பட்டுள்ளன.

நந்தினி ஸ்ரீராம்

# ராம்..ராம்..ராம்!



திருமால் எடுத்த பல அவதாரங்களில் மிகச் சிறப்பாக அனைவரும் கொண்டாடி மகிழ்வது ஸ்ரீராமாவதாரத்தை.
அயோத்தி சக்கரவர்த்தி தசரத ராஜனுக்கும், கவுசல்யா தேவிக்கும் மூத்த குமாரனாக பிறந்தவர் ஸ்ரீராமர்.

சித்திரை மாதம் நவமி திதியில் புணர்வசு என்கிற புனர்பூச நட்சத்திரத்தில், கடக லக்னம் கூடிய புண்ணிய நாளில் நடுப்பகலில் ஐந்து கிரகங்கள் உச்சத்தில் இருக்கும்போது உதித்த தசரத ராமனைப் போற்றும் வகையில் நடத்தும் விழாவே ஸ்ரீராமநவமி-

இந்த ஸ்ரீ ராமாவதாரம் கர்ப்போத்சவம், ஜனனோத்சவம் என்று இரு வகையில்

கொண்டாடப்படுகிறது.
அதாவது ஸ்ரீராம நவமிக்கு முன்பாக ஒன்பது நாட்கள் பிரதமை முதல் நவமி வரை ஸ்ரீராமாயண பாராயணம் செய்து கொண்டாடுவது ராவணன், கரண், தூஷணன், திரிசுரன், மாரீசன், சுபாகு, தாடகை, விராதன், கடந்தன் போன்ற அசுரர்களிடமிருந்து முனிவர்களையும், தேவர்களையும் காப்பாற்ற ஸ்ரீமகாவிஷ்ணு ஸ்ரீராம ராஜா அவதாரமாகப் போகிறார் என்று முன்பே தாங்கள் கொண்ட ஞான திருஷ்டி மூலம் தெரிந்து மகரிஷிகள் கௌசல்யையின் கர்ப்ப வாசத்தைக் கொண்டாடினார்கள். அதுதான் கர்ப்போத்சவம்.

ஜனனோத்சவம், ஸ்ரீராமர் பிறந்த நாளிலிருந்து ஒன்பது நாட்கள் ஸ்ரீ ராமாயண பாராயணம், ப்ரவசனமெனும் உபன்யாசங்கள் முதலியவைகளுடன் கொண்டாடப்படுவது ஆகும்.
ஸ்ரீராமர் இளம்பிராயத்தில் விசுவாமித்ர மகரிஷியுடன் வனத்திற்கு சென்றபோதும், பிறகு சீதா பிராட்டி, லக்ஷ்மணன் சகிதம் 14 ஆண்டுகள் வனவாசமாக, பெரும்பாலும் காட்டிலேயே வாழ்ந்ததால், வெப்பத்தைப் போக்க விசிறி தானம் செய்து நீர் மோர், பானகம் தானம் புரியும் வழக்கமுள்ளது அந்த ஸ்ரீராமநவமி புண்ணிய விழாவில்!
ஒரு சமயம், ஸ்ரீ வைகுண்டம் சென்று பெருமாளை தரிசித்த அஷ்டமி திதியும், நவமி திதியும், தங்கள் திதி வரும் நாளில் ஜனங்கள் நல்ல நிகழ்ச்சிகளை நடத்தாமல் ஒதுக்குவது மிக வருத்தத்தை தருகிறது எனக் கண்ணீர் விட்டதாம்!
அப்பொழுது அவர்கள்பால் இறங்கிய பகவான், “கவலை வேண்டாம்! உங்கள் இருவரையும் மக்கள் பூஜை செய்து கொண்டாடும்படி செய்கிறேன்” என வரம் தந்தாராம்.

அதன்படி பகவான் கோகுலாஷ்டமியில் ஸ்ரீ கிருஷ்ணராயும், ஸ்ரீ ராம நவமியில் ஸ்ரீராமராகவும் பிறந்து இந்த இரு திதிகளுக்கும் தக்கச் சிறப்பை தந்தருளினார் என புராணங்களில் கூறப்பட்டுள்ளது.

# ஜெய் ஸ்ரீராம்



மதுரை சாய் சந்திரன்



## மூலிகை வைத்தியம்

# நீரிழிவை கட்டுப்படுத்தும் மாவிலங்குப்பட்டை

மற்ற நாடுகளை விட இந்தியாவில் தான் அதிக அளவு சர்க்கரை வியாதி என்கிற நீரிழிவால் பாதிக்கப்பட்டுள்ளோர் இருப்பதாக கூறப்படுகிறது. அத்தகையவர்களுக்கு இனிப்பான செய்தி, மாவிலங்குப்பட்டை எனும் மரத்தின் இலை மற்றும் மரப்பட்டை, வேர் இவற்றுக்கு நீரிழிவைக் கட்டுப்படுத்தும் தன்மை உள்ளது என்பதுதான்!

CAPPARACEEAE என்ற குடும்ப வகையும், CRATAEVAMANGA என்ற தாவரவியல் பெயரையும் கொண்ட மாவிலங்குப்பட்டை மரம் சுமார் 6 முதல் 10 அடி வரை உயரும் இயல்பைக் கொண்டது. பஞ்ச வில்வங்களில் ஒன்றானது இது. வில்வம் போல் மும்மூன்று இலைகள் கொண்ட இம்மரத்தின் பழம் உருண்டை சைசில் அமைந்து கடினமாகவும் இருக்கும்.

மாவிலங்குப் பட்டை மரவேர் கூட மருத்துவ பயன் கொண்டதே. இதன் வேர் சேர்க்கப்பட்ட அஜ சிருங்கி தைலத்தை உள்ளுக்கு சாப்பிட்டு வந்தால் காது சம்பந்தப்பட்ட கர்ண ரோகங்கள் அகன்றுவிடும்.

முடிவாக, தக்க முறையில் மாவிலங்கு பட்டை, இலை, வேர் இவைகளை வைத்திய சாஸ்திரங்களில் கூறப்பட்ட முறைப்படி பயன்படுத்தினால், மாவிலங்கு பட்டை மரம் ஒரு சமய சஞ்சீவினி தான்!

# சுந்தர காண்டம்

சுந்தர காண்டம் என்று பெயர் சொல்வார் சுகம் தரும் சொர்க்கம் என்று கருத்தினில் கொள்வர்! கண்டேன் சீதையை என்று காகுந்தனிடம் சொன்ன கருணை மிகு ராமபக்தன் பெருமை இது.

அஞ்சனை தனயன் அலைகடல் தாண்டவே ஆயத்தமாகி நின்றார் ராமபாணம் போல் ராக்ஷஸர்மனை நோக்கி ராஜகம்பீரத்தோடு ராம தூதன் சென்றார்.

அங்கதனும் ஜாம்பவானும் அனைத்து வானரங்களும் அன்புடன் விடை கொடுத்து வழி அனுப்பினரே வானவர்கள் தானவர்கள் வருணாதி தேவர்கள் வழி எல்லாம் நின்று பூமாரி பொழிந்தனரே.



மைனாக பர்வதம் மாருதியை உபசரித்து மாருதியும் மைனாகத்தை திருப்தி செய்து ஸிஞ்சையை வெற்றி கொண்டு ஸிம்மியை வதம் செய்து சந்தோஷமாய் சமுத்திரத்தை தாண்டியே இலங்கை சேர்ந்தார்.

இடக்காகப் பேசிய இலங்கையின் தேவதையை இடக்கையால் தண்டித்தவன் இதயத்தைக் கவர்கிறான். அழகான இலங்கையில் அன்னை ஜானகியை அங்குமிங்கும் தேடியே அசோகவனத்தை கண்டார்.

சிம்புசுவா மரத்தடியில் ஸ்ரீராமனைத்தியானம் செய்யும் சீதாப்பிராட்டியைக்கண்டு சித்தம் கலங்கினார். ராவணன் வெகுண்டிட ராக்ஷஸசியர் கலங்கிட வைதேஹி அரண்டிட வந்தான் துயர் துடைக்க.

கணையாழி கொடுத்து ஜெயராமன் சரிதம் சொல்லி சூடாமணியை பெற்றுக் கொண்ட சுந்தர ஆஞ்சநேயர் அன்னையின் கண்ணீர் கண்டு அரக்கர்மேல் கோபம் கொண்டு அசோகவனத்தை அழித்து அனைவரையும் ஒழித்தார்.

பிரம்மாஸ்தரத்தினால் பிழைத்திட்ட ஆஞ்சநேயர் பட்டாபிராமன் தன் பெருமையை எடுத்துரைக்க வெகுண்ட இலங்கை வேந்தன் வையுங்கள் தீ வாலுக்கென்றான்! வைத்த நெருப்பினால் வெந்ததே இலங்கை நகர்.

அரக்கனின் அகந்தையை அழித்திட்ட அனுமனும் அன்னை ஜானகியிடம் அனுமதி பெற்றுக் கொண்டார் ஆகாய மார்க்கத்தில் அஞ்சநேயர் தாவிவந்தார் அன்னையை கண்டுவிட்ட ஆனந்தத்தில் மெய் மறந்தார்.

ஆறாத சோகத்தில் ஆழ்ந்திருந்த ராமனிடம் கைகூப்பி கண்டேன் சீதயை என்றார். வைதேஹி வாய் மொழியை அடையாளமாகக்கூறி சொல்லின் செல்வர் ஆஞ்சநேயர் சூடாமணியை அளித்தார்.

மனம் கனிந்து மாருதியை மார்போடு அனைத்த ராமர் மைதிலியை சிறை மீட்க மறுகணம் சித்தமானார் ஆழ்கடலில் அற்புதமாய் அணை கட்டி படைகள் சூழ அனுமனும் இலக்குவனும் உடன்வர புறப்பட்டார்.

அழித்திட்டான்; ராவணனை ஒழித்திட்டான்; அதரமத்தை அன்னை சீதாதேவியை சிறைமீட்டு அடைந்திட்டார்; அயோத்தி சென்று அகிலம் புகழ ஆட்சி செய்தார்; அவனை சரணடைந்தோர்க்கு அவனருள் என்றும் உண்டு.!

எங்கெங்கு ரகுநாதன் கீர்த்தனமோ அங்கெல்லாம் கரம் குவித்து நீர் சொரிந்து ஆனந்தத்தில் மூழ்கி கேட்கும் பரிபூரண பக்தனே, ஸ்ரீ ஆஞ்சநேயனே உன்னைப் பணிகின்றோம் பன்முறை உன்னைப் பணிகின்றோம், எங்கள் வாழ்வு வளம் பெருக, நலம் நல்க, மனம் மகிழ எங்களுக்கு என்றும் வரம் அளிப்பாய், உறுதுணையாய் இருப்பாய்.

# ஸ்ரீ ராமஜெயம்



ஆரூர். ஆர். சுப்பிரமணியன்

# ஆன்மீக கேள்விகளும் அர்த்தமுள்ள பதில்களும்...

### திருமால் எதனால் ஹம்சாவதாரத்தை எடுத்தார்?

ஒரு சமயம் பூமி, ஆகாயம் ஆகிய இரண்டு பகுதிகளிலும் எதனாலோ கடும் இருள் சூழ்ந்து விட்டது. தேவர்களும், சகல உயிரினங்களும் இதனால் தத்தளித்துப் போனார்கள். தன்னை தேவர்கள் வேண்டிக் கொண்டபடி, திருமால் 'அன்னம்“ உருவெடுத்து, பிரம்ம தேவனுக்கு வேதங்களை எடுத்துரைத்தவுடன் இருள் நீங்கி எங்கும் இயல்பான பழைய நிலையை திரும்பியது.

### பல்லாண்டு, பல்லாண்டு என்று தொடங்கும் முழு பாட்டு வேண்டும்.

சாற்றுமுறை பாசுரம்

“பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு பலகோடி நூறாயிரம்

மல்லாண்ட திண்டோள் மணிவண்ணா உன் சேவடி செவ்வி திருக்காப்பு

அடியா மோடும் நின்னோடும் பிரிவின்றி யாயிரம் பல்லாண்டு

வடிவாய் நின் வலமார்பினில் வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு

வடிவார் சோதி வலத்துறையும் சுடராழியும் பல்லாண்டு

படை போர் புக்கு முழங்கும் அப் பாஞ்சசன் னியமும் பல்லாண்டே!”

### நமது தெய்வ வடிவங்கள் உணர்த்துவது எவை?

பக்தியின் அம்சமே விநாயகர் (Devotion).

மனோசக்தியை குறிப்பது சிவலிங்கம் (Will Power).

அன்பு என்பதை எடுத்துக் காட்டுதலை (Love) விளக்குவதே அம்மாள் / தேவி / தாயார் ஆகியோர்.

பதி ஞானத்தை (Wisdom) வெளிப்படுத்துவார் தட்சிணாமூர்த்தி.

அழகை பரிமளிக்கச் செய்து எடுத்துக் காட்டுவார்தாண்டவர் (Harmony)

பாச அறிவை சுட்டிக்காட்டுவார் கந்தவேள் (Occult Science)

கிரியை சக்தியை விவரித்தல் காலபைரவர் (Ceremonial Magic).

மனித வாழ்வின் வெவ்வேறு வகை உணர்வுகளுடன் ஒன்றிப் போவதே தெய்வீகம்.

### பாணினி சூத்திரத்தின் உரையாசிரியர் பதஞ்சலி, அதில் முருகனை எப்பெயர்களால் குறிப்பிட்டுள்ளார்?

ஸ்கந்தன், விசாகன், குமரன், மகேசன், பிராம்ணி தேவன் என ஸ்ரீசுப்ர மணியரை பதஞ்சலி முனிவர் தனது நூலில் பெயரிட்டுள்ளார்.

### அக்காலத்தில் வாழ்ந்த காளாமுகர்கள் எப்படிப்பட்டவர்கள்?

கழுத்தணி, தங்க நகைகள், காதணி, தலை ஆபரணம், பூணூல், உடம்பில் சாம்பல் இவைகளை அணிந்து

கொண்டு, இந்த அணிகலன்கள் மறுபிறப்பை அறுக்கும் என்ற நம்பிக்கை கொண்டவர்களாக காளாமுகர்கள் வாழ்ந்தனர்.

தாங்கள் கொண்ட சடங்கின்படி மனித மண்டை ஓட்டில் பானம் அருந்தி மகிழ்வார்கள் அவர்கள்.

இறந்தவர்கள் சாம்பலை தங்கள் உடலெங்கும் பூசிக் கொள்வார்கள் அவர்கள்.

மாண்டுபோன மனிதனின் மாமிசம் இவர்களுக்கு கூடுதல் உணவு, தவிர அவர்கள் தலையில் ஜடாமுடி, மீசை, தாடி இவற்றுடன் கழுத்தில் ருத்திராட்ச மாலையும் அலங்கரிக்கும் தோற்றங் கொண்டிருப்பார்கள்.

## ஆலய தரிசனத்தை முடித்த பிறகு, அங்குள்ள கொடி மரத்தின் கீழ் ஏன் அமர வேண்டும்?

அப்படி கொடி மரத்தின் கீழ் அமர்வது இதனால்தான்

சகல தேவதைகளையும், கோயிலில் தரிசித்து முடித்தவுடன் நம்மை ஒரு புத்துணர்ச்சி பற்றியிருக்கும். அப்போது நம் ஆன்மா தரும் ஒளி பிரகாசம் கவர்ந்திழுக்க, பூத கணங்கள் வந்த பக்தர்களை தொடர்ந்து வரும். இவைகளை வழி அனுப்பி வைக்கவே, ஆலயக் கொடிமரம் கீழ் அமர வேண்டும்.

## ருத்ரனின் பிறப்பு எத்தகையது?

சூரியனுக்கும், உஷாதேவிக்கும் மகனாக உதித்தவர் ருத்திரன். இவர் கொண்ட மறுபெயர்கள் சர்வ, பசுபதி, உக்ர, அசனி, பாலா, மகாதேவா, ஈசன என்பவை. (ஆக எட்டுப் பெயர்கள்)

"சதா பதா பிரமாண நூல்" ருத்திரனைப் பற்றிக் கூறுகிறது. ருத்திரனின் பிறப்புக் குறித்து ஸ்ரீ விஷ்ணு புராணத்திலும், மார்கண்டேய புராணத்திலும் விவரிக்கப்பட்டுள்ளது.

## சிவபூஜை புரிகையில் கடைப்பிடிக்க வேண்டிய சுத்திகள் எவை?

ஆத்ம சுத்தி, தான (இடம்) சுத்தி, திரவிய சுத்தி, முத்ரசுத்தி, லிங்க சுத்தி ஆகிய சுத்திகள் சிவபூஜையில் மேற்கொள்ளப்பட வேண்டியவைகளாகும்.

## யோகம் விளக்கம் தேவை?

"யோகம் என்பது எதையும் நம்பு என்று கூறவில்லை. யோகம் அனுபவியுங்கள் என்றுதான் கூறுகிறது. ஆராயுங்கள் என்று விஞ்ஞானம் கூறுவதுபோல"

ஆய்வு (Experiment), அனுபவம் (Experience) ஆகிய இரண்டும் ஒன்றே. ஆனால் அவற்றின் திசைகள் வெவ்வேறு ஆனவை.

பரிசோதனை என்பது வெளிப்புறத்தில் செய்வது.

அனுபவம் என்று உட்புறத்தில் மனிதன் செய்யக்கூடிய அகப்பரிசோதனை.

யோகத்தில் இருத்தல் அனுபவ ரீதியானது, ஆராய்ச்சி பூர்வமானதும் கூட. எவ்வித நம்பிக்கையும் அதற்கு தேவையில்லை. அனுபவப்படுவதற்கான துணிச்சல் மட்டுமே இதற்கு வேண்டும்.

"மனதின் நிறுத்தமே யோகம், யோகம் தத்துவமோ, மதமோ அன்று. யோகம் மனிதனின் முழு இருத்தலுடனும் சம்பந்தப்பட்டதே" என்பார் மகான் ஓஷோ அவர்கள்.

## சத்சங்கம் என்றால் என்ன?

சத்தியத்தின் மிக அண்மையில் இருப்பதே சத்சங்கம்; உண்மையின் நெருங்கிய உறவான சத்சங்கம் ஒரு குருவின் அருகாமையும் கூட!

சரியான பொருள்: குருவின் வெகு அருகில் (Open) திறந்த மற்றும் ஏற்புத்தன்மையோடு (Acceptence) காத்திருத்தல் ஆகும்.

## ஸ்ரீ கிருஷ்ண பகவானே பெரியாழ்வாருக்கு திருமண் சாத்தினாராமே?

உண்மைதான். பெரியாழ்வார் தனது பாசுரம் ஒன்றில் பகவான் கண்ணன் தன்னுடைய நெற்றியில், அவருடைய திருக்கரத்தால் திருமண் இட்டதாகத் தெரிவித்துள்ளார்.

தெய்வமகளான ஸ்ரீஆண்டாள் நாச்சியாரும், தான் இயற்றிய 'நாச்சியார் திருமொழி' பாடலில் இதுபற்றி குறிப்பிட்டுள்ளாள்.

ரா.பன்னீர்செல்வம்

# ஆன்மீக சிறுகதை

# இறைவன் போட்ட முடிச்சு



**1980ன் இடைப்பட்ட காலம் ஆளுயரக் கண்ணாடியின் முன்னால் நின்று தலை வாரிக் கொண்டிருந்தான் குமரன் என்னும் அந்த இளைஞன்.**

அன்று ஞாயிற்றுக்கிழமை! சர்க்கார் உத்தியோகத்தில் சேர்ந்து இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக பணியாற்றி பெற்றோரின் நம்பிக்கை நட்சத்திரமாக விளங்கிய குமரன், "இன்னைக்கு பள்ளி தோழர்களை பார்த்து வர வேண்டும் என்கிற எண்ணத்தில் தயாராகிக் கொண்டிருந்தான்.
அம்மா, காய்கறி வாங்க கடைக்கு போயிருந்தார். அப்பா, வழக்கம்போல் படித்துறை பக்கம் போய் நண்பர்களுடன் அரட்டை அடித்துக் கொண்டிருப்பார் என நினைத்தவன், தன் பெற்றோர் தனக்கு திருமணம் செய்யும் முனைப்பில் இருப்பதை நன்கு அறிவான்.

ஓயாத வேலைப்பளு காரணமாக, விடுமுறை நாளான ஞாயிற்றுக்கிழமைகளில் கூட வெளியே எங்கும் செல்வதில்லை, குமரன்! இதில் திருமணம் வேறு நடந்துவிட்டால்... கேட்கவே வேண்டாம்! திடீரென்று பள்ளி நண்பர்களின் நினைவு வந்ததால், பக்கத்து ஊருக்கு சென்று அவர்களைப் பார்த்து விட வேண்டும் என்று நினைத்தான்.
இந்த எண்ணத்தோடு தலை சீவி முடித்து சீப்பை டேபிளில் வைத்த குமரன், தன் சுட்டு விரலால் முடிக்கற்றையை முன்பக்கம் இழுத்து விட, அது அவனது நெற்றியில் சுருண்டு தவழ்ந்து அவன் முகத்திற்கு மேலும் பொலிவை சேர்த்தது!
வேட்டியுடன் நின்ற குமரன், சட்டையில்லாத தன் உடம்பை ஒருமுறை உற்றுப் பார்த்தான். தீட்சண்யமான பார்வை, அதை தருகின்ற அழகிய விழிகள்! அகண்ட மார்பு நிமிர்ந்து கம்பீரமாய் நின்றது! குண்டான உடல் என்று யாரும் சொல்ல முடியாத அளவுக்கு உருண்டு, திரண்ட திடகாத்திரமான உடம்பு! ஜல்லிக்கட்டு காளையுடன் மல்லுக்கட்ட நிற்கின்ற வாலிபக் காளையென வாகாக இருந்த தன் தோற்றத்தை கண்டுதானே ஒரு கணம் வியந்து நின்றான், குமரன்!
இத்தனை கம்பீரமும் பேரழகும் கொண்ட தங்கள் மகனுக்கு இனியும் தாமதமின்றி திருமணம் செய்து வைக்க வேண்டும் என பெற்றோர் எண்ணியதில் தவறே இல்லை.

"எந்த மகராசி கொடுத்து வைத்திருக்கிறாளோ" என அக்கம்பக்கத்தில் உள்ளோர் பேசும்போதெல்லாம் இவனது அம்மா திருஷ்டி சுற்றி போடுவதை வழக்கமாகக் கொண்டிருந்தார். அவையெல்லாம் குமரனின் நெஞ்சில் நிழலாட......

"நேரமாகுதே... இப்ப போனாதான் மதியம் சாப்பாட்டுக்குள்ள திரும்ப முடியும்!" என அவசர அவசரமாய் சட்டையை எடுத்து மாட்டி, பட்டன்களை போடத் தொடங்கினான், அப்போது....

"வீட்ல யாரும் இல்லையா?"... என்ற குரல் கேட்டு திரும்பி பார்த்தான் குமரன்!

ஆஜானுபாகுவான தோற்றம்! செக்கச்சிவந்த நிறம்! நெற்றியில் ஒற்றை சிவப்புப் பொட்டு, பார்வையின் தெனாவட்டு பேச்சிலும் தொனித்தது!

"ஆமா... சுந்தரேசன் எங்க போயிட்டான்... பர்வதவர்தினி வீட்ல இல்லையா? நீ யாரு?... நீதான் குமரனா? கண்களை சுழல விட்டவர், பார்வையை அவன் மேல் நிறுத்தி, "என்ன நீ பதிலே சொல்ல மாட்ற? "... பெரியவங்களுக்கு மரியாதை கொடுக்க தெரியாதா உனக்கு?"....என்றார், வந்தவர்!

கடுப்பானான் குமரன்! மொதல்ல நீங்க யாரு?..... நான் எதுக்கு உங்க கேள்விக்கு பதில் சொல்லணும்! அப்புறம் என்னமோ சொன்னீங்களே... ஆங்... பெரிய மனுஷன்!.... யாரு?.... நீங்களா?.... திறந்து கெடக்குற வீட்டுக்குள்ள நீங்களா நுழைஞ்சிங்க! பதில் சொல்ல நேரமே கொடுக்காம கேள்விகளை அடுக்கிட்டே போறீங்க! இதில் பதில் சொல்ல மாட்டியான்னு இன்னொரு கேள்வி வேற!"..... எரிச்சல் மிகுந்த மன உளைச்சலோடு அவரை கோபமாய் பார்த்தான் குமரன்!

சற்றே புன்முறுவலுடன், "இவ்வளவு பேசுறியே... நான் யாருன்னு தெரிஞ்சா.... இப்படி எல்லாம் பேசுவியா?...." என்றார்!

குமரன் அலட்சியமாக, "நீங்க யாரா இருந்தா எனக்கென்ன? மொத்தத்தில இங்கிதம் தெரியாத மனுஷன்... அவ்வளவுதான்," எனக் கூறியவாறு பர்சை எடுத்து பாக்கெட்டில் வைத்தான்!

"கல்யாணப் பேச்சு ஆரம்பிக்கிறதுக்கு முன்னாடி ஒருதரம் மாப்பிள்ளைய நேர்ல பார்த்துட்டு போகலாம்னு வந்தேன்... இப்ப தெரியுதா? நான் பெண்ணோட பெரியப்பா! என் தம்பி மகள உனக்கு கொடுக்கலாம்னு பேசி வச்சிருக்கோம்!" என அலாதியாக சிரித்தவர், "பரவாயில்ல... அந்த நாள்ல நான் எப்படி முறுக்கா இருந்தேனோ.... நீயும் அச்சு அசலா அப்படியே இருக்கிற!.... பேஷ்..பேஷ்..." அவரது சிரிப்பு தொடர்ந்தது.

"ஓஹோ.... இதுதானா விஷயம்?!" என நினைத்தவன்,

"இவர் வீட்டு பெண்ண கட்டிட்டாலும்..... அப்பப்பா! அந்தப் பெண்ணுக்கு இவர் குணத்தில பாதி இருந்தாலும் போதும்.... மனுசன் நிம்மதியா வாழ முடியுமா?".... குமரன் மனதில் இனம் புரியாத வெறுப்பு ஏற்பட்டது! அதனை அவன் முழுதாய் வெளிக்காட்டும் விதமாக, வந்தவர் அங்கே இருந்த நாற்காலியை இழுத்துப்போட்டு, கால் மேல் கால் போட்டு அமர்ந்தார்!

குமரனின் எரிச்சல் கோபமாய் வெளிப்பட்டது." இந்தாங்க நான் அவசரமா வெளியில போகணும்!" என்றான்.

"தாராளமா போ! சுந்தரேசன் எப்ப வருவார்?... " அவனுடைய எரிச்சலைப் பொருட்படுத்தாமல் கேட்டார்.

இந்த மனுஷன என்னதான் சொல்றது?.. சே... கொஞ்சங்கூட இங்கிதம் தெரியாதா?..." என நினைத்தவன் முகத்தில் கோபம் தெரிந்தது.

"என்ன குமரா? என்ன இவர் இங்கிதம் தெரியாத மனுசனா இருக்கார்னு நினைக்கறியா?.... நமக்குள்ள அதெல்லாம் எதுக்கு?.... நான் உன் அம்மா வழியில் தூரத்து சொந்தம்! நீண்ட காலமா "டச்" விட்டுப்போச்சு! சமீபத்தில உன் தாய், தகப்பனார் ஒரு கல்யாண வீட்டுக்கு வந்தப்ப, அங்க வச்சித்தான் உறவை புதுப்பிச்சிக்கிட்டோம், அப்பத்தான்...."

என்றவரை இடைமறித்த குமரன், "இதெல்லாம் எனக்கு தேவை இல்லாத விஷயம்! உங்க மூலமா வந்த தொல்லை போதும்! இனிமேலும் ஒரு தொல்லை வரணுமா?"... என சிடுசிடுத்தான்.

அந்த நேரத்தில் வீட்டிற்குள் நுழைந்த குமரனின் தாயார் வந்தவரை பார்த்து, "வாங்க, வாங்க!.... அண்ணே, எப்ப வந்திங்க?"...என ஆவலுடன் கேட்க, "நான் தான் இன்னைக்கு வரேன்னு சொல்லி இருந்தேனே!... வந்து பார்த்தா யாரையுமே காணோமெ! எங்க போனீங்க!? சுந்தரேசனுக்கு பொறுப்பே இல்ல!.." என்றார், வெள்ளந்தியாக சிரித்தபடியே!

"இந்த ஆள் எப்பவும் இப்படித்தானா?... சே"... என்றவன், தாயின் பக்கம் திரும்பி," அம்மா..... நான் வெளியில போயிட்டு வந்துடறேன்,".... ஸ்கூட்டர் சாவியை எடுத்துக் கொண்டு நகர, அவசரமாய் அவனிடம்," டேய்... இவர்..." என ஏதோ சொல்ல வர...."ம் ம் ..... தெரியும்! என வேகமாக வெளியேறினான், கொஞ்சமும் கோபம் குறையாமல்!

வெளியேறியவனைப் பார்த்தபடியே, செம்பில் தண்ணீரை அவரிடம் கொடுத்த பர்வதம்," அவன் நண்பர்கள பார்க்க பக்கத்து ஊர் வரைக்கும் போகனும்னு", என்றாள்.

தண்ணீரை வாங்கி குறித்தவாறு, ”போயிட்டு வரட்டும்.... பர்வதம் உனக்கு ஒண்ணு தெரியுமா? பையன பார்த்தா எனக்கு ஆச்சரியமா இருக்கு; சின்ன வயசுல என்னை பார்த்த மாதிரியே இருக்கான்.; வயசுக்குரிய மிடுக்கு; அழகு; கோபம்.... எல்லாம் அப்படியே இருக்கு, என் தம்பி மகள் இவனுக்குத்தான்!” என சிரித்தார்.



ஸ்கூட்டரில் சென்று கொண்டிருந்த குமரனின் மனசு,” இந்த மனுஷனோட உறவும் வேணாம்; இவர் உறவுல வர பெண்ணும் வேணாம்!... போதும்டா சாமி!” என நினைத்தது!

பள்ளிநாட்களில் இவனோடு நெருங்கிப் பழகிய ஐந்து நண்பர்கள் காத்திருந்தனர். இந்த ஆறு பேரில் குமரன் உட்பட 4 பேர் அரசாங்க உத்தியோகமும் ஒருவன் தனியார் நிறுவனத்திலும் ஒருவன் சொந்தத் தொழிலும் செய்பவர்கள்.

எல்லோரும் கடந்த கால நினைவுகள், எதிர்கால சிந்தனைகளை பகிர்ந்து கொண்டார்கள். நேரமானது! “நேரமாகுது”, நான் கிளம்பட்டுமா?” என்றபடி புறப்பட்டான் குமரன்.

வீட்டிற்குள் நுழைந்த குமரன், பார்வையைச் சுழல விட்டான். நிம்மதிப் பெருமூச்சு குமரனிடம் வெளிப்பட்டது. ”அப்பாடா! அந்த மனுஷன் போயிட்டிருக்கார்!” என்றபடி சட்டையைக் கழட்டினான்.

வெற்றிலையில் சுண்ணாம்பை தடவியபடி சுந்தரேசன், ”குமரா!அடுத்த வாரம் பொண்ணு பார்க்க போறோம்: சீக்கிரமே கல்யாணத்தை முடிச்சுட்டா எங்க கடமை முடிஞ்சிடும்!” என்றார்.

அம்மாவும் சேர்ந்து கொண்டாள். “ஆமா, குமரா! நல்ல ஒழுக்கமான குடும்பம்; அண்ணன், தம்பி அவங்க பிள்ளைகள் மருமகன், மருமகள்னு மொத்தம் 16 பேர் கூட்டுக் குடும்பமாக ஒரே வீட்டில் வாழ்ந்துட்டு வராங்க! நாலு தலைமுறையா இப்படி இருக்கிறது இந்த காலத்தில் அபூர்வம் இல்லையா?”... என சிலாகித்து சொன்னாள்.

“அபூர்வம் தாம்மா, அபூர்வம்வந்தான்! இந்த மாதிரி ஒரு மனுஷன் பிறந்ததே அபூர்வம்வந்தான்! அவரோட பேச்சும் சிரிப்பும் நடந்துக்கிற விதமும் எனக்கு கொஞ்சமும் பிடிக்கல;! அவர் வீட்டுப் பெண்ணே வேணாம்!” என்றான் எரிச்சலுடன்!

பெற்றோருக்கு அதிர்ச்சி!

“டேய்.... குமரா...” என எதையோ சொல்ல வாய் எடுத்தார் சுந்தரேசன்! அந்த நேரம் பார்த்து மேஜை மீது இருந்த டெலிபோன் அலறியது. வேகமாக சென்று ரிசீவரை எடுத்து, “ஹலோ”, என்றார். எதிர்முனையில் என்ன பேசினார்களோ தெரியவில்லை! “இதோ.... இதோ இருக்கான்;” என்றவர் குமரனிடம்,” குமரா.... உன் நண்பனுக்கு ஏதோ விபத்தாம்! இந்தா”, என ரிசீவரை குமரனிடம் கொடுத்தார். பதட்டத்துடன் ரிசீவரை வாங்கினான் குமரன்!

“ஹலோ“.... என்றவன், எதிர்முனை தகவலால் பதறினான் எங்கே?.... இப்பவே வந்துடறேன்...” என்றவன், ரிசீவரை வைத்துவிட்டு.. அப்பாவிடம் திரும்பினான்.



"அப்பா!... என் நண்பன் சங்கரனுக்கு ஆக்சிடென்ட் ஆகிடுச்சாம! என்னைய பார்க்க வந்துட்டு, கும்பகோணம் டவுன் கிட்ட போகும் போது பஸ் மோதி விபத்தாம். பக்கத்துல இருந்த தனியார் ஆஸ்பிட்டல்ல அட்மிட் பண்ணி இருக்காங்களாம்! பாவம்... அவன் வேலை செய்யறது ஒரு சின்ன தனியார் கம்பெனி.
சம்பளம் ஒன்னும் பெருசா இல்ல!.... வீட்லயும் வறுமை! நான் உடனே போகணும்; பணம் ஒரு ஐயாயிரம் இருந்தா கொடுங்களேன்".... என்றவாறு பதைபதைத்து நின்றான்.

உள்ளே போய் பணத்தை எடுத்துக் கொண்டு வந்து கொடுத்தார் சுந்தரேசன்! பணத்தை வாங்கிய குமரன் அவசரமாய் புறப்பட, பர்வதம்," டேய், பார்த்துப் போடா.... ஜாக்கிரத!..." பொறுமையாய் போ!" கவலையுடன் சொல்ல, ஸ்கூட்டரை ஸ்டார்ட் செய்து புறப்பட்டான், குமரன்! என்ன ஆனதோ; எப்படி இருக்கிறானோ..?!... தான் சந்திக்க வேண்டும் என்று சொன்னதால் தானே இப்படி...... சீரியசாக இருப்பதாக சொன்னார்களே! கடவுளே!... தப்பா எதுவும் நடந்து விடக்கூடாது", என வேண்டிக் கொண்டவனின் கண்களில் கண்ணீர் திரையிட்டது. கண்களைத் துடைத்தபடி ஸ்கூட்டரை வேகமாக ஓட்டினான்.

ஆஸ்பிட்டல்! ஸ்கூட்டரை நிறுத்தி, வேகமாய் உள்ளே சென்றான். நண்பர்கள் நான்கு பேரும் கவலையுடன் அமைதியாய் நின்றிருந்தார்கள். வேகமாக சென்ற குமரன், "டேய் சந்துரு.... என்னடா ஆச்சு?".. தழுதழுக்க கேட்டான்! சந்துரு அழுதவாறே, "நீ போனதும் எங்க கிட்ட சொல்லிட்டு கிளம்பினான். டவுனு கிட்ட போகும்போது, எதிர்ல வந்த பஸ், இவன் போன சைக்கிளில் மோதி, இவனைத் தூக்கி வீசியிருக்கு! கை, கால், முகம், தலைன்னு எங்கே பார்த்தாலும் ரத்தம்! இன்னொரு பஸ்ல எதிரில் வந்த ஒரு பெரியவர் ஆட்டோ, கார்னு எதையும் எதிர்பார்க்காம, உடனே இவன தன்னோட தோள் மேல தூக்கி, வேகமா கொண்டுவந்து ஹாஸ்பிடல்ல சேர்த்திருக்காரு!" என்றான்.

"இந்த ஆஸ்பிட்டல்ல முன் பணம் கட்டினால் தானே சிகிச்சையை ஆரம்பிப்பாங்க!" கவலையுடன் குமரன் கேட்க, "முன்பணமாக தன்கிட்ட இருந்த ஏழாயிரம் ரூபாயை அவரே கட்டியிருக்காரு!.." என்றான் ஒரு நண்பன்!
"யாருடா அவரு?... இப்ப எங்க இருக்காரு?" குமரன். "சங்கரன் உடம்புல இருந்து நிறைய ரத்தம் வெளியேறினதால அவரே அவனுக்கு ரத்தம் கொடுத்துகிட்டிருக்காரு", என்றான் சந்துரு!
இன்னொருவன், "யாரோ தெரியல... நல்ல மனுஷன்... கடவுள் மாதிரி வந்து ஆஸ்பத்திரியில சேர்த்து, பணமும் கொடுத்து, ரத்தமும் கொடுத்துகிட்டிருக்காரு!
அவர் எல்லாம் மனுஷனே இல்லடா!" என நெகிழ்ந்தான்.

"சரி, சரி... வாங்க போய் பார்க்கலாம்!" எல்லோரும் ஐசியு வின் முன்னால் போய் நின்றார்கள்.
உள்ளேயிருந்து ஆப்பிளை கடித்தபடியே வெளியே வந்தவரை பார்த்து குழப்பத்துடன் தவித்தான் குமரன்!
ஆம் இவனது உறவினராக வீட்டிற்கு வந்தவர் தான். சட்டை இல்லாமல் வேட்டி எங்கும் இரத்தக் கறையோடு அதே புன்சிரிப்புடன் வந்தார். "அட, குமரனா? நீ என்னப்பா இங்க?.." என குமரனிடம் கேட்டார்.

"என்..... என் நண்பனுக்கு ஆக்சிடென்ட்..." வார்த்தை வராமல் தடுமாறி தழுதழுத்தான்.
"அடடே, அந்தப் பையன் உன் நண்பனா?... உன் அப்பா, அம்மாவோட பேசிட்டு பஸ் ஏறினேன், திடீர்னு பஸ் யார் மேலேயோ மோதிச்சு! இறங்கிப் பார்த்தேன்... பாவம்... சின்ன வயசு... வாழ வேண்டிய பையன்... ரத்த வெள்ளத்தில கிடந்தான். மனசு பதறிடுச்சி! கொஞ்ச தூரத்திலேயே ஹாஸ்பிடல் இருந்ததா... பட்டுனு தோள் மேல தூக்கிட்டு போட்டுட்டு வந்து அட்மிட் பண்ணேன்.

சட்டை பூரா ரத்தம்! அதான் கழட்டிப் போட்டுட்டேன். ஒரு துண்டு கிடைக்குமா? மேலுக்கு போர்த்திகிட்டு போயிடறேன்". வீட்டில் பார்த்த அதே சிரிப்போடு கேட்டார்! துண்டு ஒன்னு வாங்கி வரும்படி நண்பன் ஒருவனை அனுப்பிய குமரன், துவண்டு போனான்.

ஆஜானுபாகுவான உடல் அமைப்பு இவருக்கு இறைவன் கொடுத்தது இதற்காகத் தானா?... இவர் சிரித்ததும் பேசியதும் ஆணவத்தால் அல்லவே இவர்தான் வெள்ளந்தியான மனிதரா?!... ஆஸ்பிட்டலில் சேர்த்ததை சொன்னவர் பணம் கட்டியதையும் ரத்தம் கொடுத்ததையும் பெரிதாக எண்ணாமல் அதைப்பற்றி எதுவும் சொல்லாமல்

அந்த சாதாரண சிரிப்புடன், தான் செய்தது ஒன்றுமே இல்லை என்பதுபோல் நிற்கிறாரே இந்த மனுஷன்; இவரையா இப்படி நினைத்தோம்! இல்லை... இல்லை... இவர்தான் மனுஷன்! இல்லை... அதற்கும் மேல்", என கசிந்தான் குமரன்.

2000-ம் ஆண்டு தொடக்கம்! அந்தக் கோவிலின் ஒரு பகுதியே கோலாகலமாக காணப்பட்டது! யாருக்கோ சதாபிஷேகம்! குமரன் தன் மனைவி, மகளோடு வந்திருந்தான். யாரை இங்கிதம் தெரியாதவர் என்று ஒரு காலத்தில் நினைத்தானோ.... அவரது தம்பி மகளையே மணந்தான். அதற்கு காரணம், அவரது வெள்ளந்தியான குணமும் பரந்த மனமும் தான்! மனம்போல் மனைவி அமைந்தாள். ஒத்த கருத்துடைய இனிமையான மனைவி, இன்பமான வாழ்க்கை! அரசாங்கத்தில் சற்றே உயர் பதவி என நிறைவாக வாழ்ந்தார் குமரன்!

அன்று அவரால் வரும் பெண் வேண்டாம் என நினைத்தான் குமரன் இன்று... இங்கிதம் தெரியாதவர் என்று யாரை நினைத்து குமரன் எரிச்சலடைந்தானோ... அந்த இனிய மனிதருக்கு.... வெள்ளந்தி மனிதருக்குத் தான் சதாபிஷேகம்! நெருங்கிய உறவால் அவருடன் இரண்டற பிணைக்கப்பட்டு விட்டார் குமரன்! எல்லாம் கடவுள் போட்ட முடிச்சு.





திருவாரூர் சு.சேகர்




# கண்பார்வை கொடுப்பார் நாட்டரசன்கோட்டை கண்ணாத்தாள்!!

பூணுமெழிற் காளி எதிர் பொருந்தவர் மெய் கண்ணில் காணவர முற்றமையால் கண்ணுடையாள்" என்கிறது காளையார்கோயில் புராணம். கண்ணுடையாள், கண்ணானந்தி, கண்ணம்மா, கண்ணுடைய நாயகி என்று தமிழிலும், 'நேத்ராம்பிகா' என்று வடமொழியிலும் திருநாமங்கள் அம்மனுக்கு இருந்தாலும், பக்தர்களால், 'கண்ணாத்தாள்' என்றே பரவலாக அம்மன் அழைக்கப்படுகின்றாள்.

சண்டாசுரன் என்ற அசுரனை அழிக்க, அவதாரம் எடுத்த ஆதி பராசக்தி, தேவர்கள் காணும் வகையில், அவர்களுக்கு ஞானக் கண் தந்து, தன் திருவுருக் காட்டியதால் கண்ணுடையாள் என்ற திருநாமம் கொண்டதாக கூறப்படுகின்றது.

நாட்டரசன் கோட்டையில் வடக்கு நோக்கிய சந்நிதியில், எட்டு திருக்கரங்களுடன், சண்டாசுரனை அடக்கி இடது காலால் அவனை மிதித்தபடியும், வலது காலை மடக்கி ஒய்யாரமாய் அமர்ந்தபடியும் சுயம்புவாக நமக்கு வாழ்வளிக்கும் தாயாக இருந்து அருள்பாலித்து வருகிறாள் கண்ணாத்தாள்.

இந்த கண்ணாத்தாள் கோவிலுக்கு

வந்தால் கண் சம்பந்தப்பட்ட அனைத்து நோய்களும் விலகிவிடும் எனபது ஐதீகம்.

### ஸ்தல புராணம்:

நாட்டரசன் கோட்டையின் தெற்கே 2கி.மீ., தொலைவில் அமைந்திருக்கும் கிராமம் பிரண்டகுளம். இதன் வழியாக, தினமும் பலர் பால், மோர், தயிர் விற்க, நாட்டரசன்கோட்டை வருவர். பிரண்டகுளம் கிராம எல்லையில் வரும்போது விற்பனைக்கு கொண்டு வரும் பால், மோர் குறிப்பிட்ட இடத்தில் தட்டி, தொடர்ந்து கொட்டிக் கொண்டே இருந்தது. அவற்றை விற்க முடியாமல் அனைவரும் கிராமத்திற்கு வேதனையுடன் திரும்பினர். அடுத்தடுத்த நாட்களிலும் இந்த சம்பவம் தொடர்ந்தது. இதற்கு காரணம் என்ன என தெரியாமல் மக்கள் குழப்பத்தில் இருந்தனர். இந்தப் பிரச்சனையைத் தீர்க்க அரசனை அணுக விரும்பினர்.

அன்றைய தினம் இப்பகுதியை ஆண்ட அரசனின் கனவில், தான் இருப்பதை அம்மன் உணர்த்தியதை அடுத்து, அந்த பகுதியை தோண்டி, அம்மனை வெளிக்கொண்டு வந்தனர். புதையுண்ட அம்மன் சிலையை மீட்கும் பணியில் ஈடுபட்டிருந்தவரின் கடப்பாரையின் நுனி கண்ணில் பட்டு ரத்தம் கொட்டியது. அடுத்தவர் அந்த பணியை தொடர முற்பட்டார். அதை மறுத்த முதலாமவர் பணியை தொடர்ந்து செய்து அம்பாள் சிலையை மேலே கொண்டு வந்தார். முழுமையாக அம்மன் சிலை வெளிவந்ததும், பாதிக்கப்பட்டவரின் கண்ணில் பட்ட காயமும் முழுமையாக நீங்கியது. கண் கொடுத்த காரணத்தால், 'கண்ணாத்தாள்' என்ற பெயர் அம்மனுக்கு வந்தது. அங்கிருந்து எடுத்து வரப்பட்ட அம்மன் முதலில் சிவன் கோயிலிலேயே வைக்கப்பட்டார். மறு நாள் அம்மன், வடக்கு நோக்கித் திரும்பியிருக்கக் கண்டு, இதுவே அவள் திருவுளம் என்று, தனிக் கோயிலில் வடக்கு நோக்கி பிரதிஷ்டை செய்தார்கள். வடக்கு முகமாக அமர்ந்து அருளாசி வழங்குவதால், 'வடக்கு வாய்ச்செல்வி' என்ற பெயரும் அம்மனுக்கு உண்டு.

### திருக்கோயில் அமைப்பு:

இத்திருக்கோயிலின் இராஜ கோபுரம் ஐந்து நிலைகள் கொண்டது. திருக்கோயிலின் முன்பாக சுற்று மதிலுடன், படித்துறைகளுடன் கூடிய திருக்குளம். அம்மனின் சக்தி அனைத்தும் இந்த திருக்குள நீரில் நிரம்பியிருப்பதாக ஐதீகம். கண்நோய் வந்தால், இந்தத் தீர்த்தத்தை கண்களில் விட்டுக் கழுவினால், நோய்கள் விரைவில் குணமாகும் என்பது பக்தர்களின் நம்பிக்கை. குளத்தின் அருகில், கோயிலுக்கு முன்பாக, சிறியதாக சித்தி விநாயகர் கோயில்.

கோயிலில் நுழைந்தவுடன் முதலில் பெரிய தூண்களைக் கொண்ட, அற்புதமான சிற்ப வேலைப்பாடுகள் கொண்ட சொக்கட்டான் மண்டபம். கண்நோய் கண்டவர்கள்,

**இந்த மண்டபத்தில் 48 நாட்கள் தங்கி, குளத்தில் நீராடி, அம்மனை வழிபட்டால் நோய் நீங்கப் பெறுவார்கள் என்பது நம்பிக்கை.**

அங்குள்ள ஒரு மரப்பெட்டியில் சரும நோய்கள் தீர, அம்மனுக்கு பக்தர்கள் உப்பு, மிளகு போடுகின்றனர். இதனை அடுத்துள்ள மகா மண்டபத்தில், அம்மன் சந்நிதி நேர் எதிரில் சிம்ம வாகனம், பலிபீடம், கொடிமரம் அமைந்துள்ளது. மகா மண்டபத்தை அடுத்து, இருபுறமும் பிரம்மாண்டமான துவார பாலகிகள். உள்ளே சென்றால் அர்த்த மண்டபம். அர்த்த மண்டபத்தில் அனுக்ஞை விநாயகர், உற்சவர் திருமேனிகள், அம்மனின் உற்சவத் திருமேனியான 'களியாட்டக் கண்ணாத்தாள்' ஆகியோர் அருள்கின்றனர். இக்கோவில் கருவறையில் அம்மனின் வலது பாதம் பீடத்தின் மேல் ஊன்றிய நிலையில் இருக்க, இடது திருவடி, கீழே சண்டாசுரனின் தலையை மிதித்தபடி அருள் புரிகின்றார்.

மகா மண்டபத்தின் வடபுறம், வீரபத்திர சுவாமியும், சிறிய வடிவில் காளியும் உள்ளனர். கீழ்ப் பகுதியில் பைரவர் உள்ளார்.

உட்பிராகாரத்தின் கன்னி மூலையில், அபிஷேக விநாயகர் சந்நதி. கருவறை விமானம், இரண்டு தள (துவி தள) விமானம், மூன்று ஸ்தூபிகளைக் கொண்டுள்ளது. பிராகாரம் சுற்றி வருகையில், அபிஷேக நீர்த் தொட்டியைக் கண்டு வணங்கலாம்.

அபிஷேக நீர் விழும் தீர்த்தத் தொட்டியின் அடியில் சித்தர்களில் ஒருவரான அழுகுணிச் சித்தர் சித்தியடைந்திருப்பதாக. தல புராணம் கூறுகிறது. அன்னையின் பீடத்தின் கீழே உள்ள சுரங்க அறையிலேயே அவர் அதிஷ்டானம் அமைந்திருக்கிறது என்கிறார்கள். அம்மனுக்கு மர வாகனங்களும், வெள்ளிக்கேடயம், வெள்ளிக்குதிரை, வெள்ளி ரதம் ஆகியவை இருக்கின்றன.

## கண்ணாத்தாளின் திருக்கோலம்:

கண்ணாத்தாளின் அற்புத திருக்கோலம் கண் கொள்ளாக் காட்சி ஆகும். அம்மன் உத்குடி ஆசனத்தில் அமர்ந்த நிலையில் வலது பாதம் பீடத்தின் மேல் ஊன்றிய நிலையில் இருக்க, இடது சிலம்பணிந்த பாதம் கீழே சண்டாசுரனின் தலைமேல் இருக்கிறது. அம்மன் எட்டுத் திருக்கரங்களுடன் காட்சியளிக்கிறார். பின் ஆறு திருக்கரங்களில் முறையே, கிளி, பாசம், வாள், உடுக்கை, கேடயம், மணி ஆகியவற்றை பிடித்தபடியும், முன் வலது மேற்கரத்தில் சூலம் தாங்கியும், இடது கீழ்க்கரத்தில் பான பாத்திரம் ஏந்தியபடி இருக்கின்றார். சூலம் சண்டனின் மார்பு நோக்கி உள்ளது. கரங்களில் வளையல்களும், திருமார்பில் முத்தாரமும், திருத்தாலியும் அணிந்து, “ஜ்வாலா கேசம்” என்னும் கதிர் மகுடம் அணிந்து, சற்றே தலை சாய்த்தவாறு ஞானமருளும் திருவிழிகளுடன் அருள்புரிகின்றார். சண்டாசுர வதம் செய்த திருக்கோலம் என்றாலும், அம்மனின் திருக்கரங்களுள் ஒன்றில் இருக்கும் கிளி, ஞானத்தையும், மற்றொன்றில் இருக்கும் வாள், கூர்ந்த, உண்மைப் பொருளை உணர்ந்த புத்தியையும் குறிப்பதாக ஐதீகம்..

## திருவிழாக்கள்:

ஒவ்வொரு மாதமும் முதல் வெள்ளிக்கிழமை அன்று, கண்ணாத்தாளுக்கு தங்க அங்கி அணிவிக்கப்படுகிறது.

சித்திரை மாத முதல் செவ்வாய் அன்று அம்மனுக்கு கண் திறப்பு விழா நடைபெறும். இத்திருவிழா இருபத்திரண்டு நாட்கள் நடக்கும்.

வைகாசி பிரமோற்சவம் பத்து நாட்கள் சிறப்பாக நடைபெறும். வைகாசி மாதம், புனர்பூச நட்சத்திரத்தில் கொடியேற்றமும், சுவாதி நட்சத்திரம் சேர்ந்த தினத்தில், அந்தி வேளையில், களியாட்டக் கண்ணாத்தாள் எழுந்தருளிய வெள்ளி ரத பவனியும் நடைபெறுகிறது. மறு நாள் விசாகத்தன்று தேர் பவனியும் நடைபெறுகிறது.

ஆடி மாதத்தில் முளைகொட்டு திருவிழா பத்து நாள் நடைபெறும். ஒன்பது வெள்ளி ஓட்டிலும், ஒரு தங்க ஓட்டிலும் முளைப்பாரி போட்டு வளர்க்கப்படும். தங்க முளைப்பாரி அம்மன் தலையில் தாங்கி ஆடி பௌர்ணமி காலையில் திருவீதி உலா நடைபெறும்.

புரட்டாசி நவராத்திரி விழா பத்து நாட்கள் சிறப்பாக கொண்டாடப்படும். ஒன்பது நாட்கள் அம்மன் கொலுவில் அமர்ந்திருந்து பத்தாம் நாள் விஜயதசமி அன்று குதிரை வாகனத்தில் உலா வருவார். நவராத்திரி நாட்களில் இலட்சார்ச்சனை சிறப்பான முறையில் நடைபெறும்.

ஐப்பசியில் பத்து நாட்கள் நடைபெறும் கோலாட்ட திருவிழாவும் மிகவும் விசேஷமானது.

திருக்கார்த்திகை தினத்தன்று தீபத் திருவிழா நடைபெறும், அன்று அம்மன் அன்ன வாகனத்தில் எழுந்தருள செய்து சொக்கப்பனை கொளுத்துவார்கள்.

தை மாதத்தில் பத்து நாட்கள் தைலக் காப்பு உற்சவமும் சிறப்பாக நடைபெறுகின்றன. தை மாதம் செவ்வாய் பொங்கல் விழா சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது. தை மாதம் முதல் செவ்வாய் அன்று, சந்நிதி வீதியில், எவ்வித வேறுபாடும் இல்லாமல்,



ஆயிரக்கணக்கானோர் கூடி, வரிசையாக பானைகள் வைத்து பொங்கலிட்டு வழிபாடு செய்கின்றனர். ஒரு வேளை, தை மாதப் பிறப்பு, செவ்வாய் கிழமை வந்தால், அடுத்த செவ்வாயன்று இவ்வழிபாடு செய்யப்படுகின்றது.

இவை தவிர, பன்னிரண்டு வருடங்களுக்கு ஒரு முறை நடைபெறும் "களியாட்டத் திருவிழா" நாற்பத்தெட்டு நாட்களுக்கு பாரம்பரிய முறைப்படி நடைபெறும். இக்கோயிலில் பாரசைவர்களாகிய உவச்சர் மரபினரால் கோயிலில் பூஜை செய்யப்படுகிறது. சிவாச்சாரியார்கள், ஸ்ரீவைணவ பட்டாச்சாரியார்கள் முன்னிலையில் பிரமோற்ஸவம், ஆகமப்படி கொடியேற்றம் செய்து காப்புக் கட்டப்படுகிறது.

## அம்மன் பெருமை சொல்லும் பாடல்கள்:

அம்மனின் பெருமை சொல்லும் பாடல்களில் முதன்மை பெறுவது, அழுகுணிச் சித்தரின் பாடல்கள்….

"பைம்பொற் சிலம்பணிந்து பாடகக்கால் மேல்தூக்கிச்
செம்பொற் கலையுடுத்திச் சேல்விழிக்கு மையெழுதி
அம்பொற் பணிபூண் டறுகோண வீதியிலே
கம்பத்தின் மேலிருந்தே என் கண்ணம்மா!
கண்குளிரப் பாரேனோ!"

அழுகுணிச் சித்தர் இப்பாடலில் கண்ணாத்தாளை "கண்ணம்மா" என்று அழைத்துள்ளார்.

முத்துக் குட்டிப் புலவர் எழுதிய, "ஸ்ரீகண்ணுடையம்மன் பள்ளு" மிகச் சிறந்த சிற்றிலக்கியம் ஆகும்.

## வேண்டுதலும், நேர்த்திக்கடனும்:

கண் பார்வை குறைபாடு உள்ளவர்கள், கண் நோயால் பாதிக்கப்பட்டவர்கள், இந்த கோயிலுக்கு வந்து நாற்பத்தெட்டு நாட்கள் விரதமிருந்து, இக்கோயிலில் தங்கி தினமும் அம்மனை வழிபட்டு, அம்பாளுக்கு செய்யப்படும் அபிஷேக தீர்த்தத்தைக் கண்களில் விட்டால் கண்பார்வை கிடைக்கும் என்பது நம்பிக்கை. வயிறு சம்பந்தமான நோய்களால் அவதிப்படுபவர்களும், கண்ணாத்தாளுக்கு விரதமிருந்து மாவிளக்கு போட்டு பலன் பெறுகிறார்கள். கோவிலின் அருகிலேயே மாவு இடிக்க உரல்களும், உலக்கைகளும் கிடைக்கின்றன.

குழந்தை பேறு இல்லாதவர்கள் அம்மனிடம் கரும்புத் தொட்டில் எடுப்பதாக வேண்டிக் கொள்கின்றனர். குழந்தை பாக்கியம் கிடைத்ததும் வேண்டுதலை நிறைவேற்றுகிறார்கள். மற்றும் திருமணத்தடை, கல்வியில் சிறந்து விளங்க, அம்மனை பிரார்த்திக்கலாம். பக்தர்கள் தங்கள் விருப்பங்களை நிறைவேற்றிய பின், அம்மனுக்கு அபிஷேகம் செய்து, புதிய வஸ்திரங்களை சமர்ப்பித்து, அம்மனுக்கு மாவிளக்கு போடுகின்றனர். கண்ணாத்தாளின் அருளால் பிறக்கும் குழந்தைகளுக்கு கண்ணன், கண்ணப்பன், கண்ணகி, கண்ணாத்தாள் என்றும் பெயர் சூட்டி மகிழ்கிறார்கள்..

## கோயில் திறந்திருக்கும் நேரம்:

இக்கோயில் காலை 7.30 மணி முதல் மதியம் 12.30 மணி வரையிலும், மாலை 4 மணி முதல் இரவு 8.30 மணி வரையிலும் திறந்திருக்கும்.

## கோயிலுக்கு செல்லும் வழி:

சிவகங்கையிலிருந்து ஏழு கிலோமீட்டர் தூரத்திலும், மதுரையில் இருந்து 55 கிலோமீட்டர் தூரத்திலும் நாட்டரசன் கோட்டை திருத்தலம் இருக்கிறது. காரைக்குடி, திருப்பத்தூர், காளையார் கோயில், சிவகங்கையிலிருந்து இங்கு செல்வதற்கு பேருந்து வசதிகள் ஏராளமாக உள்ளன.

## கம்பர் சமாதி கோவில்:

கவிச்சக்கரவர்த்தி கம்பர் நாட்டரசன் கோட்டையில், தம் இறுதி நாளைக் கழித்தார். இவர் அம்மன் உபாசகராதலால், அவருக்கு இவ்வூரில் சமாதி கோயில் அமைந்துள்ளது. ஆண்டுதோறும் பங்குனி மாதத்தில் கம்பன் விழா நடைபெறுகிறது. இங்கு கம்பன் குளம், கம்பன் ஊருணி, கம்பன் செய், கம்பன் நடுகல் முதலியனவும் உள்ளன.

"கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும்" என்பார்கள். கம்பர் இயற்றிய இராமாயணம் ஒரு சிறந்த தமிழ் காவியம். இதில் வீரம், காதல், ஆன்மீகம் என அனைத்தும் இருக்கும். அதனால் இன்றும் பல பகுதியில் இருந்து வரும் பொது மக்கள், கம்பர் சமாதி உள்ள இடத்திலிருந்து மண் எடுத்து தனது குழந்தையின் நாக்கில் சிறிது வைத்தால், அன்னையின் அருளால், குழந்தைகள், கல்வி, கேள்விகளில் வல்லவராவர் என்ற நம்பிக்கை கொண்டுள்ளனர்.

ஓம் சக்தி..! பராசக்தி…!!
நாட்டரசன்கோட்டை கண்ணாத்தாள்
சரணம்..!! சரணம்…!!!

ரா.பன்னீர்செல்வம்

# சித்தர் பூமி
# இடைக்காடர்
# கிரகங்களை மாற்றி

இந்த இதழில் நாம் தரிசனம் செய்ய விருக்கும் சித்தர், இடைக்காட்டு சித்தர் ஆவார்.

18 சித்தர்களின் பட்டியல் காலத்திற்குக் காலம் வேறுபட்டு நிற்பதை அறியலாம். அப்படி, அந்த வரிசையில் பதினெட்டு சித்தர்களில் ஒருவராக போற்றப்படுபவர் தான் சித்தர் இடைக்காடர் ஆவார்.

பட்டியல் வேறுபடுவதை போல இவரது காலம் என்னவென்பதும் பல வேறுபாடுகள் கொண்டதாய் உள்ளது. இவர் 2ம் நூற்றாண்டைச் சேர்ந்தவர் என்றும் இல்லையில்லை 15ஆம் நூற்றாண்டில் அவதரித்தவர் என்றும் மாற்றுக் கருத்துகள் நிலவி வருகிறது.

கால வேறுபாடு ஒருபுறமிருக்க, இவர் அவதரித்த இடம் பற்றியும் அதே நிலை நிலவுகிறது. சிவகங்கை பகுதியில் பிறந்தவர் என்று கூறுகின்ற போது அந்த பகுதியில் உள்ள இடைக்காடு என்னும் ஊரில் தோன்றியவர் என்ற கருத்தும் முன்வைக்கப்படுகிறது.

அதேபோல மலையாள நாட்டில் உள்ள இடைக்காடு என்னும் ஊரில் தோன்றியவர் என்றும் ஒரு கருத்து நிலவுகிறது.
எப்படி இருப்பினும் இவரது பாடல்களில் ஆடு, மாடு ஆகியவற்றை முன்னிறுத்தி பாடியுள்ளதால்.

இவர் ஆடு, மாடுகளைப் பாதுகாக்கும் இடையர் குலத்தில் தோன்றி, முல்லை நிலம் எனப்படும் காடுகளில் மாடுகளையும் ஆடுகளையும் மேய்த்ததால் இடைக்காடர் என்னும் பெயரை பெற்றார் என்ற கருத்தும் நிலவுகிறது.

எனினும் இவரது பாடல்களும் ஆன்மீக சக்திகள் இவர் நிகழ்த்திய செயல்களும் இவர் ஓர் சித்தர் என்பதனை மறுக்க முடியாத அளவுக்கு நிலைநிறுத்துகிறது.
எனவே, சித்தர்கள் காலங்களைக் கடந்தவர்கள் என்ற கூற்று நிலைபெறுகிறது.

இவரது பாடல்களில் “தாண்டவக்கோனே“ என்கிற வார்த்தை நிறையவே பயன்படுத்தப்பட்டுள்ளது.. அந்த வார்த்தை, ஆனந்த தாண்டவம் ருத்ர தாண்டவம் ஆடிய இறைவன் ஈசனைக் குறிக்கப்படுவது என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

பற்பல ஆலயங்களிலும் சித்திரங்களிலும் இவரது உருவம் சித்தரிக்கப்பட்டிருக்கும் பாங்கே





இவரது பெயருக்கு வலு சேர்ப்பதாய் உள்ளது.

அதாவது, இடையிலே ஒரு துணியைக் கட்டி, தாடி வைத்த மெல்லிய தேகத்தோடு இரண்டு கைகளிலும் மண் குடுவைகளை ஏந்தி இருப்பது போலவும் அவரைச் சுற்றிலும் ஆடுகள் மேய்வதைப் போலவும் சித்தரிக்கப்பட்ட சிலையும் ஓவியமும் இவரது அடையாளமாக இன்று வரை பல இடங்களில் உள்ளதை பக்தர்கள் காண்பதோடு வணங்கி வருகின்றனர்.

சித்தர்கள் அனைவருமே தன்னலம் கருதாமல் உலகம் நன்மையடையவும் மக்கள் நலம் பெறவும் இறைவனை துதித்தவர்கள் என்பது நாம் அனைவரும் அறிந்ததே!

## நம் இடைக்காட்டுச் சித்தர் அப்படி என்ன செய்தார்..?..

ஒரு மலைச்சாரலில் இவர் ஆடுகளை மேய்த்துக் கொண்டிருக்கும் வேளையில் பசியும் களைப்பும் மிகுந்த ஒரு சித்த புருஷரைக் கண்டார். அவரது வாட்டத்தைக் கண்டவர் அவருக்கு உதவ தாமே முன்வந்து, ஆட்டுப் பாலைப் பீய்ச்சி கலயத்தில் பிடித்து அதனை அந்த சித்த புருஷனுக்கு கொடுத்தார், இடைக்காடர்!

பாலை வாங்கிப் பருகி களைப்பாறிய அந்த சித்த புருஷர், ஆடு மேய்க்கும் அவருடைய கருணை உள்ளத்தை மெச்சி, சில சித்த பயிற்சிகளை இடைக்காடருக்கு போதித்தார்.

சித்த புருஷர் ஒருவருடைய போதனையால், இவர் அசாத்தியத் திறமையினைப் பெற்றார்.

சிலகாலம் சென்றபின்.... ஒரு நாள், ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்த இடைக்காடருக்கு ஒரு அதிர்ச்சியான உண்மை புரிந்தது. ஆம்... முக்காலத்தையும் உணரும் ஆற்றலை சித்தரின் மூலம் பெற்றிருந்த இவருக்கு ஞானத்தின் மூலம் நவக்கிரகங்கள் அனைத்தும் இடப்பெயர்ச்சியாகி, தோஷமுள்ள இடங்களில் அமர்ந்ததால் நாட்டில் சுமார் 12 ஆண்டுகள் பஞ்சம் பெருகி, வனமிழந்து, பல உயிர்கள் பலியாகக் கூடிய பரிதாபமும் கொடிய வறுமையும் கோரத்தாண்டவமாடப் போகிறது என்னும் அதிர்ச்சி மிகு உண்மையை உணர்ந்தார்.

“தான் ஞானத்தால் உணர்ந்த கொடுமையை யாரிடம் சொல்ல முடியும்?! அதைவிட, சில முன்னேற்பாடுகளை செய்து வைப்போம்; பிறகு நடக்க வேண்டியதைச் செய்வோம்; என நினைத்து சில முனைப்புகளை மேற்கொண்டார்!

அதன்படி, வரகரிசி போன்ற சிறுதானியங்களை சேமித்தார். நிறைய சேர்ந்ததும் அதனை மண்ணில் கலந்து நீரூற்றி பிசைந்து, அந்த மண்ணிலேயே சுவர்களைக் கட்டி, தானும் தனது ஆடு, மாடுகளும் வாழ ஒரு அருமையான- பெரிய குடிலை உருவாக்கினார்.

நாட்டில் பஞ்ச காலம் தொடங்கியது. நவகிரகங்களின் தன்மையால் மழை பொய்த்தது! விளைநிலங்கள் வறண்டு வெடித்தன. பசுமை என்பது மருந்துக்குக் கூட இல்லாமல் போனது! எப்புறம் நோக்கினும் வறட்சி, பஞ்சம்! அப்புறம் எப்படி மக்கள் நலமுடன் வாழ்வது?.. எங்கிலும் மரண ஓலங்கள்! பஞ்சம் தன் கரங்களை நீட்டி நர்த்தனமாடியது!

விண்ணுலக தேவர்களும் நவக்கிரகங்களும் தங்கள் விதிப் பயனால் மக்களின் உயிர் போவதை வேடிக்கை பார்த்தவாறு, “எல்லாம் விதிப்பயன்”! என மண்ணுலகின் நிலைகண்டு வேறொன்றும் செய்ய முடியாமல் இருந்தனர்.

அவர்களுக்கும் ஒரு அதிர்ச்சி காத்திருந்தது!

பூமியே காய்ந்து பொலிவிழந்து கிடக்கும் நேரத்தில் ஓர் இடத்தில் மட்டும் செழுமை விளையாடியது! பசுமை பூத்துக் குலுங்கியது! ஆம்! மனிதர்களில்

இடைக்காடரும் அவரது ஆடு, மாடுகளும் மட்டும் கொளுத்தும் வாட்டம் ஏதுமில்லாமல் வளமுடன் இருந்ததே அதிர்ச்சிக்கு காரணம்.

தேவர்களுக்கு... குறிப்பாக நவகிரகங்களுக்கு குழப்பம் மேலிட்டது! "எப்படி இது சாத்தியமாகும்? நாம் இருக்கும் நிலையைப் பொறுத்தே உலகில் நன்மை, தீமைகள் விளையும்! அப்படிப் பார்த்தால், பூமியில் தற்காலம் எந்த உயிர்களும் நிம்மதியாக வாழ முடியாதே! ஆனால்; அந்த இடைக்காடரும் அவரது ஆடுகளும் மட்டும் எப்படி?.... எப்படி இது நிகழ்கிறது?" என்ற குழப்பம் மேலிட நவக்கிரகங்கள் கூடி ஆலோசனை செய்தனர்.

விரைவில் நவக்கிரகங்கள் பூமிக்குச் சென்று, தாங்கள் விதித்த விதியிலிருந்து நீங்கள் தப்பியது எப்படி என்று இடைக்காடரிடமே கேட்டு விடலாம் என முடிவு செய்தனர்!

சரி... இதெல்லாம் இருக்கட்டும்! இடைக்காடரும் அவரது ஆடுகளும் பஞ்சத்திலிருந்து தப்பியது எப்படி?...

இதில்தான் இடைக்காடரின் சூட்சம அறிவு உள்ளது. கொடிய கோடையிலும் தண்ணீர் இல்லாமல் வளரக்கூடிய எருக்கஞ் செடிகளை நிறைய வளர்த்து வைத்தார் இடைக்காடர்! பசியில் வாடிய ஆடுகள் எருக்கு இலைகளை வேறுவழியின்றி சாப்பிட பழகிவிட்டன. அவைகளுக்கு எருக்கிலைகளே உணவானதால் அதனை உண்டு, பசியாறி, கொழுத்தன.

எருக்கு இலை, ஏற்படுத்திய அரிப்பால் ஆடுகள் அனைத்தும் உடல் அரிப்பை தீர்க்க மண் சுவரில் உரசின. அவை அப்படி உரசும் போது ஏற்கனவே மண்ணில் கலந்து வைத்திருந்த வரகு அரிசிகள் உதிர்ந்தன. அவற்றை எடுத்து ஆட்டுப் பாலைக் காய்ச்சி இடைக்காடர் உண்டார்! இதுவே செழிப்பின் ரகசியம்!

நவகிரகங்கள் இடைக்காடரின் குடிலுக்கு வந்தனர். அவர்களை பூரிப்புடன் வரவேற்ற இடைக்காடர், " நவகிரகங்களின் வருகையால் என் குடில் குபேரபுரியானது" என்று கூறி, அவர்கள் மறுக்க மறுக்க ஆட்டுப்பால் கலயத்தில் கரந்து காய்ச்சி அனைவருக்கும் கொடுத்தார்!

எருக்கு இலைகளை சாப்பிட்ட ஆடுகள் கொடுத்த பால் என்பதால் அந்த பால் மனிதர்களுக்கு மயக்கத்தை உண்டு பண்ணி விடும் தன்மை வாய்ந்தது.

எனவே அந்த பாலைக் குடித்த நவகிரகங்கள் மெல்லமெல்ல மயங்கிச் சாய்ந்தனர். இவர்களால் தானே ( அதாவது கிரக நிலை) இத்தனை பஞ்சமும் வறட்சியும்?.... அதனால், இடைக்காடர் ஒரு உபாயம் செய்தார்.

நவகிரகங்கள் எந்தெந்த இடங்களில் இருந்தால் நாட்டில் மழை பெய்து செழிப்பு உண்டாகுமோ அந்தந்த இடங்களில், மயங்கிக் கிடந்த ஒன்பது கிரகங்களையும் இடம் மாற்றிப் போட்டு சரி செய்தார்.

பிறகென்ன...?... தேவையான அளவுக்கு மழை வெளுத்துக் கட்டியது! நவகிரகங்கள் சரியான இடங்களில் சஞ்சாரம் செய்ததால் நாடெங்கும் வளம் கொழிக்கும் நிலை ஏற்பட்டது!

மயக்கம் தெளிந்து எழுந்து பார்த்த நவகிரகங்கள் தங்களின் நிலையைப் பார்த்து, குழம்பினர். "தங்களை மயங்க வைத்து, இடம் மாற்றிப் போட்டு விதியையே மாற்றி விட்டாரே இந்த இடைக்காடர், என நினைத்த அவர்கள் இடைக்காடரின் சூட்சம அறிவை எண்ணி வியந்தபடி வானகம் சென்றனர்.

நாடே செழிப்பானது! மக்கள் பஞ்சம் நீங்கி வளமுடன் வாழ தலைப்பட்டனர். இதுவே அவரது மகிமை. இவர் பாடிய பாடல் ஒன்றில் இப்படி குறிப்பிடுகின்றார்.

"மனமென்னும் மாடடங்கில்
தாண்டவக்கோனே!... முத்தி
வாய்த்ததென்று எண்ணேடா
தாண்டவக்கோனே"...

தன்னுடைய பாடல்களில் தான் மேய்க்கின்ற மாடுகளையோ, ஆடுகளையோ உதாரணமாக காட்டும் வழக்கம் இவரிடம் இருந்தது. அப்படித்தான்....

கட்டுப்பாடின்றி திரிந்து, கண்டபடி மேய்கின்ற மாடு போன்றது மனம் என்றவர் அந்த மனம் அடங்கி விட்டால் முக்தி வாய்த்ததென்று எண்ணுவோம்.... என அந்த ஆண்டவனிடம் சொல்வதுபோல் சொல்கிறார்.

இதன் மூலம்.... மனதை அடக்கி ஆளுகின்ற மனிதன் முக்தியடையலாம் என்ற சூட்சமத்தை உணர்த்துகின்றார். இதேபோல, மற்றொரு பாடலில்..... " சினமென்னும் பாம்பிறந்தால் தாண்டவக்கோனே! - யாவும் சித்தியென்றே



நினையேடா தாண்டவகோனே! என்கிறார்.

உலகப் பொதுமறை தந்த வள்ளுவருங்கூட, “சினமென்னும் சேர்ந்தாரைக் கொல்லி“ எனத் தொடங்கும் ஒரு குறளின் மூலம் சினம் கொண்டவர்களை அது சாகடித்தே விடும் என்பதனை வலியுறுத்துகின்றார்.

அதே கருத்தினை வேறுவிதமாக குறிப்பிடும் இடைக்காடர், கோபம் என்னும் பாம்பு இறந்து போனால் எல்லாமே வெற்றியாகும் என்கிறார்.

பாம்பானது தீண்டினால் கடிபட்டவர் மரணம் உறுதியாகிவிடும். கோபமும் அப்படிப்பட்டதுதான். நம்மில் சினம் இருந்தால் அது நிச்சயம் இழிவான மரணத்தை கொடுத்து விடும் என்ற இடைக்காடர், அந்தச் சினம் என்னும் பாம்பு இறந்து விட்டால், அதாவது கோபம் நம்மை விட்டு போய் விட்டால் அதன் பிறகு நினைப்பவை எல்லாமே வெற்றியாகும் என்னும் உயரிய தத்துவத்தை சொல்லியிருக்கிறார்.

இப்படி மக்கள் நலமும் வளமும் பெறும் வண்ணம் பாடல்களை எழுதி, உலக நன்மைக்காக நவக்கிரகங்களை மாற்றி வைத்த இடைக்காடரின் தலம் திருவண்ணாமலை என்பது ஆய்வாளர்களின் அறுதியிட்ட முடிவாய் உள்ளது. அதுமட்டுமின்றி. திருவாரூருக்கு அருகில் இருக்கும் திருக்கொள்ளம் புதூரில், சில ஆண்டுகளுக்கு முன் இடைக்காடரின் ஜீவசமாதி என ஓர் இடத்தைக் கண்டறிந்திருக்கிறார்கள். முன்னரே நாம் குறிப்பிட்டுள்ளபடி சிவகங்கை மாவட்டம் இடைக்காட்டூரிலும் இவர் சமாதி அடைந்ததாகவும் நம்பப்படுகிறது.

இது எப்படி சாத்தியமாகும்?!..

ஆகும். சித்தர்கள் தூல உடம்பு, சூட்சம உடம்பு என ஒரே நேரத்தில் பல இடங்களில் தரிசனம் கொடுக்கும் தன்மை வாய்ந்தவர்கள். அப்படியே, ஒரே சித்தர் பல இடங்களில் ஜீவசமாதி அடைந்து இருப்பதும் ஏற்புடையதே!

சித்தர்கள் தங்கள் பூதவுடலை மண்ணுக்குள் மறைத்தாலும் அவர்களது ஜீவன் எல்லா இடங்களிலும் வியாபித்து நாடி வந்து வேண்டி வருவோர் தம் குறைகளை கடவுளை விடவும் கடுகிய நேரத்தில் தீர்த்துவைக்கும் வினோதமான உண்மை நிகழ்ந்து கொண்டேதான் இருக்கிறது.

இத்தனை சிறப்பும் வளமையும் கொண்டு, உலக மக்களின் நலன் காத்துவரும் சித்தர் இடைக்காடரை மனதால் தியானித்து அவர்தம் பாடல்களை கற்று, அதன்படி நின்று உயரிய நிலையை அடைவோம்.

சுந்தர மைந்தன்



# சிறப்புமிகு சித்ரா பௌர்ணமி!!

தமிழ் மக்கள் ஒவ்வொரு மாதமும் வரும் பௌர்ணமி தினத்தையும் இறை வழிபாட்டிற்குரிய நாளாக கருதுகின்றனர். சித்திரை மாதத்தில் வரும் பௌர்ணமியை சித்ரா பௌர்ணமி என்று கொண்டாடுகிறார்கள். மற்ற எந்தப் பௌர்ணமிக்கும் இல்லாத சிறப்பு சித்ரா பௌர்ணமிக்குஉண்டு. அனைத்து மாதங்களிலும் பௌர்ணமியில் முழுநிலவு அழகாகப் பிரகாசித்தாலும் அதில் உள்ள களங்கங்கள் மிக மெலிதாகக் காணக்கிடைக்கும். ஆனால் சித்ரா பௌர்ணமி அன்று நிலவு தனது கிரணங்களை பூரணமாகப் பொழிந்து. கொஞ்சம்கூட களங்கமே காணப்படாமல் காட்சி அளிக்கும் அதனால் தான் சித்ரா பௌர்ணமி சிறப்பு வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. அதோடு தமிழ்ப்புத்தாண்டில் முதன்முதலாக வரும் முழுநிலவு நாள் என்பதாலும் இதற்கு இன்னும் சிறப்பு கூடுகிறது.

சித்ரா பௌர்ணமி அன்று எல்லா கோயில்களிலும் சிறப்பு வழிபாடுகள் நடைபெறும். மேலும் சில கோயில்களில் சித்திரை திருவிழாக்கள் நடத்தப்பட்டு பௌர்ணமி தினம் சிறப்பு அபிஷேக, ஆராதனை செய்யப்படுகிறது. சித்ரா பௌர்ணமி அன்று வறண்ட ஆற்றில் ஊற்று தோண்டி அதற்கு திருவூறல் என்று பெயர் சூட்டி, அங்கே இறைவனை வலம் வரச் செய்வார்கள். சித்திரை மாதத்தில் தாராளமாகக் கிடைக்கும் மா, பலா, வாழை போன்ற பழங்களை இறைவனுக்கு படைத்து பூஜிப்பார்கள். இந்த நாளில் உறவினர்கள், நண்பர்கள் எல்லோரும் ஒன்றிணைந்து ஆற்றங்கரையில் பாடி, மகிழ்ந்து உண்பதும் தொன்று தொட்டு வரும் வழக்கமாகும். வெயிலின் தாக்கத்தை சமாளிக்க இப்படி நீர்நிலைகளுக்கு அருகில் மக்களை வரவழைப்பதே இந்த சித்ரா பௌர்ணமியின் விஞ்ஞான பூர்வமான உண்மையாகும்.

தந்தையை இழந்தவர்கள் ஆடி அமாவாசை அன்று விரதமிருந்து வழிபாடு செய்வதைப் போன்று, தாயாரை இழந்தவர்கள் சித்ரா பௌர்ணமி விரதமிருந்து வழிபாடு செய்வதன் மூலம் தாயின் ஆன்மா இறைவன் திருவடியில் அமைதி பெறும் நன்னாளாக அமைகின்றது.

## புராணங்களில் சித்ரா பௌர்ணமி:

இந்திரன் பாபவிமோசனம் வேண்டி அனைத்து சிவஸ்தலங்களையும் சென்று வணங்கி வரும் நிலையில், மதுரை சொக்கநாரைத் தரிசித்து பாவ விமோசனம் பெற்ற புண்ணிய நாள் சித்ராபௌர்ணமி அன்று தான், இராமர் சீதா, லெட்சுமணன் வனவாசம் முடிந்து நாடு திரும்பியதும் சித்ரா பௌர்ணமி அன்று தான் என புராணங்கள் கூறுகின்றன.

## சித்ரா பௌர்ணமி அன்று நடைபெறும் முக்கிய நிகழ்வுகள்:

சித்ரா பௌர்ணமி அன்று எல்லா சிவாலயங்களில் விழா கொண்டாப்படுகிறது. மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் கோயிலுக்கு ஒவ்வொரு வருடமும் சித்ரா பௌர்ணமி நாளில் இந்திரன் வந்து வழிபடுகிறார் என்று திருவிளையாடல் புராணம் கூறுகிறது. அதனால் தான் சித்ராபௌர்ணமி மதுரையில் சிறப்பாகக் கருதப்படுகிறது.

மதுரையில் சித்ரா பௌர்ணமி அன்று கள்ளழகர் ஆற்றில் இறங்கி பக்தர்களுக்கு தரிசனம் தருவது ஆண்டு தோறும் நிகழும் சிறப்புமிக்க திருவிழாவாக நடைபெறும்.

கன்யாகுமரியில் அன்று மட்டும் ஒரே நேரத்தில் சூரியன் மறைவதையும் சந்திரன் தோன்றுவதையும் கண்டு மகிழலாம்.

திருவண்ணாமலையில் சித்ரா பௌர்ணமி அன்று கிரிவலம் வருவது பிரசித்தி பெற்றதாக இருக்கிறது. சித்ராபௌர்ணமி நாளில் ஸ்ரீராமாநுஜருக்கு வரதராஜப் பெருமாள் காட்சி அளித்து அருள்பாலித்த வைபவத்தைக் கொண்டாடும் விதமாக காஞ்சிபுரம் ஸ்ரீவரதராஜப் பெருமாள் 'நடவாவி' என்னும் கிணற்றுக்குள் எழுந்தருளும் திருவிழா நடந்து வருகிறது.

## சித்ர குப்தனின் அவதாரம்:

சித்ர குப்தன் அவதரித்த நாளும் இன்றுதான். அவர் சிவன் வடித்த சித்திரத்தைக் கொண்டு உருவாக்கப்பட்டதாலும், சித்திரை மாதத்தில் பிறந்ததாலும் சித்ர குப்தன் என்று அழைக்கப்படுகிறார். கல்வி வேள்விகளில் சிறந்தவரான சித்ர குப்தனை தகுந்த வயதில் எமதர்மனிடம் அனுப்பி, மனிதர்களின் பாவ, புண்ணியங்களை நெறி தவறாமல் எழுதி, எமனுக்கு உதவி செய்யும்படி பணித்தார் சிவபெருமான் என்கிறது புராணம்.


## சித்ர குப்தன் பூஜை:

சித்ரா பௌர்ணமி அன்று காலையில் வீட்டின் பூஜை அறையில் ஒரு மனையில் மாக்கோலம் போட்டு சித்ர குப்தன் படம் வரைந்து

"மலையத்தனை பாவம் செய்திருந்தாலும் கடுகளவு புண்ணியத்தை கொடுக்க வேண்டிக் கொள்கிறோம்" என்று ஒரு காகிதத்தில் எழுதி அதனை மனை மேல் வைத்து பூஜை செய்து...

"சித்ர குப்தம் மஹாப்ராக்ஞம் லேகனீபுத்ர தாரிணம். சித்ரா ரத்னாம்பரதாரம் மத்யஸ்தம் ஸர்வ தேஹினாம்"

என்ற சித்ரகுப்தரின் ஸ்லோகத்தை தியானம்



செய்து தீபம், தூபம் மற்றும் பூக்களால் அர்ச்சிப்பதுடன், சித்திரகுப்தருக்கு பிரியமான சித்ரான்னங்களான தேங்காய் சாதம், தயிர் சாதம், உளுந்து வடை ஆகியவற்றை நிவேதனம் செய்ய வேண்டும்.

நாம் செய்த தவறுகளை மன்னிக்க மனதார பிரார்த்தனை செய்ய வேண்டும். சித்ரா பவுர்ணமி அன்று காலை விரதத்தை ஆரம்பித்து "ஓம் சித்ரா குப்தாய" என்று நமக்கு முடிந்தவரை சொல்ல வேண்டும்.

ராகு பகவான் சித்ரகுப்தனுக்கு கட்டுப்பட்டவர். ராகு தோஷம் உள்ளவர்களும், திருமணம் தடைபட்டவர்களும் சித்ர குப்தனை வழிபட்டால் ராகு தோஷம் நீங்கும், சித்ரகுப்தனை வணங்கினால் சிந்தனையில் தூய்மை ஏற்பட்டு, பாவ புண்ணியம் பற்றிய அறிவு கிடைக்கும் இதனால் மேலும் பாவம் செய்யாமல் இருக்கலாம் என்பது ஐதீகம்.

அன்றைய தினம் உப்பில்லாமல் உணவருந்தி, பசும்பால், பசு நெய், பசுந்தயிர் தவிர்த்து சித்திரா பௌர்ணமி விரதம் இருந்து ஒரு மூங்கிலாலான முறத்தில் அரிசி, வெல்லம், மாங்காய், ஒரு நோட்டுப்புத்தகம், பேனா

முதலியவையும் தானம் செய்யலாம்.

இந்தியாவில் பதினொரு இடங்களில் சித்ரகுப்தருக்குத் தனிக் கோயில் இருந்தாலும், தென்னகத்தில் காஞ்சிபுரத்தில் மட்டும்தான் கோயில் உள்ளது.

## சித்திரகுப்தர் மூல மந்திரம்:

"சித்ரகுப்தம் மஹா ப்ராக்ஞம். லேகணிபத்த தாரிணம் சித்தர ரக்னாம்பரதரம் மத்யஸ்தம் ஸர்வ தேஹினாம்"

நல்ல அறிவாற்றலையும் திறமையான சிந்தனையையும் கொண்டவரே, எழுத்தாணி, ஏடு இவைகளை கையில் தாங்கிக் கொண்டிருப்பவரே, நவரத்தினத்தாலான உடையை அணிந்து இருப்பவரே, அனைத்து உயிர்களையும் ஏற்றத்தாழ்வு பார்க்காமல் நடுநிலைமையுடன் நீதி கூறும் அரசராக இருப்பவரே, சித்திரகுப்தனானா உன்னை மனதார வணங்குகின்றோம்.

இந்த ஸ்லோகத்தை சித்ரகுப்தனை மனதார நினைத்து வழிபடுவதன் மூலம் நம் மனமானது மரணபயத்திலிருந்து நீங்கும்.

## சித்ரகுப்தர் காயத்ரீ மந்திரம்:

"ஓம் தத்புருஷாய வித்மஹே
சித்ரகுப்தாய தீமஹி
தன்னோ லோகஹ் ப்ரசோதயாத்"

இந்த காயத்ரீ மந்திரத்தை சொல்லி வணங்கினால் ராகு, கேது தோஷமும், ஆயுள் ரீதியான தோஷங்களும் விலகும்.




KABA SURA

KUDINEER

15 herbs effective against Viral infections, fever, cough and breathing difficulties

Call: 88702 88701

தமிழ் வசந்தன்

# சித்திரைப் பெண்ணே!



சித்திரையின் பால்கிண்ணம்
சிந்துகின்ற ஒளிவெள்ளம்
சீர்மேவும் இன்பம் தருமே!

சத்தமின்றி தென்றலுக்கு
சந்தமுடன் இசைக்கூட்டி
தாலாட்டும் கவிகள் வருமே!

முத்தமிடும் கடலலைமேல்
முகங்காட்டும் முழுநிலவின்
மோகனத்தை உலகு தொழுமே!

முத்துநிகர் காதலியை
முறையாகக் கரம்பற்றி
மாலையிடும் மாதம் இதுவே!

கத்திமுனை கீறுதல் போல்
கதிரவனின் கிரணங்கள்
சுட்டெரிக்கும் நேரம் மிகுமே!

தத்திவரும் தென்றலது
தழுவிடவே களைப்பெல்லாம்
காணாமல் போகும் இரவே!

முத்தமிழின் முதல்மாதம்
முனோர்தம் ஆசியுடன்
மோகங்கள் ஆளும் மனமே!

பத்தோடு பதினொன்று
பண்பாடு புகழ்பெறவே
சித்திரைப் பெண்ணே வாழ்கவே!



# வனவாசம் முதல் இலங்கை போர் முடிய....!

"தருவனம் சேரல் பொன்னுழை கோறல்
ஜானகி இலங்கையின் ஏறல்
எருவை மெய் விள்ளல் கதிர் மகன் நள்ளல்
இந்திரன் மகன் உடல் தள்ளல்
பொருதிரை தாவல் இலங்கைத் தீமேவல்
போரிடை ராவண கும்ப கருணர்
போய் ஒவல் எனுமிவை ராம கதையிடைப் பொதிவுடை பொருளே"

## இதன் சுருக்கப்பொருள்

இராமன் மரங்கள், காட்டிற்கு செல்லல்; பொன்மானைக் கொல்லுதல்; சீதாபிராட்டி இலங்கையில் அமர்தல்; ஜடாயு (கழுகு) தேகத்தை விட்டு செல்லுதல்

சூரிய புத்திரன் சுக்ரீவன் ராமரை நட்புக் கொள்ளுதல்;

இந்திர புத்திரன் வாலி தேகத்தை விட்டு செல்லுதல்;

மோதிக் கொண்டிருக்கும் கடலை அனுமன் தாண்டுதல்;

இலங்கையில் நெருப்புப் பற்றுதல்

சண்டையில் இராவணன் கும்பகர்ணர் இறத்தல்;

ஆகிய இவையே இராமாயணப்பாடலின் கருப்பொருட்கள்!

இதனை சொற்பொழிவு ஒன்றில் கேட்டு ரசித்தவர்-

ஆர். பரஞ்சோதி

# சித்தர்கள் பார்வை



கடவுளைப்பற்றி சித்தர்களுக்கு என்றுமே தனிப்பட்ட பார்வை உண்டு! அது மட்டுமன்றி, மக்கள் நலமுடன் வாழவும் நோய்களிலிருந்து விடுபடவும் நிம்மதியுடன் வாழ்ந்து இறை நிழலில் சரண் புகவும் தங்களின் ஞானத்தால் உணர்ந்த விஷயங்களை பாடல்களாய்ப் பாடி இந்த பூமிக்கு கொடுத்துச் சென்றிருக்கிறார்கள்.

இந்த சித்திரை சிறப்பிதழிலிருந்து “சித்தர்கள் பார்வை“ என்னும் இத்தொடரில் பதினெண் சித்தர்கள் தொடங்கி, இன்றுவரை சித்தர்கள் அருளிய ஞான போதனைகளை நமது வாசகர்களுக்கு வழங்குவதில் பெருமை கொள்கிறோம்.

உலக மாந்தர் சுகமுடன் வாழ, வார்த்தைகளில் வண்ணம் குழைத்து, தம் எண்ண தடாகங்களில் மிதக்க விட்ட எத்தனையோ மலர்களாய் பாடல்கள் பல விரவிக் கிடக்கின்றன.

அந்த ஞான மலர்களில் புதைந்த ரகசிய புதையலாய்- மணம் வீசும் மகரந்தங்களை உங்கள் திருமுன் தருவதில் மகிழ்ச்சியே! .....

முதலாவதாக, தனது சிந்தையில் உதித்த மங்கல கருத்துகளை மந்திரமாய் மாற்றி, “ திருமந்திரம்! என்னும் பெயரில் நமக்களித்த திருமூலர் தம் பாடல்களில் சிலவற்றை பார்ப்போம்.

”ஒன்றே குலம், ஒருவனே தேவன்”

ஜாதி, மதம் என்ற எந்த பிரிவும் இல்லை என்னும் கருத்தினை மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே முழக்கமிட்ட சிந்தனையாளர் திருமூலர் என்றால் அதில் வியப்பில்லை! இவர் ஒரு வகையில் புரட்சியாளர் என்றால் கூட அதில் சிறிதளவும் ஆச்சரியமில்லை. திருமூலர் பின்வருமாறு பாடலைப் புனைந்துள்ளார்.

"ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
நன்றே நினைமின்; நமன் இல்லை நாணாமே
சென்றே புகும் கதி இல்லை; நும் சித்தத்து
நின்றே நிலைபெற நீர் நினைந்து உய்மினே".

இப்பாடலில் மனிதன் உள்ளிட்ட உயர் குணம் கொண்ட அனைத்தும் ஒரே குலம் என்று அவர் இந்த உயிர்களைப் படைத்த இறைவனும் ஒருவனே என்கிறார். குல வேறுபாடு மனிதரிலும் இல்லை; கடவுளிடம் கூட வேறுபாடு இல்லை என்று.... எதனாலும் வேறுபாடு கூடாது என விளக்குகிறார்.

அடுத்த அடியில், திருமூலர் உணர்த்தும் கருத்து யாதெனில், குலம் ஒன்று தான் என எண்ணத் துணிந்து விட்டால் மனிதன் வேற்றுமையோ விகற்பமோ இல்லாமல் இருப்பான்!

அப்படி நினைக்கும் பக்குவம் பெற்று விட்டால் எமனுலகு போய் அவதிப்பட வேண்டாம்; தூய, உயரிய உள்ளத்தில் ஏற்படும் இந்த நற்சிந்தனையே, எமனைக்கூட நம்மிடம் நெருங்க விடாது! இதனை மனதில் கொள்ளுங்கள் என்கிறார்.

ஒன்றே குலம்; ஒருவனே தேவன் என்ற இந்த உயரிய சிந்தனையை நெஞ்சில் நிறுத்தி, ஊன்றி, உணருங்கால் இன்றைக்கு நாட்டில் நடைபெறுகின்ற சாதி, சமய பேதம் என்கிற சச்சரவுகளுக்கெல்லாம், சவுக்கடியாய்த் திகழ்கின்றது. பிற்காலத்தில் இப்படி எல்லாம் நடக்கும் என முன்னரே உணர்ந்து, திருமூலர் அன்றே இந்த சவுக்கை சொடுக்கியுள்ளார் என நாம் புரிந்து கொள்ள வேண்டும்!

அடுத்ததாக, நமக்கு சில கேள்விகள் எழலாம். சித்தர்கள் நித்தநித்தம் வணங்கிய தெய்வம் எது? அவர்கள் சென்று வணங்கிய கோவில் எங்கு உள்ளது? அதனை எப்படி வணங்க வேண்டும்? இவற்றுக்கான பதிலை இன்னொரு பாடல் மூலம் உணர்த்துகின்றார்!

"உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்
வள்ளல் பிரானார்க்கு வாய்கோ புரவாசல்
தெள்ளத் தெளிந்தார்க்கு சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலன் ஐந்தும் காளா மணிவிளக்கே"

என்கிற இந்தப் பாடல் மூலம் நாம் வியந்து, போற்றி வணங்க வேண்டிய கோயில் நமது உள்ளம் தான் என்று சொல்பவர், தசைகளால் கட்டுண்டு கிடக்கும் நமது உடம்பே ஆலயம் என்கிறார். இங்கே திருமூலர் "ஆ"லயம் என்று குறிப்பிடுவது யாதெனில் ஆன்மா லயித்திருக்கும் இடம் என அறியப்படுகிறது.

அதாவது நமது உடம்பில் தான் ஆன்மா என்கிற ஆண்டவன் உறைக்கின்றான்; நமது வாய்தான் கோபுரவாசல் என்கிறார். வாய் எப்படி கோபுர வாசலாகும்? இறைவன் உள்ளே...

அதாவது மனதினுள்ளே ஆன்மாவாக குடியேற வேண்டும் எனில் அவன் நாமத்தை சொல்ல வேண்டும்.

வாயால் அவனது திருநாமத்தை சொல்லும் போது அதையே வாசலாக கொண்டு இறைவன் நம் உள்ளே வருகிறான் என்று பொருள் கொள்ளலாம்.

அடுத்து, தெள்ளத் தெளிந்த ஞானியர்க்கும் மகான்களுக்கும் மட்டுமே தெரிந்த ரகசியம் என்னவென்றால் அவர்களது ஜீவன் அதாவது அவர்தம் ஆன்மாவே சிவலிங்கம் என்கிறார். எனவே வாயால் இறைவனின் திருநாமத்தைச் சொல்லி ஆன்மாவாக அவனை அமரச் செய்ய வேண்டும்.

அப்படி இறைவன் வந்தமர்ந்து விட்டால், நமது உடம்பு தானே ஆலயம்! எனவே கோயில் என்பது நமது உடல் என்றும் இந்த உடலே மறைந்தாலும் அழிவற்று இருக்கும் நிலையான ஆன்மாவே இறைவன் என்பதையும் உணர்த்துகின்றார்.

அப்படியானால், இன்றிருக்கும் ஆலயங்கள்??.... அதனையும் தன் பார்வையில் விளக்குகின்றார்.

"படமாகக் கோயில் பகவற்கு ஒன்று ஈயில்
நடமாடக் கோயில் நம்பர்க்கு அங்காகா
நடமாடக் கோயில் நம்பர்க்கு ஒன்று ஈயில்
படமாடக் கோயில் பகவற்கு அதாமே,"

எனக் குறிப்பிடுகின்றார்.

திருமூலர் படமாடும் கோவில் என்று குறிப்பிடுவது, இறைவனை சித்திரமாகவும் சிலையாகவும் மாற்றி, நாம் கட்டியிருக்கும் கோயில்கள்.

அந்தக் கோயில்களிலே இறைவனுக்கு என்று நாம் அர்ப்பணிக்கும் எந்த ஒரு பொருளும் அர்ப்பணித்தவருக்கு எந்த

பலனையும் தராது! இறைவனை மனதில் இருத்தி நடமாடுகின்ற அடியவர்களின் உள்ளம் தான் உண்மையான கோவில்! அந்த கோவிலில் உறையும் இறைவனுக்கு....

அதாவது, அடியார்கள் மனதில் குடியிருக்கும் இறைவனுக்கு நாம் அர்ப்பணிக்கும் எதுவும் இறைவனை நிச்சயம் சென்றடையும் என்று இப்பாடலில் கூறுகிறார்.

படமாகக் கோவில் என்பது இன்றைக்கு கட்டப்பட்டிருக்கும் ஆலயங்களையும், நடமாடக் கோவில் என்பது, நமது கண் முன்னே நடமாடும் அடியவர்கள் என்பதையும் குறிக்கிறது.

இறைவனுக்கு எதையாவது செய்ய வேண்டுமெனில் உண்மையான அடியவர்களுக்கு செய்யுங்கள் என்பதே இதன் பொருளாகும்.

மேற்கண்ட பாடல்களில் நமது உடம்பு தான் இறைவன் உறைகின்ற ஆலயம் என்பதை உணர்த்தியவர் இன்னொரு பாடலில்,

"உடம்பார் அழியின் உயிரார் அழிவர்;
திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார்;
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தேன்;
உடம்பை வளர்த்தேன்; உயிர் வளர்த்தேனே!"

எனக் குறிப்பிடுகிறார்.

நம் உடல் என்னும் கோவிலில் தான் இறைவன் உறைகிறான். எனவே, நமது உடம்பு அழிந்து விட்டால், நமது உடலைப் பராமரித்து பாதுகாக்காவிட்டால் உடல் அழிந்து உடலில் இருந்து, ஜீவன் என்னும் உயிர் போய்விடும்! அப்படி..... உடல் அழிவதால் உயிரும் பறந்து விடும்; இதனால் மெய்ஞ்ஞானம் என்கிற உயர் நிலையை அடையாமலேயே அழிவை ஏன் தேட வேண்டும் என்றவர், உயிர் என்கிற ஆன்மா, நாம் ஞானமும் முக்தியும் அடையும் வரையில் ஜீவன் போகக் கூடாது என்றால் உடலை நன்கு பராமரித்துக் காக்க வேண்டும்.

அதாவது.... உடலுக்குத் தீங்கு விளைக்கும் எதையும் தீண்டக் கூடாது என்றும் உடலை வளர்க்கும் உபாயம் என்ன என்பதை அறிந்து நடந்தால் உடம்பை நல்ல முறையில் வளர்ப்பதன் மூலம் உயிரையும் வளர்க்கலாம் என்கிறார்.

இப்படி எல்லாம் பாடிய திருமூலர், தன்னை இறைவன் எதற்காக படைத்தான்? என்பதையும் கூறுகிறார். ஒவ்வொரு உயிரின் படைப்பிற்கும் ஒரு காரணம் இருக்கும் என்பதை அனைவருமே அறிவோம். அதன்படி,

"பின்னை நின்றென்னே பிறவி பெறுவது
முன்னை நன்றாக முயல் தவம் செய்கிலர்!"....

இந்த அடிகளில் முற்பிறவியில் முயன்று தவநெறியில் ஒழுகாதவர்கள் அடுத்தடுத்து பிறகு எடுக்கின்றனர். நான் முற்பிறவியில் நான் முறையாக தவம் செய்யவில்லையோ? "என ஐயப்படுபவர், தானே முயன்று ஒரு முடிவுக்கு வருகிறார்.

"என்னை நன்றாக இறைவன் படைத்தனன்,
தன்னை நன்றாகத் தமிழ்ச் செய்யுமாறே"....

என்கிறார். அதாவது, இறைவன், தன்னைத் தமிழில் பாடிப் போற்றுவதற்காகவே என்னைப் படைத்தான், என்கிறார்.

மேற்கண்ட பாடல்கள் மூலம், நம் உடலே கோவில் என்றும் உள்ளுறையும் ஆன்மாவே இறைவன் என்றும் கோவிலில் உறையும் இறைவனை விட, கண்முன் நடமாடும் இறைவனின் அடியார்களை ஆராதிக்க வேண்டும் என்றும் கூறியவர். ஒவ்வொரு பிறவிக்கும் அதாவது, எந்த ஒரு உயிருக்கும் படைக்கப்பட்டதின் நோக்கம் ஒன்று இருக்கும் என்றும் தன்னை தமிழால் பாடவே இறைவன் என்னைப் படைத்தான் என்றும் கூறுகிறார்.

இன்னும் திருமூலரது சமூகக் கருத்துக்கள் நிறைந்த பாடல்களை தொடர்ந்து பார்ப்போம்.

(தொடரும்...)

கவிஞர்.சீனு. செந்தாமரை
கடலூர்



# சென்றவையும் வென்றவையும்

முத்தேக சித்தி பெற்ற அருளாளர்கள் அவதரித்த மண்ணில் நாமும் பிறந்துள்ளோம்!

ஞான பூமியாகிய இம்மண்ணில்தான் எத்தனையோ சித்தர்கள், யோகிகள்- மகரிஷிகள் ஆன்றோர்கள், மெய்ஞானிகள் அவதரித்து அருள்மழை பொழிந்துள்ளனர்.

வாழையடி வாழையாக வந்து போனவர்கள் வாஞ்சை மிகு நெஞ்சங்களுடன் நாம் வாழும் உலகிற்காக ஜீவ முக்தி அடைந்துள்ளனர்.

எங்கெங்கு காணினும் ஏராளமான கோயில்கள்... அறநெறியே தெய்வ நெறிஎன உணர்த்திய நம் முன்னோர்கள் அவர்கள் காட்டிய வழியில் சென்றவர்கள் தானே நாம்!

சிறுவனாவோ- சிறுமியாகவோ இருக்கின்ற காலத்தில் நம் கரம் பிடித்து அழைத்துச் சென்ற நம் தாத்தா பாட்டியை கொஞ்சம் நினைத்து பாருங்கள்.

விழிகளில் கண்ணீர் வரும். பிரம்மாண்டமான கோயில்கள்- கம்பீரமான தேர், வேத மந்திரங்கள்- நாத நல்லிசை தேவார திருவாசக பதிகங்கள், காதலாகி கசிந்து கண்ணீர் மல்க இறைவனை தரிசிக்கும் அடியவர்.... அப்பப்பா...

தாத்தா இவ்வளவு பேரும் இங்கு வருகிறார்களே எதற்காக? என்று நானும் கேட்டதுண்டு. அதற்கு என் தாத்தா சொன்னவை பிரசாதம் வாங்க அப்படி வருகிறார்கள் என்று புன்னகைத்தவாறே கூறினார்.

பிரசாதம் பசிக்கு சாப்பிடுவதற்கு அல்ல. நம் ஞானப் பசியைத் தீர்க்கும் அருளமுது. இதை வீணாக்கக் கூடாது என்பதற்காகவே சிறிதளவே தருகிறார்கள்.

உலகுக்கே படியளக்கும் பெருமானாகிய ஈசன் நமக்கும் அருள் பாலிக்கின்றார் என்பதை உணர்த்தவே பன்னெடுங்காலமாகவே நடைமுறையில் உள்ளது.

இத்தகைய பிரசாதங்கள் மிகுந்த மணம் கொண்டவையாக உள்ளது. தாத்தா வீடுகளில் படைக்கும் உணவுகள் இது போன்ற மணம் இருப்பதில்லை என்று கேட்டேன்.

கோயில் தெய்வ மணம் கமழ்வது, இறைவன் அருள் நீக்கமற நிறைந்துள்ளது. எல்லாமே ஈசன் அருளால் ஈர்க்கப்படும் ஆனந்த ஆலயம்.

மிகுந்த பக்தி சிரத்தையுடன், ஆத்மார்த்த பக்தியுடன்- சுவாமிக்கு படைக்கும் பொருள் என்பதால் மிகுந்த கவனமுடன் மனதில் பகவானை வழிபட்டால் அனைத்து பிரசாதங்களும் ஒரு தெய்வீக மணம் அமைந்துவிடுகிறது. இதுவே காரணம் என்றார் தாத்தா.

அன்று முதல் ஞான வெளிச்சம் என் மேல் பட தொடங்கியது.... பிரசாதம் பிரம்மாண்ட கோயிலில் உறையும் பரம்பொருள் தந்த தின் பொருளல்ல தன்னருள் தரும் பெரும் பொருள்.

அன்று கரம்பிடித்த தாத்தா. என் தாத்தா அல்ல- தாத்தா வடிவில் வந்த மெய் ஞான சித்தர் இதை உணர பல ஆண்டுகள் தேவைப்பட்டது.

ரா.பன்னீர்செல்வம்

## அரிய ஆன்மீகத் தகவல்

# கம்பத்தில் தோன்றிய கந்தன்!

**திருவண்ணாமலை!**

வேத நாயகனான இறைவன் அக்கினி மலையாய் அருள்புரியும் புனிதத்தலம்!

இத்தலத்தில் ராஜ கோபுரத்தின் உள் நுழைந்தால், வலதுபுறம் ஆயிரங்கால் மண்டபம் உள்ளது. அதற்கு எதிரே குமரக் கடவுளின் சன்னிதி; ஒரு சிறு கோயிலோ என்ற மலைப்பினை நமக்கு ஏற்படுத்தும் வண்ணம் அமைந்துள்ளது.

இந்த முருகனின் பெயரே... அதாவது இந்த சந்நிதியின் பெயரே மிகச் சிறப்பாக அமைந்துள்ளது.

அனேகமாக இப்பெயர் வேறு எந்த தளங்களிலும் இருப்பதற்கு வாய்ப்பே இல்லை என்றும் கூறலாம்.

அப்படி என்ன சிறப்பான பெயர் இந்த முருகப்பெருமானுக்கு என எண்ணுகிறீர்களா?.." கம்பத்து இளையனார் சந்நிதி" என்று இந்த முருகனின் சன்னிதிக்கு பெயர்.

இந்தப் பெயர் வந்தது எப்படி? தன் மக்களைக் காக்கும் பொருட்டு தூணில் தோன்றிய நரசிம்மமூர்த்தியின் மருமகன் அல்லவா முருகன்?... எனவே தான் தானும் கம்பத்தில் தோன்றி கம்பத்திளையனார் என்னும் இப்பெயரைப் பெற்றார்.

சரி... தூணில் தோன்றிய மாலவன் இரணியனின் செருக்கை அடக்கத்தான் தோன்றினார். முருகப்பெருமான் எதற்காக.... யாருடைய செருக்கை அடக்குவதற்காக தோன்றி இப்பெயரைப் பெற்றார்? என்னும் கேள்வி எழலாம்.

அது ஒரு புராண -வரலாற்று நிகழ்வு

திருவண்ணாமலை பகுதியினை பிரபுடதேவராயன் என்னும் மன்னன் ஆண்டு வந்த காலம். அவரது நன்மதிப்பைப் பெற்றவராக திகழ்ந்தார், தேவி உபாசகரான சம்பந்தாண்டான் என்னும் மந்திர, தந்திரங்கள் அறிந்த ஓர் புலவர்.

அந்த காலகட்டத்தில் தான் முருகப்பெருமானின் அருளாசியோடு உடல் பிணிகள் நீங்கப்பெற்று, அவர்தம் ஞான ஒளியை பெற்ற அருணகிரிநாதர் பாடல்கள் பாடி பற்பல ஞான லீலைகளை செய்து மக்கள் போற்றி வணங்கும் அருட்கடலாய் பரிமளித்தார்.





அருணகிரியாருக்கு பெருகி வரும் மக்களின் ஆதரவும் நாட்டு மன்னனே அவருடைய பெருமைகளையும் பேசுவதை தேவி உபாசகரான சம்பந்தாண்டானால் தாங்கிக் கொள்ள இயலவில்லை.

அருணகிரியாரின் புகழுக்கு களங்கம் விளைவிக்க எண்ணம் கொண்ட சம்பந்தாண்டான், அவருக்கு முருகன் எந்த ஞானத்தையும் கொடுக்கவில்லை. எல்லாம் அவர் நடத்தும் கபட நாடகம் என்று புரளிகளை கிளப்பினார்.

அனைத்தையும் பொறுத்துக் கொண்டார், அருணகிரியார். மன்னரே அருணகிரியை சந்திக்க விரும்பி, அவரைத் தேடி வர நேர்கையில், சம்பந்தாண்டான் பகிரங்க சவால் ஒன்றை விடுத்தார். அதாவது அருணகிரிக்கு உண்மையிலேயே முருகன் அருள் செய்திருக்கிறார் என்றால் மன்னரும் மக்களும் கூடி இருக்கும் பொது இடத்தில் அருணகிரியார் முருகனை வரவழைக்க முடியுமா?... என்ற சவாலை முன்வைத்தார்...

முருகனின் மீது பாரத்தைப் போட்டு அருணகிரியும் புன்சிரிப்போடு சவாலை ஏற்றுக் கொண்டார்.

அந்த நாளும் வந்தது.

அண்ணாமலையாரின் ஆலயத்தில்... ஆயிரங்கால் மண்டபத்திற்கு எதிரே அமைந்திருந்தது 16 கால் மண்டபம். அம்மனுக்கு வளைகாப்பு இங்கு நடத்தப்படுவதால் இதனை வளைகாப்பு மண்டபம் என்பர். அந்த மண்டபத்தின் அருகே உயர்ந்த ஆசனத்தில் மன்னர் அமர்ந்திருக்க, அரசு அதிகாரிகளும் மக்களும் கூடினர்.

அருணகிரிநாதர் பக்திப் பெருக்கோடு முருகனை வரவழைக்க பாடல்களைப் பாடினார். நீண்ட நேரமாகியும் முருகன் காட்சி தரவில்லை. கவலையுடன் முருகனைப் பாடி அழைத்துக்கொண்டே இருந்தவரின் ஞானக்கண்ணில் ஒரு காட்சி தோன்றியது. இளைய மகனான பாலமுருகனை அருணகிரியாருக்கு காட்சி தர விடாமல் தன் அடிமீது இருத்தி பலமாக பிடித்துக் கொண்டிருந்தது வேறு யாருமில்லை. சாட்சாத் பார்வதி தேவியார் என்னும் உலகம்மை தான்.

அதற்குக் காரணம் அன்னையையை உபாசிக்கும் சம்பந்தாண்டானின் சூழ்ச்சி மிகு வேண்டுதல். அதனால்தான் முருகப்பெருமான் தன் கோரிக்கையை ஏற்று காட்சி தரவில்லை என்பதை உணர்ந்தார் அருணகிரியார்.

தானும் யோசித்து முருகனை அங்கு வரவழைக்கும் உபாயத்தை அறிந்தார்.

இதுவரை முருகனைப் போற்றிப் பாடிய பாடல்களை விடுத்து, அன்னையை ஆராதித்து உருக்கமாகப் பாடினார். அருணகிரியின் போற்றுதலிலும் பக்தியிலும் மூழ்கித் திளைத்த அன்னை பராசக்தி, மெய்மறந்த நிலையில் தன் பிடியை விலக்கிக் கொள்ள, அன்னை அறியா வண்ணம் பால முருகன் அருணகிரியை தேடி பறந்து ஓடி வந்தார்.

அந்த 16 கால் மண்டபத்தின் ஒரு தூணில் முருகன் அருட்காட்சி தந்து அருணகிரிக்கு ஆசிகளை நல்கினார்.

மன்னனும் மக்களும் அருணகிரியார் முருகன் மீது கொண்ட பக்தியையும் அவருக்கு அருள் புரிந்து காட்சி தந்ததையும் கண்டு வியந்தனர்.

அருணகிரியின் பொருட்டு அனைவருக்கும் காட்சி தந்தார் ஆறுமுகக் கடவுள்.

தன் சூழ்ச்சியை எல்லாம் மீறி, முருகன் அருணகிரிக்கு காட்சி கொடுத்து விட்டாரே என வெட்கித் தலைகுனிந்தார், சம்பந்தாண்டான்.

முருகப்பெருமான் காட்சி கொடுத்த 16 கால் மண்டபத்தின் அந்த தூணையே கருவறையாய் கொண்டு இந்த சன்னிதி அமைக்கப்பட்டுள்ளது.

அம்மையப்பனின் இளைய மகனான அழகன் முருகன் கம்பத்தில் காட்சி கொடுத்து அதுவே கருவறையானதால் "கம்பத்து இளையனார் சந்நிதி" என அங்கே இளையவேள் முருகன் இன்றும் அருள்பாலித்து வருகிறார். வணங்கி வளம் பெறுவோம்.



# மலர் நாயகன்!

**தன்னை மலர்கள் கொண்டு அர்ச்சிக்கும் பக்தர்களுக்கு, அவர்கள் முகம் மலரும் படி வரமளிக்கும் சிவபெருமானை, தேவார புலவர்களும், அக்கால, இக்கால கவிஞர்கள் " பா" மலர்களால் போற்றி வணங்குதல் தொன்று தொட்டு வரும் பழக்கம்!**

மலர்கள் பெயரைச் சூடிய கயிலை நாதனின் திருநாமம் கொண்ட தலங்கள் நிறைய உள்ளன. அவற்றில் ஒரு சில இவை.

பல புனிதங்கள் கொட்டிக்கிடக்கும் காஞ்சிபுரம் தலத்தில் செவ்வந்தீஸ்வரர் என்னும் பெயரில் குடி கொண்டு அருள்கிறார், சர்வேசுவரன்.

கமலாலயம் என்று மலரின் பெயரைக் கொண்டு திகழும் திருவாரூரில் அருள்பாலிக்கும் ஆரூர் தியாகேசனை செவ்வந்தித் தோடழகர், தண்தாமரை யான் என தெய்வப் புலவர்கள் போற்றி வணங்கியுள்ளனர்.

பஞ்ச பாஸ்கர தலங்களில் ஒன்றான சென்னையைச் சேர்ந்த, செங்குன்றம் சமீபமுள்ள ஞாயிறு என்னும் சிற்றூரில் ஈசன் புஷ்பரதேஸ்வரர் எனும் திருநாமம் பூண்டு மணக்கிறார்!

சிந்துபூந்துறைச் செல்வர் என்று தேவார நூல் கொண்டாடும் சிவன் திருநெல்வேலியில் உள்ள புகழ் பெற்ற நெல்லையப்பராக எழுந்தருளியுள்ளார்.

மதுரைத்திருத்தலத்திலிருந்து சுமார் 15 கி.மீ. தூரத்தில் உள்ள திருபுவனத்தில் உள்ள சிவாலய நாதன் பூவண்ணன், பூவனத்தவன் பூவணன் என்ற பல பெயர்கள் பூண்டுச் சிறக்கிறார்.

காரைக்காலை அடுத்துள்ள திருமலைராயன் பட்டினத்தில் அருள்பாலிக்கும் ஆரூர் தியாகராஜன் செண்பத்தியாகர் என்ற திருநாமமும் பூண்டுள்ளார்.

நெல்லை மாவட்டத்தில் உள்ள திருப்புடைமருதூர் கோவிலில் உள்ள பரமேசுவரன் நாறும் பூ நாதர் என்ற பெயரில் பக்தர்களுக்கு வரமளிக்கிறார்.

காஞ்சி மாவட்ட ஆலஞ்சேரி எனும் ஊரில் உள்ள சிவ திருக்கோயில் நாயகனை, கொன்றை மலரின் மறுபெயர் கொண்ட திருமலர் சேர்த்து உடையார் என்று பெயரிட்டு பூஜிக்கிறார்கள்.

முல்லைக் கொடி படர, தனது திருமேனியையே அளித்த ஈசுவரன் முல்லைவன நாதர் என்ற பெயரில் கும்பகோணம் சமீபம் உள்ள திருக்கருகாவூரில் உள்ள ஆலயத்தில் கொண்டாடப்படுகிறார்.

“கொய்யா மலர்சூடி யோன்“ என்ற திருநாமம் பெற்ற சிவன் குரங்கணில் முட்டம் என்ற பாடல் பெற்ற தலத்தில் திகழ்கிறார்.

திருத்துறைப் பூண்டிக்கு பக்கத்தில் உள்ள திருக்களர் எனும் இடத்தில் இறைவன் குடி கொள்ள, அவர் கொண்ட பெயர் பாரிஜாதவனேசுவரர் ஆகும்.

கரையாபுரம் என்னும் வித்தியாசப் பெயர் கொண்ட தலம் திருவாரூர் கிட்டே உள்ளது. அவ்வூர் சிவாலய மூலவர் கரவீரம் எனும் மஞ்சள் அலரிப் பூ வின் பெயரைச் சேர்க்கப்பட்டு கரவீரநாதர் என்ற நாமத்தோடு வணங்கப்படுகிறார்.

இந்த பார்வதி நாயகன் தாமரைச் சென்னியன், தாமரை மலர் கரத்தான், தண் தாமரைச்செல்வன், தாமரையான், தும்பை மலர் சூடியான், எருக்குமதி பிடைத்த சடை இறைவன் கொன்றைச்சூடியான், கொன்றை வேணியான், பொன்னங்கடுக்கை புரிசடையோன் என்றெல்லாம் போற்றப்பட்டு நமக்கெல்லாம் மணம் வீசும் மலர் இதயத்தோடு மகிழ்வித்தது, நாம் பெற்ற பேறல்லவா!




# உங்கள் படைப்புகள் எங்கள் இதழில் இடம் பெற வேண்டுமா?

இனிய சத்வித்யா வாசகர்களே!
நமது மாத இதழில் உங்கள்
ஆன்மீகக் கட்டுரைகளும்
கருத்துகளும் இடம் பெற
வேண்டுமா? உங்களுடைய அரிய
ஆன்மீக படைப்புகளை எங்களுக்கு
அனுப்புங்கள்! தகுதியானவை
ஏற்றுக்கொள்ளப்படும்
கட்டுரைகள் கடிதங்கள் அனுப்ப
வேண்டிய முகவரி


Astroved.com Pvt.Ltd
“சத்வித்யா” ஆன்மீக மாத இதழ்,
SP-75, தொழிற்பேட்டை,
அம்பத்தூர், சென்னை - 600058.


Email id: magazine@astroved.com

ஆரூர் ஆர். சுப்பிரமணியன்

## வியப்பூட்டும் மகான்கள்

# சின்னாஞ் சாமியார்



வெள்ளைக்காரர்கள் நம்மை ஆண்ட காலமது. தஞ்சாவூரில் நகரின் மத்தியில் அமைந்த ஒரு சிறிய கவர்மெண்ட் ஆபீஸ் அது! அவ்வப்பொழுது பொது மக்கள் நடமாட்டம் அங்கு காணப்படும்.

அந்த அரசு அலுவலகத்தில் சில ஊழியர்கள். அவரவர் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர் அன்றும். அதில் உள்ள [illegible]ரைச் சேர்ந்த சின்ன சுவாமி என்பவரும் அடக்கம். கையூட்டு பெரும் வாய்ப்பு இருந்தாலும் சட்டப்படியும், தன் மனசாட்சியின் படியும் செயல்படக்கூடியவர் என்ற நற்பெயர் அவருக்குண்டு. தான் உண்டு, தன் வேலை உண்டு என்று பணிபுரியும் அவரை சக ஊழியர்கள் பெரும் மதிப்புடன் நடத்தினர். அவரும் தனது நண்பர்களின் சுக துக்கங்களில் பங்கேற்பதை தனது ஒரு கடமையாகக் கொண்டிருந்தார்.

அன்று வழக்கம் போல அந்த சர்க்கார் காரியாலயம் இயங்கிக்கொண்டிருந்தது. தன் இயல்புப்படி குனிந்த தலை நிமிராமல் வேலை பார்த்துக்கொண்டிருந்த சின்னசுவாமி, திடீரென ஏதோ உணர்வு தோன்றவே, தனது மர நாற்காலியை காலால் உதைத்து விட்டு எழுந்து நின்றார். அச் சத்தம் பலமாக விருக்கவே, அங்கிருந்த சக ஊழியர்கள்" என்ன சப்தம்?" என்று பார்க்கையிலேயே சின்னசுவாமி, தடாரென ஆபீஸ் வாசலை நோக்கி ஓடத் துவங்கினார். எல்லோரும் அவரை அதிர்ச்சியுடன் காண்கையில் அவர் தன் தலைக்கு மேல் அணிந்திருந்த தலைப்பாகையை கையால் வேகமாய் கழற்றி மூலையில் எறிந்தார். அடுத்து அனைவரும் திகைக்கும் வகையில் தனது மேலாடையையும் நீக்கி தரையில் போட்டுவிட்டு ஆபீசை விட்டு வெளியேற முயற்சித்தார்.

அதற்குள் சிலர் அவரிடம் வேகமாய் போய், அவரை கைகளால் பிடித்து, ஒரு இருக்கையில் அமர்த்தி வைத்து விட்டன. யாரோ ஒருவர் பிறகு அரை மணி நேரம் கழித்து தன் வீடு திரும்பிய கோனார் சுவாமி உட்கார்ந்து இருந்த அறையைத் திறந்து பார்த்து அதிர்ச்சியுற்றார். காரணம் அவரால் பூட்டி வைக்கப்பட்ட சுவாமி அங்கே இல்லாது மாயமாகியிருந்தார்! பிறகுதான் கோனாருக்கு அவர் பார்க்கச் சென்ற உறவினரை தெருவில் பார்த்து பேசி விட்டுப் போன அதே நேரத்தில் சுவாமியை அவ்வீட்டு உள்ளறையில் படுத்து இருந்தார் என்பது தெரிய வந்தது பின்னால். மிக ஆச்சரியப்பட்ட கோனார் சுவாமியின் சக்தி அழியாது அவரை சோதித்த குற்ற உணர்வுடன் மானசீக மன்னிப்பு கோரினாராம்!

இப்படிப் பல அதிசய சம்பவங்கள் அடிக்கடி நடைபெற காரணமாக விருந்த சின்னசுவாமி என்கிற சின்னாஞ் சாமியார் ஒரு புனித நாளில் தஞ்சை மாவட்டம் நன்னிலத்தில் ஜீவ சமாதி அடைந்து விட்டார் என கூறப்படுகிறது.

சைவ சித்தாந்த செம்மல்
கவிஞர்.சீனு. செந்தாமரை
கடலூர்



# திருமுறை கண்ட தில்லை....

பெரும்பற்றப்புலியூர் என்று போற்றப்பெறும் தில்லை எனப்பெறும் சிதம்பரம் ஸ்ரீ சிவகாமசுந்தரி உடனுறை ஸ்ரீ நடராஜப் பெருமானின் ஆலயத்தை தரிசிப்போம்.

பஞ்ச சபைகளில் கனகசபையாக பொன்னம்பலமாக இந்த அற்புத ஆலயம் திகழ்கிறது.

தாண்டவ சிறப்புத் தலங்கள் ஐந்தனுள் முதன்மையான தலம் சிதம்பரம். ஆனந்த தாண்டவம் நிகழ்த்தி அருளியதால் ஸ்ரீ ஆனந்த நடராஜர் என்றே அழைக்கப்படுகின்றார்.

சித்திரையில் ஓண முதல்
சீராணி உத்திரமாம்
சத்த தனு ஆதிரையும் சார்வாடும் -பத்தி
மன்னும்
மாசியரி கண்ணி மருவு சதுர்த்தசி
ஈசர் அபிஷேக தினமாம்

என்ற பழந்தமிழ் பாடல் ஒன்றில் சிதம்பரம் ஸ்ரீநடராஜப் பெருமானுக்கு உரிய மகா அபிஷேகங்கள் எவ்வப்போது நடத்தப் பெறுகின்றன என்பதை தெளிவுபடுத்துகின்றது.

வைகறைப் பொழுதில் மார்கழி மாதம் திருவாதிரை நட்சத்திரத்தில் அபிஷேகமும். கால சந்தியில் மாசி மாதம் சதுர்த்தசி திதியிலும், உச்சிக்காலத்தில் சித்திரை மாதம் திருவோண நட்சத்திரத்திலும் சாயரட்சை காலத்தில் ஆனி மாதம் உத்திரம் நட்சத்திரத்தில் இரண்டாம் காலம் இரவு 8 மணி அளவில் ஆவணி மாதம் சதுர்த்தசி வளர்பிறையிலும், அர்த்தசாம காலத்தில் புரட்டாசி மாதம் வளர்பிறை சதுர்த்தசியிலும் மகா அபிஷேகங்கள் மிகவும் சிறப்பாக நடைபெறுவது உண்டு.



## நடராஜ பெருமானின் எண்வகை தாண்டவங்கள்.

1. காளிகா தாண்டவம் படைப்புத்தொழில் திருநெல்வேலி தாமிரசபை
2. சங்காரத் தாண்டவம் (அழித்தல்) நள்ளிரவு மகா பிரளய காலம்.
3.கவுரி தாண்டவம் - காத்தல் தொழில் திருப்புத்தூர் - சிற்சபை
4. சந்தியா தாண்டவம்- மதுரை வெள்ளியம்பலம் (பிரதோஷ காலம்)
5. திரிபுர தாண்டவம்- மறைத்தல் தொழில் (திருக்குற்றாலம் -சித்ரசபை.)
6. ஊர்த்துவ தாண்டவம் (அருளல் தொழில் திருவாலங்காடு ரத்தினசபை)
7. ஆனந்த தாண்டவம் சிதம்பரம்- பொற்சபை (ஐந்தொழில்களையும் ஒருசேர ஆடியருளல்)
8. அனவரத தாண்டவம் (ஆன்மாக்களின் இதயக் குகைக்குள் இடையறாது ஆடி அருளும் நடனம்)

பன்னிரு சைவ பெருவிழாக்களில் சிதம்பரம் ஆருத்ரா தரிசனம் மிகவும் சிறப்புக்குரிய விசேஷமாகும். அம்பிகை 28 திருத்தலங்களில் மிகுந்த சிறப்புடன் அருட் காட்சி அளிக்கின்றாள்.

காஞ்சி, காசி, திருவாரூர்- திருநாகைக்காரோணம் சிக்கல், மதுரை, தில்லை, திருக்கடவூர், திருவானைக்கா, திருவண்ணாமலை, அவிநாசி, திருவாமாத்தூர் திருவையாறு திருவொற்றியூர், திருக்கழுகுன்றம் சீர்காழி, திருமுதுகுன்றம், திருப்பாதிரிப்புலியூர் கும்பகோணம், திருக்காளத்தி, குற்றாலம் திருநள்ளாறு, திருநெல்வேலி, வைத்தீஸ்வரன் கோயில், வேதாரண்யம், வடதிருமுல்லைவாயில், திருமயிலை, திருமீயச்சூர் தரிசித்து அம்பிகையின் திருநாமங்களை உச்சரித்தாலே போதுமே- தில்லையிலே ஸ்ரீசிவகாமசுந்தரியாக அருள் பாலிக்கின்றாள்.

நடராஜ பெருமானின் அருட்தோற்றமே சிவமகா தத்துவங்கள் திருமுறை ஆசிரியர்களின் திருப்பதிகங்களான தேவாரமே சிவனின் பிரிய மிகு அணிகலன். மணிவாசகப் பெருமானின் திருவாசகமே தில்லை அம்பலவானின் திருநீற்றாகும்.

சிவகாமங்கள் 28ம் சிவனின் ஐந்து முகங்களிலிருந்தும் தோன்றியதாக புராணங்கள் கூறுகின்றன.

தில்லையம்பதியில் கூத்தப் பெருமானை வழிபட்ட தெய்வச் சேக்கிழார் உலகெலாம் என முதலடியை எடுத்துக் கொடுத்த தாயுமான தில்லை நடராசப் பெருமானின் அருட்திறத்தை என்னவென்பது?

உலகெலாம் உணர்ந்து ஓதற்கு அரியவன்
நிலவுலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத்து ஆடுவான் மலர் சிலம்பு படி வாழ்த்தி வணங்குவோம் என்று சேக்கிழார் முதல் பாடலை தொடங்கினார். சிவனருளால்

பெரியபுராணமாக உயர்ந்தது.

என்றும் இன்பம் பெருகும் இயல்பினால்
ஒன்று காதலித்து உள்ளமும் ஓங்கிட மன்றுளார் அடியார் அவர் வான்புகழ்
நின்றது எங்கும் நிலவி உலகெலாம்

என்று நிறைவு பாடலில் உலகெல்லாம் என்று நிறைவு செய்து அருளினார் சேக்கிழார் பெருமான்.

பஞ்ச புராண தளங்கள் இரண்டு மட்டுமே. தேவாரத் திருமுறை தலங்கள் 274 ஆக இருப்பினும் மிகவும் சிறப்புகள் வாய்ந்த தொன்மையான மகா சிவாலயங்கள் எவை என்றால் அது சிதம்பரம் ஸ்ரீநடராஜப் பெருமான் கோயில் மற்றது திருவாரூர்! இந்த இரு தலங்களை தரிசிப்பது சிறப்பு.

சகல சௌபாக்கியங்களையும் அள்ளித்தரும் அற்புதத் திருத்தலம் என்பதால் சைவப் பெருமக்கள் தவறாமல் தரிசிக்க வேண்டும்.

ஏன் இவ்விரு தலங்களுக்கும் அத்துணை சிறப்பு என்றால் தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரியபுராணம் ஆகிய ஐந்து புராணங்களிலும் இடம் பெற்றவை ஆகும். ஒன்பதாம் திருமுறையான திருவிசைப்பா திருப்பல்லாண்டு பதிகங்களில் சேந்தனார் அருளிய திருப்பல்லாண்டு பதிகங்களில் சிதம்பரமும் திருவாரூர் மட்டுமே இடம் பெற்றவை இச்சிறப்பு குறித்தமையால் இவ்விரு தலங்களுமே பஞ்ச புராணத் தலங்கள் என அழைக்கப்பெறுகின்றன.

ஆனந்தக் களிப்பில் ஸ்ரீநடராஜப் பெருமானும் அறிதுயிலில் ஸ்ரீ கோவிந்த ராஜ பெருமானையும் தலத்தில் மட்டுமே தரிசிக்கலாம்.

ஒரு மனிதன் களிப்புற்ற நிலையில் கூத்தாடுவான் கவலையற்ற நிலையில் நிம்மதியாக உறங்குவான். மகிழ்ச்சியான நிலை கூத்தும் கவலையற்ற நிலை உறக்கமும் மனித மனத்தின் இரு வேறு அனுபவங்கள் என்றாலும் மனம் ஒன்றுதானே! பரம்பொருளும் ஒன்றுதான்! ஒன்று பரம்பொருள் ஸ்ரீநடராஜப் பெருமான்- அதன் இருவேறு நிலைகளில் தரிசிக்கின்றோம். அவ்வளவே, சிவனவன் அவனருளாலே அவன் தாள் வணங்கி அனந்தம் பெறுவோம்.




ரா.பன்னீர்செல்வம்



மந்திர மகிமை

# வியாபாரம் பெருக, மனதை அடக்க....

மகாலட்சுமியின் அருளை முழுமையாகப் பெற்று, போதும் என்ற அளவில் செல்வத்தைப் பெறவும் வியாபாரத்தில் நல்ல வளர்ச்சியும் பெற்று மனதை அடக்கி மனிதர்களை வசியம் செய்யவுமான ஒரு மந்திர பாடல் "சௌந்தர்ய லஹரியில் அருளப்பட்டுள்ளது. இதன் 61 வது பாடலான இந்த மந்திரத்தை உச்சரிப்பதன் மூலம் நற்பயனைப் பெறலாம்.
இதோ....

அந்த மந்திரப் பாடல்;

"அஸௌ நாஸாவம்சஸ்- துஹிநகிரிவம்ச -த்வஜபடி
த்வதீயோ நேதீய;பலதுபல- மஸ்மாக -முசிதம்
வஹத்யந்தர் முக்தா :சிசிரகர -நிச்வாச- கலிதம்
ஸம்ருத்தயா யாத்தாஸாம் பஹிரபி சமுக்தாமணிதர:"

## பாடலின் பொருள்:

மலையரசனான இமவானின் குலக்கொழுந்தே! மூங்கில் தண்டாய் மோகன ரூபம் காட்டும் உன் வடிவான நாசி ஒன்றே போதும் எங்கள் வாழ்வில் நற்பலன்களைப் பெற“... அந்த நாசியின் வழியே நீர் வெளிவிடுவது மூச்சுக்காற்றல்ல தாயே! முத்துக்கள்! சந்திரக்கலை பாயும் உன் இடது நாசியின் மேல் நீ அணிந்து கொண்டிருக்கும் மூக்குத்தியில் உள்ள முத்துக் கூட உன் சுவாசத்தில் இருந்து வெளிப்பட்டது தானே?!....


## மந்திரத்தை பிரயோகிக்கும் முறை:

மேற்கண்ட மந்திரத்தின் யந்திரத்தை தங்கத் தகட்டில் வரைந்து பூஜைக்குப் பயன்படுத்த வேண்டும்.

கிழக்கு முகமாக அமர்ந்து தினமும் 1008 முறை மந்திரத்தை ஜெபிக்க வேண்டும்.
குங்குமத்தினால் லலிதா சகஸ்ரநாம அர்ச்சனை செய்வது நலம்.

தேங்காய், தேன், பால், பழம், வெண்பொங்கல் ஆகியவற்றை நைவேத்தியம் செய்ய வேண்டும்.

இந்த வகையில் மந்திர ஜபம் செய்து வருவதால் நடத்துகின்ற வியாபாரத்தில் வருமானம் பெருகுவதோடு மனதையும் அடக்கி, மனங்களை வசீகரிக்கும் முடியும்!



SWASASUGAM SYRUP
For Clearing Respiratory Tract
Call: 88702 88701

# பல்சுவைப்பக்கம்

## முழுத் தேங்காயே நைவேத்தியம்!



இறைவிக்கு அர்ச்சனைக்கு தரப்படும் தேங்காய்கள் உடைக்கப் படாமல் அப்படியே அவளுடைய திருப்பாதங்களில் சமர்ப்பிக்கப்பட்டு..

அந்த பக்தர்களிடமே திருப்பிக் கொடுக்கபடுவதோடு, அவர்களுக்கு இனிப்பு, உப்புக் கடலை, பொறி ஆகியவைகள் பிரசாதமாகவும் வழங்கப்படுகிறது.

இந்த தேவி குடிகொண்ட ஆலயத்திற்கு வழிபடச் செல்பவர்கள், தாமரை மலர்களையும், இனிப்பு வகைகளையும், பச்சை மற்றும் சிவப்பு நிறத்தில் உள்ள " சுனரி" எனப்படும் பட்டுத் துணிகளையும் வாங்கி செல்வார்கள்.

இந்த வழிபாட்டு முறைகள் நடைமுறையில் உள்ள திருக்கோயிலாகத் திகழ்கிறது தேவி லட்சுமி எழுந்தருளியுள்ள மும்பை மகாலட்சுமி மந்திர்.

மும்பை கடற்கரையை ஒட்டி அமைந்துள்ள அழகான, பிரசித்திபெற்ற ஆலயமாக இது திகழ்கிறது.!

## மரணம் என்பது...?

மனித உடல் என்பது அவன் அணியும் ஆடையாகவிருக்க ஒரு ஜீவனானது அந்த உடலை நீத்தலே பெயராகிறது. இதற்கடுத்து வரும் உடல் மீது உண்டாகும் பற்றே காரணமாக அமைந்துவிடும்.

பிறவாமை வேண்டாம் என்று முடிவுக்கு வந்துவிட்டால் இந்தப் பற்றை நாம் பகவான் திருவுருவில் வைக்க வேண்டும். கண்ணன் அருள் செய்தால்தான் முக்தி கிட்டும்.

எனவே மரணத்தருவாயில் தவிக்கும் மனிதன் முதலில் தன் உடலில் வைத்த பற்றையும், உடல் சம்பந்தப்பட்ட வீடு, மக்கள் மற்றும் பொருட்கள் மீது உள்ள பற்றுகளையும் அழித்துக் கொள்ள வேண்டும். இதற்கு என்ன வழி.

மனிதன் முதலில் தன்னம்பிக்கையை இப்படி வளர்க்க வேண்டும்.

“இந்தப் பிறவியில் இவர்கள் என் சொந்தங்கள், இது என் வீடு, இவை என் பொருட்கள், என் உடலோடு தானே இவைகள் அனைத்தும் சம்பந்தப்பட்டுள்ளன? அணியும் ஆடை போன்ற உடலை நீத்த பின்னர், மேற்கண்ட வகைகளுக்கும் எனக்கும் எந்த சம்பந்தம் உள்ளது? எனவே” நீத்தார் “அதாவது உடலை பிரிந்தவர் போல இப்போதே நான் வீட்டை விட்டு திரிவேன்! இனிப் பிறக்கவே கூடாது. அந்த எல்லாம் வல்ல ஆனந்த நிதியாகிய” “இறைவனையே அடைய வேண்டும். இப்பொழுதாவது இவ் வாழ்வின் உண்மை பயனை அடைய வேண்டும்” என.

(ஸ்ரீ சுக முனிவர் அக்காலத்தில் வாழ்ந்த அரசன் பரிஷித் ராஜனுக்கு அருளிய உண்மைதான் இது).



# மந்திர வகைகள்

சில மந்திரங்கள் விதை போன்று இருக்கும் நிலையில் சித்திக்கும்.

சில மந்திரங்கள் காய்களாக இருக்கும் நிலையில் சித்திக்கும்.

சில மந்திரங்கள் பழுத்த பிறகே பலனளிக்கும்.

வேறு சில மந்திரங்களோ முட்கள் போல் இருந்து தீமையான பலன்களை தந்துவிடும்.

மந்திர உபாசனை புரிகையில் ஒருவன் குரு, தெய்வம், மந்திரம் ஆகிய மூன்றையும் சமமாக மதித்து செயல்பட்டால் தான் எதிர்பார்க்கும் நற்பலன்கள் கிடைக்க பெறும் என ஆன்மிக நூலொன்று வழிகாட்டுகிறது.




# சர்ப்ப தோஷம் நீக்கும் சங்கரநாராயணர்

மனித வாழ்வில் சர்ப்பதோஷம் மிகப் பெரிய பாதிப்புகளை ஏற்படுத்துகிறது. திருமண தடை, தாமதம் மற்றும் இல்வாழ்க்கையில் பிரிவு, குழந்தை பிறப்பில் தடை, குழந்தைகளால் ஏற்படும் அவமானங்கள், தனிமை, உடல்நல பாதிப்புகள் மற்றும் பலவிதமான துன்பங்களை ஏற்படுத்துகிறது.

ராகு கேது சர்ப்ப கிரகங்கள் ஆகும். இவை ஒரு ஜாதகத்தில் லக்னம், 2,7,8 ஆம் இடங்களில் இருந்தால் சர்ப்ப தோஷம் ஆகும். மற்றும் அனைத்து கிரகங்களும் ராகு கேதுவிற்கு ஒரு பக்கமாக ஜாதகத்தில் அமைந்தாலும் சர்ப்ப தோஷம் ஆகும்.

சர்ப்ப தோஷம் ஏற்பட காரணம் பாம்புகளை கொல்லுவதாலும், புற்றுகளை இடிப்பதாலும், பாம்பு நடமாடும் இடங்களை சேதப்படுத்துவதாலும் மற்றும் பாம்பு முட்டைகளை உடைப்பதாலும் ஏற்படுகிறது.

சர்ப்ப தோஷம் நீங்க சங்கரநாராயணரை வழிபட்டால் அனைத்து விதமான சர்ப்ப தோஷங்களும் நிவர்த்தி அடையும்.

சங்கரநாராயணர் கோயிலின் சிறப்பு யாதெனில் நாகங்களின் அரசர்களுக்கு இடையில் சிவன் பெரியவரா அல்லது பெருமாள் பெரியவரா என வாக்குவாதங்கள் தோன்றின. இவர்களின் வாக்குவாதங்களை போக்கவும் சிவனும் பெருமாளும் சம சக்தி படைத்தவர்கள் என உணர்த்துவதற்காகவும் இருவரும் ஒன்றாக இணைந்து சங்கரநாராயணராக தோன்றிய ஸ்தலம் ஆகும்.

இங்கு சிவன் தனியாக சங்கர லிங்கமாகவும் காட்சியளிக்கிறார்.

இங்கு நாராயணருக்கு அலங்காரமும் சங்கரலிங்க சுவாமிக்கு அபிஷேகமும் நடைபெறுகிறது. ஜென்ம நட்சத்திர நாளில் இங்கு சிவனுக்கு வில்வமும், பெருமாளுக்கு துளசியும், விநாயகருக்கு அருகம்புல்லும் வைத்து வழிபடுவதன் மூலம் சர்ப்ப தோஷம் நிவர்த்தி ஆகும்.

(இந்த ஸ்தலம் சங்கரன் கோயில் எனும் ஊரில் உள்ளது. இந்த ஸ்தலத்தை வழிபட்ட பின் அருகில் உள்ள கழுகுமலை முருகன் கோயிலையும் தரிசிப்பது மிகவும் சிறப்பு.)

இங்கு புற்று மண் பிரதான பிரசாதமாக வழங்கப்படுகிறது. இதனை உட்கொள்வதால் உடலில் உள்ள வியாதிகள் நீங்கும்.

- ஆஸ்ட்ரோவேட் ஜோதிடர் பிரபு

## 108 முத்திரைகள்



தமிழகத்தின் பாரம்பரிய நாட்டியக் கலையே பரதக்கலை! இந்த பரதக்கலையின் தனிப்பெரும் சிறப்பு என்னவென்றால், இது இறைவனின் முன்னிலையில் ஆடப்படுவது. இதற்கு தெய்வீக நடன கலை என்னும் சிறப்பும் உண்டு. மனிதர்கள் இந்த கலையினை ஆடும்போது நடனம் என்கிறோம். இறைவன் ஆடுவதை தாண்டவம் என்கிறோம். இறைவனை தாண்டவக் கோலத்தில் தரிசனம் செய்வது மண்ணுயிர்கள் பெற்ற புண்ணியம் என்றே கருதப்படுகிறது!

இறைவனை ஆராதிக்கும் கலை இது என்பதனால், தஞ்சையில் பெரிய கோவிலை கட்டிய மாமன்னன் ராஜராஜசோழன் இந்த கலைக்கு ஒரு சிறப்பினை பெரிய கோவிலில் செய்துள்ளார்.

கருவறையில் மிகப்பெரிய சிவலிங்கம்! அதற்கு மேலே விமானம். கருவறைக்கு மேலே சுமார் 40 அடிகள் முதல் தளம்! அதன் மீதே விமான கோபுரம் எழுப்பப்பட்டுள்ளது.

அந்த இடத்தில்... அதாவது, கருவறையின் லிங்கத்திற்கு மேலே ஒரு சுற்றுப் பாதை, இறைவனை மேலே இருந்து வலம் வரும் வண்ணம் அமைக்கப்பட்டுள்ளது.

அந்த சுவற்றில்- விமான கோபுரம் தொடங்கும் இடத்தில் பரதநாட்டியத்தின் கர்ணங்கள் எனப்படும் 108 முத்திரைகளையும் சுமார் 2 அடி உயர சிற்பங்களாய் செதுக்க ஆணையிட்டார், இராஜராஜ சோழன்!

(அதில் 24 சிற்பங்கள் செதுக்கப்படாமல் உள்ளது, ஒரு வரலாற்று உண்மை)

இந்த பரதக் கலைக்கு அந்த இடத்தில் சிற்பங்கள் வடித்த சோழ மாமன்னன் உணர்த்துவது என்ன?

பரதம் என்பது தெய்வீகக்கலை!

**- சோழ தாசன்**

## பொறுப்பைத் துறக்காதீர்!

தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் மற்றும் தொடர்களில் அது தொடங்குவதற்கு முன்னர் பொறுப்பு என்று சில வாசகங்களை எழுதி ஒளிபரப்புவார்கள், அது ஊடக தர்மம்.

ஆனால், சமூக தர்மம் வேறு! மக்கள் எல்லோருக்கும் சமூக பொறுப்பு என்பது கட்டாயம் இருக்க வேண்டும்.

பாதையில் முள் கிடந்தால் ஓரமாக எடுத்துப் போடுவது, குழாயில் தண்ணீர் வீணாகப் போவதை பார்த்து சரி செய்வது என இவையும் சமூகப் பொறுப்பு தான். இதற்கும் மேலே.... பொது இடங்களில்... மற்றவருக்கு எந்த இடைஞ்சலும் இல்லாமல் நாம் செயல்படுவதுதான் சிறப்பான பொறுப்பு ஆகும். நம்மால் யாருக்கும் எந்த தடங்கலும் ஏற்படாத வண்ணம் நடந்து கொள்வது சிறப்பு!

சாலை, அகலம் குறுகியதாக இருக்கும்; நிறைய வாகனங்கள் போய் வந்து கொண்டிருக்கும். அந்தக் குறுகிய சாலையில் “பை“க்கை ஓரமாக நிறுத்தாமல் போக்குவரத்துக்கு இடைஞ்சலாக நிறுத்தி நண்பர்கள் என்ற பெயரில் நான்கு பேரோடு நின்று பேசுவதும்... பஸ், லாரி போன்ற பெரிய வாகனங்கள்

போகமுடியாமல் ஹாரன் அடித்தாலும் அதை காதில் வாங்காமல் திரும்பிப் பார்த்து முறைத்து, “இது எங்க ஏரியா... நாங்க இப்படித்தான்“ எனக் கெத்து காட்டும் இளைஞர்கள் மற்றவர்களுக்கு இடையூறாக இருக்கிறோம் என்னும் எண்ணமே சிறிதும் இல்லாமல் இருப்பது, அவர்களுடைய கௌரவம் என்றும் ஒதுங்கி வழி விட்டால் தன் மரியாதை குறைந்து விடும் என்பது போல் நடந்து கொள்வதும் சிறிது கூட கூச்சம் இல்லாமல் பொது இடங்களில் பிரச்சினையை ஏற்படுத்துவதும் பொறுப்பற்றவர்கள் செய்யும் காரியம் ஆகும்.

பொது இடங்களுக்கு வரும் யாரும் “நான் இந்த சமுதாயத்தின் அங்கம்” என்பதை உணர்ந்து கடைபிடிக்க வேண்டிய விதிமுறைகளை மீறாமல் சமூகப் பொறுப்போடு நடந்து கொண்டால் எல்லாமே நலமாகும்.

தனிமனித ஒழுக்கமே சமுதாய ஒழுக்கமாய் போற்றப்படும்.

**- தமிழ் வசந்தன்**

# குறளும் பொருளும்

திருக்குறளில் காணப்படும் அனைத்து கருத்துக்களுமே எல்லா மனிதர்களுக்கும் ஒரு பாடமாய் அமையும்... இது தவிர, மனிதர்கள் தங்கள் வாழ்வில் அன்றாடம் சந்திக்கும் நிகழ்வுகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு குறளை நினைவுபடுத்தும். எனவே குறள் கூறும் நெறியை உணர்ந்து நடந்தால் பல சங்கடங்களை தவிர்க்கலாம்.

இதோ.....



அருகருகே உள்ள கிராமத்தைச் சேர்ந்த இரண்டு இளைஞர்கள் சென்னையின் குறுகலான ஒரு இடத்தில் சிறிய அறை ஒன்றை வாடகைக்கு எடுத்துத் தங்கி, கட்டட வேலை செய்து வந்தார்கள்.

இறைவன் வசதியை தான் குறைத்தானே தவிர, மான உணர்வை கொஞ்சமும் குறைக்கவில்லை. இருவரும் தாங்களே சமைத்து, சாப்பிட்டு, ஊரில் உள்ளவர்கள் பசியாற கொஞ்சம் பணமும் அனுப்பிக் கொண்டிருந்தார்கள்.

இவர்களது பக்கத்து அறையில் மூன்று இளைஞர்கள் வந்து தங்கினார்கள். இவர்களை ஒத்த வயசுதான் என்றாலும் அவர்கள் படாடோபம் நிறைந்தவர்கள்.

இவர்கள் இருவரும் வாரம் முழுவதும் உழைத்து எவ்வளவு கூலி வாங்குகிறார்களோ.... அந்த அளவு பணத்தை ஒரு வேளைக்கே தண்ணீராய் செலவழிப்பார்கள். என்ன வேலை இவர்களுக்கு? எவ்வளவு சம்பளம்?... எதுவுமே தெரியவில்லை, எப்போது வேலைக்கு போகிறார்கள் என்று கூட தெரியவில்லை.

வெயில் காலம் வாட்டி வதைத்தது! காற்றோட்டமே இல்லை. அதற்காக அந்த ஒற்றை அறையின் கதவை திறந்து வைத்தே தூங்குவார்கள்! இருவரில் ஒருவன் வேலன்! பத்தாம் வகுப்பு தேராதவன்.

இன்னொருவன் குமார்! ஐந்தாவது வரை படிப்பு. நல்ல உழைப்பாளி! வேலன் சற்றே புத்திக் கூர்மையுள்ளவன்! ஆனால் வெகுளி! இவர்கள் நிலையைப் பார்த்த பக்கத்து அறை இளைஞன் ஒருவன் இவர்களிடம் ஒரு டேபிள் ∴பேனைக் கொண்டு வந்து கொடுக்க, இருவரும் மறுத்தனர்.

அவனோ.... ”பேச்சிலர் தானே நாம! ஒருத்தருக்கொருத்தர் உதவினா என்ன? எங்ககிட்ட சீலிங் ∴பேன் இருக்கு! பரவாயில்லை இத வச்சுக்குங்க”, என்று வைத்துவிட்டு சென்றான்.

வேலன், நண்பனிடம், ”டேய், நல்ல பசங்களா இருக்காங்க! இருக்கட்டும்; அவங்க கேட்கும் போது கொடுத்துடலாம்”, என்றான்.

இப்படித் தொடங்கிய இவர்களின் பழக்கம் அவர்களோடு சினிமாவிற்கு போவது வரையில் தொடர்ந்தது.

ஒரு நாள்.... பக்கத்து அறை இளைஞர்களைத் தேடி போலீஸ் வந்தது. அந்த அறையை சோதனை செய்தார்கள்.

வேலன், குமார் இருவரையும் விசாரித்தார்கள். தங்களிடம் அவர்கள் கொடுத்தது இதுதான் என டேபிள் ஃபேனை கொண்டுவந்து கொடுத்தார்கள்.” இருந்தாலும் எப்போது வேண்டுமானாலும் நீங்கள் விசாரணைக்கு அழைத்தால் வரவேண்டும்“ என உத்தரவிட்டு சென்றார்கள்.

இவர்களும் இரண்டு, மூன்று முறை போலீஸ் நிலையம் சென்று வந்தார்கள்.

வேலனுக்கு அவமானம் பிடுங்கித் தின்றது. இறுதியில், அந்த இளைஞர்கள் மூவரும் போதைப் பொருள் விற்பவர்கள் எனத் தெரிந்தது. வேலன், குமார் இருவருக்கும் இதில் சம்பந்தமில்லை; இவர்கள் அப்பாவிகள் என போலீஸ் முடிவு செய்து அனுப்பினார்கள்.

“ஊருக்கு இந்த விஷயம் தெரிந்தால்?.... குடும்ப மானமே போய் விடும்“ என்னும் கலக்கத்தோடு அறைக்கு வந்தான் வேலன்! கதவு உட்புறம் தாழிடப்பட்டிருந்தது.

“டேய் குமார், கதவத்திறடா!” என தட்டினான். திறக்கப்படவில்லை; மீண்டும் மீண்டும் பலமாகத் தட்டினான். கதவு திறந்தது! கலங்கிய கண்களோடு நின்றிருந்தான் குமார்.

பதறிய வேலன், “என்னடா.... ஏன் இப்படி இருக்கற?... என்ன ஆச்சு...” எனப் பதறினான்.

“வேலா! நாம போலீஸ் ஸ்டேஷன் வரைக்கும் போய் வந்தத யாரோ ஊர்ல சொல்லி இருக்காங்கடா! அம்மாவும் அப்பாவும் அசிங்கப்பட்டு நிற்கிறார்களாம். இப்படி ஒரு மகன் எதுக்குடா உயிரோட இருக்கணும்?! அதான் எலி மருந்து வாங்கி வந்து குடுக்க போனேன்!” என அழுதான்.

ஆறுதலாய் அவன் தோளை அணைத்த குமரன், ”வேலா!... இது நமக்கு ஒரு பாடம்! விபரம் புரியாம எத வேணும்னாலும் பேசுவாங்க! உண்மை என்னனு நமக்குத் தெரியும்.

அதுக்காக உயிர விடுவியா?... நான் பத்தாவதுல்ல படிச்ச ஒரு திருக்குறள் ஞாபகத்துல வருதுடா! குறளை சொன்னான்.

“ஆய்ந்தாய்ந்து கொள்ளாதான் கேண்மை
கடைமுறை தான்சாந் துயரம் தரும்”!

அதாவது “ஆராய்ந்து பழகாத நட்பு, கடைசியில சாகற அளவுக்கு துன்பத்தக் கொண்டு வந்துடும்னு வள்ளுவர் சொன்னது எவ்வளவு உண்மையாய்ப் போச்சி பாத்தியா?”

சாகற அளவு துன்பத்த அனுபவிச்சாச்சி! அதுக்காக சாகணுமா?... இனிமே குறளைப் படிச்சி குறையில்லாம வாழலாம்”, என்றான் வேலன்! கண்களைத் துடைத்துக் கொண்டான் குமார்.

# சிந்தனை



ஒழுக்க நெறி,சமய உணர்வின் வெளி கூடம் --- (மேல்நாட்டு அறிஞர்) எட்வின்.எச்.சேப்பள்

இன்றைய தலையாய மெய்யியல் சிந்தாந்த பிரச்சனை, மனிதனிடம் உள்ள சமய உணர்வை, ஈர்த்து வெளிக்கொணர்வது தான். மனிதனுக்குள் சமய உணர்வைத் திணித்துஏற்றுவது அல்ல. --- (மேல்நாட்டு அறிஞர்) கார்ல் ரேஹ்னர்

சிந்தனை குறித்து சிந்தனையாளர்கள் வெளிப்பாடு உத்தம சிந்தனைகள், எல்லா பக்கங்களில் இருந்தும்,நமக்கு வந்து சேரட்டும்.
--- ரிக் வேதம்

நம் பலவீனத்தை போக்கும் வழி சுலபமான ஒன்று---நமது பலவீனம் பற்றியே எண்ணிக் கவலைப் படாது, தன் பலத்தை பற்றி சிந்திப்பதே அது
---- சுவாமி விவேகானந்தர்

சிந்தனை, சொல், செயல் மூன்றும் இனிதே, இணைந்திருப்பதையே குறிக்கோளாகக் கொள்.----.மகாத்மா காந்தி

சுயமாக சிந்தனை செய்; மற்றவர்கள் மூலம் ஒரு போதும் சிந்தனை செய்யாதே! இந்திய மகான் --- ஸரதுஸ்திரர்

கலகலப்பாய் இல்லாதவர்கள், சிந்தனையில் ஆழ்ந்த அமைப்பு பெற்றவர் பெற்றவர்கள் போல் பாவனை செய்து,' கனமான மனிதர்கள்' என்று பெயர் பெற்று விடுகிறார்கள் --- (மேல்நாட்டு அறிஞர்) ஜான் டிரைடன்


சிந்தனையில் ஆழ்ந்த பாவனைத் தோற்றம், உள்ளத்தை மறைக்க உடம்பு காட்டும் விவேகம். (மேல்நாட்டு அறிஞர்) எட்வர்ட் யங்

மற்றவர்கள் சிந்திப்பதாக எண்ணிக்கொள்ள நீங்கள் உதவி புரிந்தாள் அவர்களுக்கு உங்களைப் பிடித்து போய்விடும்.

அவர்களை உண்மையாகவே சிந்தனை செய்ய நீங்கள் தூண்டிவிட்டால், அவர்களுக்கு உங்களை பிடிக்கவே பிடிக்காது --- (மேல்நாட்டு அறிஞர்) டான் மார்க்வீஸ்

- குடந்தை நாராயணி

ஆரூர் ஆர். சுப்பிரமணியன்



# அற்புத மகான் ஷீரடி சாய்பாபா

ஷீரடி "சாய்பாபாவைப்" பற்றி பல நூல்கள், அவருடைய சரித்திரத்தையும் தன் வாழ்நாளில் அம்மகான் நிகழ்த்திய பல அற்புத சம்பவங்களைப் பற்றியும் விரிவாகவே கூறியுள்ளன.

இனி எத்தனை புத்தகங்கள் எழுதப்பட்டு வெளிவந்தாலும், அவையும் நம் மக்களுக்கு மிகவும் பிடித்தமான ஒன்றாகவே அமையும், உதாரணத்துக்கு, ஸ்ரீ கிருஷ்ணரின் லீலைகளை விதவிதமான புத்தகங்களில் எத்தனை முறை படித்தாலும், நமக்கு எப்போதும் அலுப்பு ஏற்படுவதில்லையே... அதுபோல்தான், ஷீரடி சாய்பாபாவின் மகிமை சோர்வை ஏற்படுத்துவதில்லை.

ஆமாம்... ஷீரடி சாய்பாபா எப்படிப்பட்டவர்? அவர்கள் குணங்கள் ஏதும் இல்லாதவர். "ஆனால், குணங்களுக்கு எல்லாம் அப்பாற்பட்டவர்.

சாய்பாபா எந்த வகுப்பை சேர்ந்தவர்? அவர் இந்துவா, முஸ்லிமா என்ற கேள்வி தேவையில்லாமல் பலரால் எழுப்பப்படும் ஒன்றாகவே இருந்தாலும், அவர் எந்த வகுப்பைச் சேர்ந்தால் நமக்கென்ன? அவதாரங்களுக்கும் தெய்வங்களுக்கும் ஜாதி கிடையாதே... இல்லை, அவைகள் இனம் பார்த்துதான் கருணை புரிகிறதா? அப்படி எதுவும் கிடையாது.

உலகில் அழியக்கூடிய பொருளில் விருப்பமற்று, தானே தன்னுள் மூழ்கி, மனித வாழ்க்கையின் உச்சநிலையையே தன் லட்சியமாகக் கொண்டவர் ஷீரடி சாய்பாபா. அது ஒன்று போதுமே, நாம் அவரை பூஜிக்க..

மனிதர்களோடு மனிதராகப் பழகும் காருண்ய குணம் கொண்ட சாய்பாபா, பிறரை மகிழ்விப்பவராகவே வாழ்ந்தாரேயன்றி, தான் மட்டுமே மகிழ்வதில்லை. மனிதர்களை நேசிப்பது போலவே... செடி,

உங்களுடைய ஆன்மீக வளர்ச்சியில், நீங்கள் எந்த நிலையில் உள்ளீர்கள் என்பதை நீங்களே ஆராய்ந்து, அதற்கேற்ப ஆன்மீகப் பள்ளியில் நீங்கள் எந்த வகுப்பில் சேர தகுதி பெற்றிருக்கிறீர்கள் என்பதைக் கண்டறியுங்கள். அதன்பின், அந்த வகுப்புக்குச் செல்லத் தீர்மானியுங்கள். அங்கு நீங்கள் சிறந்த முயற்சியை அளித்தீர்கள் என்றால், அங்கு இறைவனுடைய அருளைப் பெறுவீர்கள்.

## ஸ்ரீ சாய்பாபா

உலகமே இன்று ஒன்றுதிரண்டு போற்றுகிறது; ஸ்ரீ ஷீரடி சாய்பாபாவை. அவரைப் பற்றி நன்கு உணர, நம் மக்களுக்கு பல ஆண்டுகள் தேவைப்பட்டன. ஆனால், அந்த மகானே அடிக்கடி இப்படிச் சொல்வார்,"

"என்னோடு முந்தைய ஜென்மத்தில் உடனிருந்தவர்களே, இன்றைய காலகட்டத்தில் என்னுடைய பக்தர்கள் ஆகமுடியும்" என்று.

கொடிகளையும் நேசித்தார்

## சாய்பாபா நேசிப்பார்.

பலவண்ண பூச்செடிகளிடையே அமர்ந்து, பேசி, அவற்றுக்குத் தினமும் தானே தண்ணீர் விட்டு வளர்த்து, ஒரு மிகப்பெரிய பூந்தோட்டத்தையே நேரடியாக கவனித்து வந்தவர் சாய்பாபா. அந்தத் தோட்டத்தில் அவர் பிரியமாக அதிகம் வளர்த்தது, மல்லிகை செடிகளையும் துலுக்க சாமந்தி பூச்செடிகளையும் தான் என்பதை அம்மகானின் பல சரித்திர நூல்கள் விவரிக்கும்.

### "ஆர்வத்துடன் தேடும் நாட்டமே, நம் துணை யென்பது"
### தேடும் இத்தேடலுக்கு நான் அடிமை"

என்பது கபீர்தாஸ் மகானின் வாக்கு. இதேபோன்று தான் நம் சாய்பாபாவும், தன்னை நோக்கி ஒரு அடி முன்வைத்தவனுக்கு. தானும் பல நூறு அடிகள் முன்வந்து, தன் பக்தனைக் காப்பாற்ற ஓடோடி வருவார். தன்னுடைய பக்தர்கள் பரஸ்பரம் கொள்ளக்கூடாது என்று ஷீரடி சாய்பாபாவுக்கு மகத்தான உணர்வு உண்டு.

எனவே, வெறுப்பு உணர்வுகளை சாய்பாபா திடீரென்று ஏதாவது செய்ய வேண்டும் என்று நினைத்துக் கொண்டால், தான் அணிந்திருக்கும் கம்பனியின் விளிம்பை மடித்துவிட்டு, தான் வைத்திருக்கும் மாவரைக்கும் அரைவை இயந்திரத்தில் கோதுமையைப் போட்டு, அதன் அச்சைப் பிடித்து சுழற்றி, கோதுமை மாவை அரைத்துக் கொண்டே இருப்பார்.

இதன் பொருள் என்னவென்றால், "எங்கோ, உள்ள பக்தர்கள் பகை, வெறுப்பு போன்ற உணர்வை மிகையாகக் கொண்டுள்ளனர். அதனை இப்படி அழிக்கிறேன்" என்பதாகும். இதில் தன்னுடைய பக்தன் அரசனா அல்லது ஆண்டியா என்ற பேதத்தை அவர் என்றும் காட்டுவதே இல்லை.
தான் வாழ்ந்த ஷீர்டி தலத்தை விட்டு வெளியில் எங்கும் செல்ல விரும்பாத இந்தத் தன்னலமற்ற மகான், இருந்த இடத்திலிருந்தே அனைத்தையும் அறியும் ஆற்றல் பெற்றவர்.

பகவான் சாய்பாபா தன்னுடைய இளமைப் பருவத்தில், பயில்வான்களைப் போல் உடையணியும் வழக்கம் கொண்டிருந்தார். தன்னுடைய சிகையை நீக்கி மொட்டை அடித்துக்கொள்ள விரும்பாத அவர், தனது தலைமுடியை நீளமாக வளர்த்தார். ஒருமுறை இவர் ஷீர்டியில் மொஹித்தன் என்ற கடைக்காரருடன் மல்யுத்தம்கூட செய்துள்ளார்.
ஷீர்டி கிராமத்தில் தனது இவ்வுலக பக்தர்களை உய்விக்க, சாயபாபா ஒரு வேப்பமரத்து அடியில் 16 வயது பாலகனாகத் தோன்றியதாக சில சாய் சரித்திர நூல்கள் கூறும். அந்த வயதில் சாய்பாபா யாருடனும் எதுவும் பேசாமல், தான் காட்சி தந்த அந்த வேப்ப மரத்தடியிலேயே பழியாகக் கிடப்பாராம்.

"ஏன், இங்கேயே அமர்ந்திருக்கிறாய் சிறுவா?" என்று ஒரு சமயம் ஷீரடி கிராமத்தினர் சாய்பாபாவிடம் கேட்டபோது, "இது என்னுடைய மகா குருவிளஸ்தானம் எனக்குப் பிடித்த இந்தப் புனித இடத்தைப் பத்திரமாகப் பாதுகாக்க வேண்டும்" என்று பாபா பக்தி பரவசத்துடன் கூறினாராம்.

ஒரு சமயம் அந்த வேப்ப மரத்தின் உள்ளே தோண்டி பார்க்க நேர்ந்தபோது, அங்குள்ள நிலவறையில் ஒரு மர ஆசனம், அழகிய ஜெபமாலை ஒன்று கோமுகத்துடன் கூடிய ஒரு பையும் காணப்பட்டதாம். கடந்த 12 ஆண்டுகளாக மகான் சாய்பாபா அங்கு அமர்ந்து தவம் புரிந்திருக்கலாம் என்று கருதப்படுகிறார்.

கிணற்றில் இருந்து இறைக்கப்பட்ட தண்ணீரை 2 மண்குடங்களில் பிடித்து, தனது கரத்தில் ஒரு பானையும் மற்றொன்றைத் தனது தோளிலும் வைத்துக் கொண்டு சாய்பாபா வருவது அடிக்கடி காணப்படும் சகஜமான நிகழ்ச்சிதான். சூரியன் அஸ்தமனமாகி, அவர் மேற்கொண்ட பணி நிறைவடைந்ததும், அந்த 2 மண்குடங்களையும் குறிப்பிட்ட வேப்பமரத்தடியில் வைத்துவிடுவார்.
அந்த வேப்பமரத்தடியில் வைக்கப்பட்ட 2 மண்குடங்களும் மாலை நேரத்தில் தானே உடைந்துவிடும். இதற்காக, அவ்வப்போது சாய்பாபாவிடம் புதிய மண்குடங்களை தாத்யா என்ற பக்தர் அளித்து வருவார்.
சுமார் 3 வருடங்கள் இந்த வழக்கம் தொடர்ந்தன. இந்த மண்குடங்கள் அனைத்தும் செங்கல் சூளையில் வைத்து சுடப்படாதவை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.



ஷீர்டி சாய்பாபாவுக்கு இசை மற்றும் நாட்டியத்தில் மிகுந்த ஈடுபாடு உண்டு. சில சமயங்களில் அவர் தனது அழகிய கால்களில் சலங்கைககளைக் கட்டிக்கொண்டு, கஞ்சிரா தரும் தாளத்துக்கு ஏற்ப, தானே இனிய குரலில் பாடியபடி, மிக அற்புதமாக நடனமும் ஆடுவார். பிற பெண்கள் நாட்டியம் ஆடினாலும்,அது நன்றாக இருந்தால் மட்டுமே சாய்பாபா ரசித்து பாராட்டுவார்.

முன் அத்தியாயத்தில் குறிப்பிட்டபடி, மொஹித்தின் என்ற பயில்வானுடன் சாய்பாபா போர் புரிந்த காலத்தில், அவர் தோற்றுப் போகவே.. சாய்பாபாவின் உடை அடியோடு இப்படி மாறிவிட்டது.

“தன் இடுப்பில் லங்கோடு, அதன்மீது நீண்ட கபனி; தலையைச் சுற்றி ஒரு துணி போட்டு முக்காடு“ என. அதிலிருந்து ஷீரடி நாதனின் உடையில் எவ்வித மாற்றமும் நிகழவே இல்லை!

“அடிமைகளுக்கு அடிமையான நான், பக்தர்களான உங்களுக்கு அடிமை; எனவே, உங்கள் தரிசனத்தை நாடுகிறேன்” என்று அடிக்கடி கூறும் சாய்பாபா, தினசரி காலைக்கடன்களை முடித்துக்கொண்டு, நினைத்த தினங்களில் மட்டுமே நீராடுவதை தன் வழக்கமாகக் கொண்டிருந்தார்.

ஷீரடி கிராமத்தில் தினமும் ஒரு ஒரு துண்டின் நான்கு முனைகளையும் ஒன்றாகச் சேர்த்து கட்டிய ஜோலியைத் தனது தோளில் மாட்டிக் கொண்டு அங்குள்ள குடியிருப்பு பகுதியில் ஷீரடிநாதன் வீடு வீடாகச் சென்று, தகரக் குவளையில் பிச்சை கோருவார்.

அம்மாதிரி சமயங்களில் சாய்பாபாவின் ஒரு கரம். ஜோலியைப் பிடித்திருக்க.., மற்றொரு கரம் தகரக் குவளையைப் பிடித்திருக்கும். பொதுமக்கள் பிச்சையாகப் போடும் பாஜி, சாம்பார், பால், மோர் எல்லாம் அதே தகரக் குவளையால் தான் சாய்பாபாவால் பெறப்படும்!

ரொம்ப காலமாக ஷீர்டி மகான் ஒரு கோணிப் பையையே ஆசனமாக்கி, அதன்மீது மற்றொரு கோணிப் பையைப் பிரித்து, தான் உடுத்தும் கந்தலாடையுடன் படுக்கும் வழக்கம் உடையவர். அவர் அருகே சில்லியமும், புகையிலையும், ஒரு தகர குவளையும் கூடவே வைத்திருப்பார்.

தனது இடது கையை அடிக்கடி அருகே உள்ள கிராதியின்மீது வைத்துக் கொண்டு, தென்திசை நோக்கி பார்த்தபடி, வழக்கமான கோணிப்பை ஆசனத்தில் அமர்ந்தபடி, தன் எதிரே இருக்கும் துனியைப் பிடித்துக் கொண்டிருந்தார்.

ஆரம்ப காலத்தில், ஷீர்டி கிராமத்தில் உள்ள சின்னச் சின்ன கடைகளுக்கு சென்று, தான் வைத்திருக்கும் தகரக் குவளையில் எண்ணெயை யாசகமாகக் கேட்டு வாங்கி, அருகே உள்ள கோயில்களிலும் மசூதிகளிலும் விளக்கேற்றி மகிழ்வார். என்ன காரணத்தினாலோ, தீபாவளி பண்டிகையை மட்டும் கொண்டாடுவதில் சாய்பாபா மிக களிப்புறுவார்.

அந்தக் காலத்திலேயே, இந்த உலகை உய்விக்க வந்த சாய்பாபா, இந்துக்களைப் போல் காது குத்திக் கொண்டதாலும், முஸ்லிம்களைப் போல் சுன்னத் செய்து கொண்டதாலும் தான், இந்த சாய்பாபா இந்துவா அல்லது முஸ்லிமா என்ற தேவையற்ற சந்தேகம் பலருக்கு எழுந்தது.

மசூதியில் வாழ்ந்து வந்த சாய்பாபா, இந்து மதத்தைச் சேர்ந்தவராயினும், அவர் வசிக்கும் இடத்தில் துனி தீ கொழுந்துவிட்டு, இடைவிடாமல் எரிந்து கொண்டே இருக்கும்.

தன்னை தினசரி சந்திக்க வரும் வழக்கமான பக்தர்கள் தவிர, தங்களது கையில் தண்டம் மான்தோல் தரித்த தவசிகளானாலும், சன்னியாசிகளானாலும், துறவிகளானாலும், முஸ்லிம் மதத்தைச் சேர்ந்தவர்களானாலும் அனைவரிடமும் ஒரே மாதிரியான கனிவுடன் தான் சாய்பாபா பழகுவார்.

எதிரே வருபவன் அரசன் ஆனாலும், ஆண்டியானாலும்.. எல்லோரும் சாய்பாபாவின் பார்வையில் ஒன்றுதான்!

யுனானி மருத்துவ முறைகளை நன்கு அறிந்திருந்த ஷீர்டிநாதன், தன்னை நாடி வருபவர்களது நோயின் தன்மை பற்றி நன்கு ஆராய்ந்து, அவர்களுக்கு அதற்கேற்ற மருந்துகளைத் தந்து குணப்படுத்துவார். இந்த மருந்துகள் மட்டுமல்லாது, தனது தரிசனம் மூலம் நோய் கொண்ட பக்தர்களின் தீராத ரோகங்களையும் சாய்பாபா போக்குவார்.

தன்னிடம் தங்களுடைய குறைகளைச் சொல்லும் பொதுமக்களிடம், அவற்றை காது கொடுத்து கேட்கும் அருங்குணம் கொண்ட சாய்பாபா, வந்தவர்களின் நல்லது, கெட்டதுகளின் தன்மையை உடனே உணர்ந்து கொண்டு, அவர்களிடம் அதுபற்றிக் கூறி, அவர்களை அதிர்ச்சியிலும் ஆழ்த்திவிடுவார்!

தோதி, போதி யோக சாதனங்களைப் பற்றி முற்றும் அறிந்திருந்த சாய்பாபா, தன்னைத் சுற்றி யாரும் இல்லாத வேளைகளில், நண்பகல் நேரத்தில் தனது குடல்களை வெளியே எடுத்து, தான் சேமித்து வைத்திருந்த நீரைப் பயன்படுத்தி, அவற்றை நன்றாக சுத்தம் செய்துவிட்டு, அங்குள்ள நாவல் மரமொன்றில் கவனத்துடன் மடிப்பு மடிப்பாக உலர்த்தி, பிறகு அந்தக் குடல் பகுதிகளை தனது உடலுக்குள் பொருத்திக்கொண்டு விடுவாராம்!

பல நேரங்களில் தன்னுடைய கைகளையும் கால்களையும் தன் உடலிலிருந்து நீக்கி, "கண்ட யோகம்" புரிவார் சாய்பாபா. அவைகள் இரண்டும் சாய்பாபாவின் யோகநிலை நீங்கும்வரை, தரையில் தனித்தனியே கிடக்குமாம்! அப்போது இத்தகைய காட்சிகளை நேரில் கண்டு பயமும் வியப்பும் அதிர்ச்சியும் மேற்கொண்ட சில பக்தர்களும் உண்டு.

நான்கு முழ நீளமும் ஒரு சாண் அகலமும் உள்ள ஒரு மரப்பலகையை எடுத்து, அதன் இருபுறங்களிலும் கந்தல் துணிகளால் தூளி கட்டி, அதனை மரத்தின்மேல் கட்டி, ஊஞ்சலாகப் பயன்படுத்தும் சாய்பாபா, அதிலேயே சில சமயம் உறங்கிவிடுவதும் உண்டு.

அந்த ஊஞ்சலில் சாய்பாபா எந்நேரத்தில் ஏறினார், அதிலிருந்து எப்படி இறங்கினார் என்பதை யாரும் பார்த்ததில்லை!

"அடிமைகளுக்கு அடிமையான யான், பக்தர்களாகிய உங்களுக்கு கடமைப்பட்டு, உங்களது தரிசனத்தையே நாடுகிறேன்" என்று சொல்லும் சாய்பாபாவின் திருவதனம், 'அல்லா மாலிக்" என்று அடிக்கடி சொல்லிக் கொண்டே இருக்கும்.

அம்மகான் கொண்ட உருவம் எப்படிப்பட்டது என்பதை அனுமானித்தபடி, அவர் 5 அடி 8 அங்குல உயரம் கொண்ட மெலிந்த தேகம் உடையவர், நீண்ட கை, கால்களும், பெரிய உள்ளங்கையும் அவருக்கு உண்டு, தீர்க்கமான பார்வை கொண்ட சாய்பாபாவின் காதுகளில் துளைகள் இருந்தன. தடித்த உதடுகள் கொண்ட சாய்பாபா, எப்போதும் தாடி, மீசையோடுதான் வாழ்ந்து வந்தார்.

சாய்பாபா தன்னுடைய இளமைக் காலத்தில் மெலிந்த உடலுடன், எளிதில் வளையக்கூடிய தன்மையுடன், மஞ்சள் நிறம் கலந்த வெண்மை

நிறமாக விளங்கியிருக்கிறார். அவர் கொண்ட உடல் அமைப்புகளுக்கு சாமுத்ரிகா லட்சணத்தின்படி, அவரது கைகளும் கால்களும் சற்று நீண்டவையாக இருந்ததாகச் சொல்லப்படுகிறது.
ஷீர்டி புண்ணிய தலத்தில் இன்றும் பாதுகாக்கப்பட்டு வரும் அவருடைய பாதுகைகளைத் தரிசனம் செய்கையில், இந்த உண்மை நமக்கு புலனாகும்.

இளமைக் காலத்தில் சுருள்முடி கொண்ட சாய்பாபா, காலம் செல்ல செல்ல குறைவான முடியையே கொண்டிருந்தார். ஒரு கட்டத்தில், சாய்பாபா குறைந்த ரோமம் வைத்திருக்கிறாரா..... இல்லை, முழுவதும் முடி நீக்கம் செய்யப்பட்ட மொட்டைத் தலை கொண்டவரா என்பதை அறிய இயலாத வகையில் அவர் தன் தலையில் சிறிய துணியை எப்போதும் கட்டிய நிலையிலேயே காட்சி தந்துள்ளார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

ஆடம்பர வாழ்க்கைக்கு எதிரானவர் ஷீரடி சாய்பாபா, வெறும் செங்கற்களைத் தலைக்கு வைத்து, கிழிந்த துணிமீது படுத்து உறங்கும் வழக்கம் உடையவரான அவர், கிழிந்த கம்பள ஆடையைத் தானே தைத்துக் கொள்வாரே தவிர, பிறரிடம் அப்பணியைக் கொடுக்க மாட்டாராம். சில நாட்களில் ஒரு நாளில் அணிந்த துணியைக்கூட, திடீரென எரியும் துனியில் போட்டுவிடுவார் இம்மகான்.

தனக்கு விதவிதமான உணவுப் பண்டங்கள் வழங்கப்பட்டாலும், இல்லை.. கணக்கற்ற தட்சணைகள் வழங்கப்பட்டாலும், அவற்றை விரைவில் ஏழைகளுக்குப் பிரித்துக் கொடுத்து ஆனந்தப்படுவதில் சாய்பாபாவுக்கு இணை சாய்பாபாதான்!
தனது பக்தர்களின் நலன்களிலேயே ஷீர்டிநாதன் முழுக் கவனம் செலுத்துகிறார் என்பதற்கு அவர் அருளிய இம்மொழியே சான்று.

"உங்களுக்குக் கஷ்டமான ஒன்றைச் சந்திக்கும் சூழ்நிலை ஏற்பட்டு விட்டதா? கவலையேன்! பொறுமையைக் கைக்கொண்டு கவனித்த வண்ணமாக இருங்கள். ஏனென்றால், என்னுடைய குழந்தைகளையும் பக்தர்களையும் எப்படியாவது காத்தல் எனது கடமை!" என்பதே அவர் கூறிய ஒரு சான்றாகிறது.

"இந்த சாய்பாபா எங்கே பிறந்தார், எப்படி பிறந்தார்?" என்ற கேள்வி அக்காலத்திலும் மக்களிடையே எழுந்துள்ளது. அதுபற்றிய சில சம்பவங்கள் பலரால் சொல்லப்பட்டு, எழுதப்பட்டு வந்தாலும், எது உண்மையானது என்பதற்கான தடயங்கள் சரிவர கூறப்படவில்லை என்பதே சாய் சரித்திர நூலாசிரியர்களின் கண்டுபிடிப்பு.
அப்படி கூறப்பட்டு வருவதில், ஒன்றே ஒன்று இது... அந்தண தம்பதிகளான வித்தலா. சக்ரபாணிக்குப் பிறந்த பல குழந்தைகள் இறந்தே பிறந்துவிட, கடைசியாகப் பிறந்த ஆண்குழந்தை மட்டும் உயிர் பிழைத்து வளர்ந்தது.
அக்குழந்தை எதிர்காலத்தில் பல அற்புதங்களை நிகழ்த்தவல்லது என்பதற்கு உதாரணமாக, தாயின் கர்ப்பத்தில் இருக்கும்போதே அது நிரூபித்துவிட்டது

ஒருமுறை வித்தலாவும் அவருடைய கணவர் சக்ரபாணியும் ஒரு காட்டின் வழியே செல்ல நேரிட்டது. ஹைதராபாத் நிஜாமின் எல்லைக்கு உட்பட்ட காட்டுப் பகுதியில் அவர்கள் செல்கையில், நிறைமாதக் கர்ப்பிணியான வித்தலாவுக்குத் திடீரென பிரவச வலி ஆரம்பித்துவிட்டது.

அங்கே மனித நடமாட்டமே இல்லாத நிலையில் தவித்துப் போன சக்ரபாணி, காட்டுக்குள் அங்குமிங்கும் அலைந்து, கடைசியாக ஒரு மாட்டுக் கொட்டகையைக் கண்டுபிடித்து, அவ்விடத்துக்குத் தள்ளாடும் நடை கொண்ட தன் கர்ப்பிணி மனைவியை மெள்ள அழைத்து சென்றார்.

கொஞ்ச நேரத்தில் பல குழந்தைகளை பிறக்கும் முன்பே பறிகொடுத்திருந்த அந்தத் தம்பதிகளுக்கு, ஒரு அழகான ஆண்மகவு பிறந்திருந்தது. அப்போது அங்கே எதிர்பாராத வகையில் வந்த பக்கீர் ஒருவர் சக்ரபாணியிடம், "அன்பனே! இந்தக் குழந்தை நீ எண்ணுவது போல் சாதாரண குழந்தையல்ல. இந்த சிசு, எதிர்காலத்தில் அனைத்து உயிர்களுக்கும் குருவாகத் திகழும் தன்மை கொண்டு விளங்கப் போகிறது.

இவன், கடவுளின் அவதாரம்தான். எனவே, ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்ளுங்கள். 90 நாட்கள் கடந்த பிறகு, நான் மீண்டும் வந்து உங்களைச் சந்திப்பேன்.

அப்போது நீங்கள் இந்தக் குழந்தையை என்னிடம் ஒப்படைத்துவிட வேண்டும்” என்று கூறிவிட்டு, அங்கிருந்து மறைந்துவிட்டார். இதனால் சக்ரபாணிக்கு மிகுந்த மனக்கலக்கமும் பெருவேதனையும் சூழ்ந்து கொண்டது. மூன்று மாதங்கள் விரைந்து ஓடுவதாகவே வித்தலா, சக்ரபாணி தம்பதிகள் கருதினார்கள். பாபு என்ற பெயர் கொண்ட தங்கள் அன்பு செல்வத்தை எப்படி பிரிவோம் என்ற ஏக்கம், அப்போதே அவர்களைச் சூழ்ந்து கொண்டது.

சரியாக 90வது நாள் சக்ரபாணியின் வீட்டுக்கு பக்கீர் வர, சக்ரபாணியும் அவரது மனைவியும் மிகுந்த மனவேதனையுடன் வீட்டுக்கு வந்திருந்த அதிதியை வரவேற்றனர். தான் கொடுத்த வாக்கைக் காப்பாற்றவும், எதிர்கால மக்களின் நலனைக் கருத்தில் கொண்டும் பாபுவின் பெற்றோர், மனதில் எல்லையற்ற சோகத்துடன் அவனை பக்கீரிடம் திரும்ப ஒப்படைத்தனர்.

பாபுவைப் பெற்றுக்கொண்ட பக்கீர் மற்றும் அவரது துணைவியாரும் அவனைக் 'கண்ணும் கருத்துமாக வளர்த்தனர். அந்தக் குழந்தை பிறந்து ஐந்து வயது சிறுவனாக இருக்கும்போது, அவனைத் தன் கணவர் உத்தரவிட்டபடி, அவர் அடையாளம் காட்டிய சேறு கிராமம் என்ற ஊரில் வசித்த இறைபக்தரான வெங்குஷா என்பவரிடம் மனமின்றி, மிகுந்த மனவருத்தத்துடன் ஒப்படைத்தாள் அந்த வளர்ப்பு தாய். வெங்குஷாவின் வளர்ப்பில் பாபு சில காலம் இருந்து வந்துள்ளார் என்று கூறப்படுகிறது.

ஷீர்டி மகான் மக்களுக்கு அருளிய போதனைகளில் இருந்தும், வாழ்ந்து காட்டிய முறைகளில் இருந்தும் அவர் ஆசார அணுகுமுறைகளுக்கு அப்பாற்பட்டவராகவே திகழ்ந்தார். “பொதுஜனங்கள் கிரகஸ்த வாழ்க்கை முறையைக் கண்டிப்பாக அனுசரிக்க வேண்டும்“ என்று சாய்பாபா விரும்பியவரும்கூட!

ஆர்தர் ஆஸ்போர்னி என்பவரின் ஆன்மீகப் பார்வையில், பாபா பசி எடுத்துத் திரியும் ஒரு ஆன்மீக ராட்சதனாகவே சித்தரிக்கப்பட்டு உள்ளார். அதற்கு உதாரணமாக, சிலவற்றை இங்கு எடுத்துரைக்கிறார்.

“சாய்பாபா செய்து காட்டிய இறையாக்கிரியங்களைத் தாண்டியும் “அவர்“ ஒரு ஆச்சரியமாக இருந்தார். விவரிக்க முடியாத உருவ அமைப்பு. இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் ஒருசேர அளித்த போதனைகள், ஒரு மசூதிக்குள் ஒரு நாள் முழுவதும் தொடர்ச்சியாக யாகம் வளர்த்தது, தனது பக்தர்களிடம் சினம் கொண்டு சீறுவது, அவர்களை கம்பு எடுத்து அடிக்கும் வரை உரிமை எடுத்துக் கொள்வது, சொல்லப்படாத சிந்தனைகளைப் பற்றியெல்லாம் பேசித் தீர்த்து பதில் தருவது...

வந்தவன் நம்பவே முடியாமல் விழிக்கும்போது கல்லெடுத்து எறிந்து, வெளியே போகும்படி துரத்துவது. பின், அவனைத் தன்பக்கம் ஈர்த்து தன்னுள் அடக்கிக்கொள்ள ஏதேனும் இறையாச்சரியத்தை நடத்திக் காட்டுவது, மற்றவர்களுக்குப் பகிர்ந்தளிப்பதற்காக வாய்விட்டு காசு, பணம் கேட்பது... இப்படி அநேக லீலைகளை செய்திருக்கிறார். சாய்பாபா!”

(நன்றி: “மண்ணிறங்கி வந்த தெய்வம் சாய்பாபா“ நூல்) “குரு வழிபாட்டின் மூலமே ஆன்மீக அனுபவம் பெறமுடியும்“ என்கிற சித்தாந்தம் கொண்ட சாய்பாபா, இதனை பலவேறு சந்தர்ப்பங்களில் தன் பக்தர்களுக்கு விளக்கிக் கூறியுள்ளார். உலக மதம் அத்தனையும் வலியுறுத்துவது இதைத்தானே!


“நீ என்னிடம் உன்னை பரிபூரணமாக சரணாகதி முறையில் ஒப்படைத்து விட்டால், உன்னுடைய சுசும், துக்கம் என்னுடைய பொறுப்பு!” என்று சாய்பாபா அருளிவிட..... அந்த கருத்தை உணர்ந்து கொண்ட மக்கள் கூட்டம், இப்போது அதிக எண்ணிக்கையில் சாய்பாபாவின் பக்கம்!

நமது நாட்டில் எங்கோ ஒரு மாநிலத்தில் உள்ள ஷீரடி சாய்பாபா தலம் தவிர, பல்வேறு மாநிலங்களில் உள்ள ஒருசில இடங்களில் மட்டும் ஷீரடிநாதனுக்கு பெரிய அல்லது சிறிய அளவில் ஆலயங்கள் கட்டப்பட்டிருந்தன. ஆனால், இன்றோ... தினமொரு பெரிய அல்லது சிறிய அளவில் பட்டித்தொட்டிகளில்கூட, அவருக்கு ஆலயங்கள் பல ஊர்களில் கட்டப்பட்டு வருவது கண்கூடு இன்று!.

உலகில் உள்ள அனைத்து பிரிவினரும் சாய்பாபாவை கலியுக தெய்வமாகக் காண்கின்றனர். “சாய்பாபாவின் மொழியானது, முழுக்க முழுக்க உட்பொருள் கொண்ட பூடகமான ஒன்று, சங்கேத குறியீடுகளால் தெரிவிக்கும் முறையிலானது“ என்று சாய்பாபாவை அருகில் இருந்து எடை போட்டு அறிந்த பேராசிரியர் நார்க்கே தெரிவித்து, இதனை நாம் மேலெழுந்தவாரியாக கணிக்கும்

சாமானியனுக்கு, சாய்பாபா ஒரு சாதாரண பிரஜையாகவே காட்சி தருவார் என்றும் கூறுகிறார்.
ஷீர்டி மகானின் தாஸ் காணு மகராஜின் பக்தி பார்வையில், "சாய்பாபாவே படைப்பு கடவுளாகவும் காக்கும் கடவுளாகவும் அழிக்கும் கடவுளாகவும் காட்சி தர, அம்மூவரின் சங்கமமே சாய்பாபா என்றும், அதிகாலையில் பிரம்மாவாகத் தோன்றும் சாய்பாபாவே, ஆன்மீக ஞானம் பிரவாகமாக ஓட, அழித்தலெனும் குணத்தைக் காட்ட பரமசிவன் கோலத்தைக் கொள்வதாகவும், கண்ணனைப் போல சின்னச் சின்ன லீலைகள் புரிபவராகவும் காட்சி தருகிறார்", என்கிறார் நூலொன்றில்.
பக்தர்களின் மன ஓட்டத்தில் அழகிய அன்னப்பறவையாக நீச்சல் அடிப்பவராகவும், பிச்சை எடுத்தே வாழும் செல்வந்தராகவும், குபேரனை விட உயர்ந்த தர்மசிந்தனை கொண்டவராகவும், ஆரத்தி காண்பிக்கப்படும் காலங்களில் விஷ்ணுவாக காட்சி தருபவராகவும், தர்பாரின்போது அமர்ந்திருக்கையில் கயிலாயநாதராகவும், பலப்பல அற்புதக் காட்சிகளை அள்ளி வழங்குபவராகவும் தென்பட்டதையும், சாய்பாபாவின் மீது அவர் இயற்றிய கவிதை வரிகள் நமக்கு புலப்படுத்துகின்றன.

அந்த ஷீரடி சக்ரவர்த்தி தன்னை நினைக்கும் அல்லது தனது இருப்பிடம் தேடிவந்து வணங்குபவர்களுக்கு எந்தெந்த விதத்தில் அருளினார் என்பதை, அக்காலத்தில் நடைபெற்ற பல அற்புத நிகழ்ச்சிகள் மூலமும், தன்னைப் போற்றிய பக்தர்களுக்கு அவருடைய லீலாவிநோதங்கள் மூலமும் ஆற்றிய சம்பவங்களை எடுத்துரைப்பதன் மூலம், தன் கடமையை சரிவர செய்யும் கட்டாயத்துக்கு அடியேன் ஆளாக்கப்பட்டு உள்ளேன் என்பதே நிதர்சன உண்மை.!
படிக்க படிக்க தெவிட்டாத அற்புத அவதாரி ஷீரடி சாய்பாபா! இன்றுவரை தனது பக்தர்களுக்காக நிகழ்த்திவரும் அற்புத அருள் லீலைகளை! அவைகளை ஷீரடிநாதனின் ஆசிகளுடன் வரும் அத்தியாயங்களில் காண்போம்.



# ஏப்ரல் மாத பலன்கள் – 2022



## மேஷம்

சுப நாட்கள்:
3, 4, 6, 7, 8, 21, 22, 23,
அசுப நாட்கள்:
1, 2, 5, 19, 20, 29, 30.

காதல் வயப்பட்டிருக்கும் இளைஞர்கள் தனது துணைக்காக அதிக பணத்தையும் செலவு செய்வார்கள். திருமணமான தம்பதிகளுக்கு இடையே கருத்து வேறுபாடு ஏற்படும் சூழல் உள்ளது. வாக்குவாத்தை தவிர்ப்பது நல்லது. நண்பர்கள் மற்றும் குடும்ப உறுப்பினர்களின் ஆதரவு கிடைக்கப் பெறுவீர்கள். இந்த மாதம் பண வரவு சற்று அதிகமாக இருக்கும். என்றாலும் நீங்கள் கடன் வாங்கக்ககூடிய வாய்ப்பும் உள்ளது. வியாபரிகள் சிறந்த லாபம் காண்பார்கள். பிரயாணத்திற்காக அதிகம் செலவு செய்ய நேரிடலாம். வெளிநாட்டுத் தொடர்புடைய ஏற்றுமதி தொழில் செய்பவர்கள் இந்த மாதம் அதிக பண வரவைக் காண்பார்கள். முறையான உடற்பயிற்சியும் சத்தான உணவும் உங்கள் ஆரோக்கியத்தைக் காக்கும். தியானம் மற்றும் நடை பயிற்சியை மேற்கொண்டு சிறப்பான உடல் மற்றும் மன நலத்தை பாதுகாக்க முடியும். மாணவர்கள் தைரியமாகச் செயல்படுவார்கள். விடாமுயற்சியுடன் செயல்பட்டு வெற்றி காண்பார்கள்.



## ரிஷபம்

சுப நாட்கள்:
12, 13, 14, 16, 18, 19.
அசுப நாட்கள்:
1, 2, 9, 15, 17.

காதலை வெளிப்படுத்துவதற்கு இந்த மாதம் சிறந்த மாதம் ஆகும். கணவன் மனைவி உறவில் ஒற்றுமை அதிகாரித்து, தாம்பத்திய உறவில் நல்லிணக்கம் கூடும். வீட்டில் உள்ள பெரியவர்கள், குழந்தைகள் மற்றும் நண்பர்களிடம் நல்லுறவு காணப்படும். நிலம் வாங்கவேண்டும் என்ற உங்கள் கனவுகள் நிறைவேறும். பங்குவர்த்தகத்தில் முதலீடு செய்து அதிக லாபம் கிடைக்கும். இந்த மாதத்தில் கூட்டுத் தொழிலில் அதிக லாபத்தை எதிர்பாக்கலாம். விவசாய தொழில் செய்பவர்கள் நல்ல லாபங்களை ஈட்டுவார்கள். அஜீரண கோளாறு மற்றும் குடல் சம்மந்தப்பட்ட பிரச்கனைகள் வரலாம். ஆரோக்கிய உணவு உண்பதின் மூலமாக வயிறு சம்மந்தப்பட்ட பிரச்சனைகள் வராமல் தடுக்கலாம். நீண்ட நாள் வெளிநாடு சென்று படிக்க வேண்டும் என்று இருந்த மாணவர்களுக்கு வெளிநாட்டில் உயர்கல்வி படிப்பதற்கான வாய்ப்புகள் உண்டாகும்.



## மிதுனம்

சுப நாட்கள்:
16, 19, 21, 22, 23, 25, 27, 28.
அசுப நாட்கள்:
5, 17, 18, 20, 24, 29, 30.

திருமணமான தம்பதிகளுக்கு இடையே இணக்கம் அதிகரிக்கும். குடும்பத்தில் உள்ளவர்களிடம் நல்லிணக்கம் கூடும். இந்த மாதம் ஆன்மீக ஈடுபாடு அதிகரிக்கும். ஆன்மீகத்திற்காக பயணம் மேற்கொள்வீர்கள். உங்கள் கடந்த கால பங்கு வர்த்தக முதலீடுகளின் மூலம் உங்களுக்கு அதிக லாபம் கிடைக்கப்பெறுவீர்கள். உங்கள் பணப்புழக்கம் கணிசமாக அதிகரிக்கும். பங்கு வர்த்தகத்தில் நஷ்டம் ஏற்பட வாய்ப்புள்ளது. கூட்டுத்தொழில் மற்றும் வியாபாரம் செய்பவர்களுக்கு இது சிறந்த மாதமாக இருக்கும். பலசரக்கு வியாபாரத்தில் அதிக லாபத்தை எதிர்பார்க்கலாம். வீடுகட்டும் தொழில் செய்யும் நிறுவனங்கள் நல்ல லாபத்தை எதிர்பார்க்கலாம். உங்கள் ஆரோக்கியம் இந்த மாதம் சிறப்பாக இருக்கும். பதட்டத்தை தாவிர்க்க தியானம் மற்றும் நடைபயிற்சியை மேற்கொள்வது நல்லது. மாணவர்கள் பல புதிய விஷயங்களை கற்றுக் கொள்வார்கள்.



# கடகம்

சுப நாட்கள்:
16, 18, 19, 21, 22, 23, 27, 28.
அசுப நாட்கள்:
8, 9, 10, 15, 20, 29, 30.

காதலர்களுக்கு கருத்து வேறுபாடுகள் நீங்கி ஒற்றுமை நிலவும். திருமணத்திற்குக் காத்திருப்பவர்களுக்கு இந்த மாதம் மனதிற்கு பிடித்த வரன் அமையும். திருமணமான தம்பதியர் மனமொத்து வாழ்வார்கள். இந்த மாதம் உங்கள் பொருளாதார நிலை சுமாராக இருக்கும். தனியார் உத்தியோகத்தில் பணியில் இருப்பவர்களுக்கு பணிபுரிபவர்களிடம் சுமூகமான உறவு ஏற்படும். மென்பொருள் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள் இந்த மாதம் தங்கள் தொழில் மூலம் கணிசமான லாபத்தை ஈட்டுவார்கள். உங்கள் மனம் சோர்வுடன் காணப்படும். உடற்பயிற்சி மற்றும் தியானம் மூலம் உடல் நலம் மற்றும் மனநலம் புத்துணர்ச்சி அடையும். சமச்சீர் உணவு வகைகளை எடுத்துக்கொள்வதன் மூலம் உடல் வலிமை பெறும். மாணவர்கள் படிப்பில் விடா முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.



# சிம்மம்

சுப நாட்கள்:
3, 4, 6, 7, 8, 11, 12, 13, 16.
அசுப நாட்கள்:
1, 2, 5, 9, 10, 17, 28, 29, 30.

நீங்கள் திருமணத்திற்குக் காத்திருப்பவர் என்றால் உங்களுக்கு ஏற்ற வாழ்க்கை துணை கிடைக்கப் பெறுவீர்கள். வீட்டில் குழந்தைப் பிறப்பு, திருமணம் போன்ற மகிழ்ச்சி தரும் சுப காரியங்கள் நடக்கும். பெரியவர்கள் மற்றும் குழந்தைகளுடனான உறவு நிலை சிறப்பாக இருக்கும். இந்த மாதம் பண விஷயங்கள் குறித்த அவசர முடிவுகள் எதையும் நீங்கள் மேற்கொள்ள வேண்டாம். பயணம் மற்றும் வீட்டு பராமரிப்பு பணிகளுக்கான செலவுகள் ஏற்படும். தனியார் உத்தியோகத்தில் உள்ளவர்கள் உத்தியோகம் நிமித்தமாக வெளிநாடுகளுக்குச் செல்ல வேண்டியது வரும். வேலை தேடுபவர்களுக்கு இந்த மாதம் வேலை கிட்டும். தரகு தொழில் செய்பவர்கள் அதிக லாபத்தை பெறுவர். ஒற்றைத் தலைவலி மற்றும் தொண்டை வலி போன்ற சிறு சிறு பிரச்சினைகள் வந்து போகும். சமச்சீர் உணவை உண்பதன் மூலம் உங்கள் ஆரோக்கியத்தை மேம்படுத்திக் கொள்ள முடியும். போட்டித் தேர்வு எழுதும் மாணவர்கள் அதில் வெற்றி காண்பார்கள்.



# கன்னி

சுப நாட்கள்:
6, 7, 8, 11, 12, 13, 14.
அசுப நாட்கள்:
1, 2, 3, 4, 5, 9, 10,

காதலர்களுக்கு இடையே நல்ல இணக்கம் நிறைந்து காணப்படும். இந்த மாதம் திருமணத்திற்குக் காத்திருப்பவர்களுக்கு மனதிற்கு பிடித்த வரன் அமையும். பொருளாதாரத்தைப் பொறுத்தவரை இந்த மாதம் உங்களுக்கு சற்றே அனுகூலமான நிலை இருக்கும். வாகன பராமரிப்பிற்கான செலவுகளை மேற்கொள்ள வேண்டியது இருக்கும். இந்த மாதம் அரசு உத்தியோகத்தை பொறுத்தவரை மந்த நிலை காணப்படும். கூட்டுத்தொழில் செய்பவர்களின் வருமானம் அதிகரிக்கும். ஏற்றுமதி சம்மந்தப்பட்ட தொழில் குறித்த முக்கிய முடிவுகளை எடுக்கும் முன்பு அதன் நன்மை தீமைகளை ஆராய்ந்து முடிவு எடுங்கள். உங்கள் ஆரோக்கியத்தில் நீங்கள் கவனம் செலுத்த வேண்டும். சிறுநீரகம் சம்மந்தப்பட்ட உடல் நல பாதிப்பு ஏற்படலாம். போதுமான நீர் உட்கொண்டு இந்த பாதிப்பில் இருந்து தப்பிக்கலாம். தாய் மற்றும் தந்தையின் உடல் நலனில் அக்கறை தேவை. மாணவர்கள் கவனச் சிதறலுக்கு ஆட்படுவார்கள். படிப்பில் கவனம் தேவை.



# துலாம்

சுப நாட்கள்:
16, 18, 19, 21, 22, 26, 27, 28.
அசுப நாட்கள்:
15, 17, 20, 24, 29, 30.


காதல் உறவில் மனஸ்தாபங்கள் உண்டாகலாம். கவனம் தேவை. திருமணமான தம்பதிகள் இடையே சுமுகமான உறவு இருக்கும். இந்த மாதம் ஆன்மீகத்தில் ஈடுபாடு அதிகரித்து காணப்படும். குடும்பத்துடன் ஆன்மீக சுற்றுலா சென்று வருவீர்கள். இந்த மாதம் பங்கு வர்த்தகத்தில் ஏற்றம் கிடைக்கும். வீடு மற்றும் வண்டி பராமரித்தல் பேன்ற வகையில் செலவீனங்கள் ஏற்படும். தனியார் துறையில் பணிபுரிபவர்களின் பணியிடத்தில் புதிய பொறுப்புக்கள் வழங்கப்படும். சுயதொழிலில் அதிக லாபத்தையும் நல்ல முன்னேற்றத்தையும் எதிர்பார்க்கலாம். கூட்டுத்தொழிலில் அதிக லாபங்களை எதிர்பார்க்க முடியாது. பங்கு வர்த்தகத் துறையில் தொழில் செய்பவர்களுக்கு தொழிலில் ஏற்றம் கிடைக்கும். வயதானவர்களின் உடல் நிலையில் சிறிது கவனம் தேவை. மாணவர்கள் பல புதிய விஷயங்களை கற்றுக் கொண்டு படிப்பில் தேர்ச்சி பெறுவார்கள்.



# விருச்சிகம்

சுப நாட்கள்:
11, 12, 13, 14, 19, 21, 22, 23.
அசுப நாட்கள்:
9, 10, 15, 17, 20, 24.

விட்டுக் கொடுத்து செல்வதன் மூலம் காதல் உறவில் நெருக்கம் அதிகரிக்கும். திருமணமான தம்பதிகளுக்கு இடையே ஒற்றுமை அதிகாரிக்கும். உங்கள் பொருளாதார நிலை ஏற்றம் காணும் வகையில் கிரக நிலைகள் உள்ளன. பிட் காயின் மற்றும் பங்கு வர்த்தக நிறுவனங்களில் முதலீடு செய்வதற்கும் லாபங்களை ஈட்டுவதற்கும் இந்த மாதம் ஏற்றதாக உள்ளது. இந்த மாதம் பயணங்களுக்காக அதிக செலவுகள் செய்வீர்கள். உத்தியோகத்தை பொறுத்தவரை உரித்த நேரத்தில் பணிகளை முடிக்க முடியாமல் போகலாம். சுயதொழில் செய்பவர்கள் தங்கள் வருமானத்தை உயர்த்திக் கொள்ள புதிய தொழிலைத் தொடங்கும் வாய்ப்புகள் உள்ளது. உங்களுக்கு ஆயத்த ஆடை சம்மந்தப்பட்ட தொழில் லாபத்தை அளிக்கும். இந்த மாதம் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். மாணவர்கள் படிப்பில் விடா முயற்சிகளை மேற்கொள்வதன் மூலம் படிப்பில் நல்ல முன்னேற்றம் ஏற்படும்.



# தனுசு

சுப நாட்கள்:
13, 14, 17, 18, 19, 21, 22, 23.
அசுப நாட்கள்:
11, 12, 15, 16, 20.

காதல் உறவில் இருப்பவர்களுக்கு கருத்து வேறுபாடுகள் உண்டாக வாய்ப்புகள் உள்ளன. கணவன் மனைவி உறவில் ஒற்றுமை அதிகாரிக்கும். வீட்டில் உள்ள பெரியவர்களிடம் கருத்து மோதல்கள் வரலாம். வாக்கில் கவனம் தேவை. தாயாருக்கு உடல் நல குறைவு ஏற்படலாம். கவனம் தேவை. நிதிநிலையைப் பொறுத்தவரை சாதகமான நிலை காணப்படும். தங்களின் பொருளாதார நிலையும் சிறப்பாக இருக்கும். வெளிநாடுகளில் வேலை தேடுபவர்களுக்கு இந்த மாதம் சாதகமாக இருக்கும். அரசாங்கத் துறையில் வேலை தேடுபவர்களுக்கு இந்த மாதம் வேலை கிட்டும். சுய தொழிலில் உங்களுக்கு தன ரீதியான நல்ல முன்னேற்றம் ஏற்படும். சிறுநீரகம் சம்மந்தப்பட்ட உடல் நல பாதிப்பு ஏற்படலாம். தாய் மற்றும் தந்தையின் உடல்நலனில் அக்கறை தேவை. மாணவர்கள் தேர்வுகளில் வெற்றி பெற்று முதல் நிலையை பிடிப்பார்கள்.



## மகரம்

சுப நாட்கள்:
7, 8, 18, 19, 25, 26, 27, 28
அசுப நாட்கள்:
5, 10, 13, 14, 15, 29, 30.

காதல் உறவில் உள்ளவர்கள் பேசும் வார்த்தைகளில் கவனமாக இருக்க வேண்டும். கடுமையான வார்த்தைகளைத் தவிர்க்க வேண்டும். திருமணத்திற்குக் காத்திருக்கும் உங்களுக்கு ஏற்ற வாழ்க்கை துணை கிடைக்கப் பெறுவீர்கள். தாய், தந்தை மற்றும் குழந்தைகள் உடனான உறவு நிலை மேம்படும். மியூச்சுவல் ஃபண்ட் சம்மந்தப்பட்ட முதலீடுகள் மூலமாக தன வருவாய் அதிகரிக்கும். பணியிடத்தில் சுமூகமான நிலை காணப்படும். தனியார் உத்தியோகத்தில் பணியில் உள்ளவர்களுக்கு உத்தியோகத்தில் பதவி உயர்வு ஏற்படும். கடன் சார்ந்த பிரச்சனைகள் காரணமாக மனச்சோர்வு மற்றும் தூக்கமின்மை பிரச்சனை ஏற்படலாம். மனச்சோர்வு மற்றும் தூக்கமின்மை பிரச்சனைக்கு தியானம் நன்மை பயக்கும். மாணவர்கள் படிப்பிற்கென நேரம் ஒதுக்கிப் படித்தால் வெற்றிகளைக் காண முடியும்.



## கும்பம்

சுப நாட்கள்:
16, 17, 18, 19, 21.
அசுப நாட்கள்:
20, 23, 24, 29, 30.

உங்கள் உடன் பிறந்தவர்களுடன் பண விஷயங்களில் சில பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்புகள் உள்ளது. எனவே வாக்குவாதத்தைத் தவிர்ப்பது நல்லது. தாயாருக்கு மருத்துவ செலவுகள் ஏற்படலாம். அக்கறை தேவை. தங்களின் பணப்புழக்கம் அதிகரிக்கும். உங்கள் சேமிப்பைக் கொண்டு உங்கள் செலவுகளைச் சமாளித்துக் கொள்வீர்கள். பணியிடச் சூழல் உங்களுக்கு அனுகூலமாக இருக்கும். கூட்டுத் தொழிலில் இருப்பவர்கள் அதிக லாபத்தை எதிர்பார்க்கலாம். வியாபாரத்தில் உள்ளவர்களுக்கு நல்ல தன லாபம் கிடைக்கும். தொழில் தொடர்பான வெளிநாட்டுப் பயணங்கள் லாபத்தைக் கொடுக்கும். வயிற்றுப்புண் மற்றும் அஜீரணக் கோளாறு போன்ற பாதிப்புகள் ஏற்படலாம். மாணவர்களின் கிரகிக்கும் திறன் அதிகரிக்கும்.



## மீனம்

சுப நாட்கள்:
3, 4, 6, 7, 8, 25.
அசுப நாட்கள்:
9, 10, 24, 29, 30.

உங்கள் வாழ்க்கைத்துணையுடன் அன்னியோன்யம் கூடும். நண்பர்கள் மற்றும் குடும்ப உறுப்பினர்களின் ஆதரவு கிடைக்கப் பெறுவீர்கள். எழுத்துத் துறை, நடிப்புத் துறை மற்றும் கலைத் துறையில் இருப்பவர்கள் சிறந்த வகையில் வருமானம் ஈட்டுவார்கள். இந்த மாதம் வீடு, வாகனம் மற்றும் நிலம் போன்றவற்றில் முதலீடு செய்வது நன்மை பயக்கும். வெளிநாட்டுத் தொடர்புடைய உணவு ஏற்றுமதி தொழில் செய்பவர்கள் இந்த மாதம் அதிக பண வரவைக் காண்பார்கள். சுயதொழிலில் இந்த மாதம் உங்களுக்கு சிறந்த வெற்றியை அளிக்கும். அஜீரணக் கோளாறுகள் ஏற்படும். மற்றபடி பெரிய அளவிலான பாதிப்புகள் ஏற்படாது. மாணவர்கள் கல்வியில் நல்ல முன்னேற்றம் காண்பார்கள்.